Price 2 As 27th SEPTEMBER 1936 Regd. No. 2514

VOL. 7 NO. 35

# ஸ்ரீ சுதேசமித்திரன்

# SWADESAMITRAN
## ILLUSTRATED WEEKLY



திருவாரூர் கமலாலயமும் தியாகராஜ ஸ்வாமி கோவிலும்

## வாரப்பதிப்பு







ஆரோக்கியத்தின்
முக்கிய ஆதாரம்

வுட்வர்ட்ஸ்
கிரைப் வாடர்

இது குழந்தைகளை
நன்கு பாதுகாக்கின்றது

WOODWARD'S
GRIPE WATER

W. WOODWARD LTD., LONDON, ENGLAND

# ம் - பெய்ஸ்பூரில் ஏற்பாடுகள்

காங்கிரஸ் நகர் அமைக்கப்படும் இடம் விவசாயத்திற்காக ஒதுக்கி வைக்கப்பட்டதாகும் இதை வேறு எதற்கும் உபயோகிக்கக் கூடாது என்பதுபற்றி ஒரு தகராறு இருந்தது. இப்பொழுது ஜில்லா கலெக்டர் அவ்விடத்தைக் காங்கிரஸ் உபயோகித்துக் கொள்ள அநுமதி கொடுத்துவிட்டார். உபசரணைக் கமிட்டித் தலைவர் ஸ்ரீமான் சங்கரராவ்தேவ் காங்கிரஸ் வெற்றிகரமாக விருப்பதற்குப் பல வழிகளிலும் முயற்சி செய்து வருகிறார். காங்கிரஸ் நடைபெறுவதற்காக அங்கு நடந்து வரும் ஏற்பாடுகளைக் காட்டும் சில படங்களை இங்கு பிரசுரித்திருக்கிறோம்.



பெய்ஸ்பூர் கிராமவாசிகள் உற்சாகம்



க்கமிட்டித்தலைவர் பரிசீலனை
கிறார்.



உபசரணைக்கமிட்டித்தலைவர் ஸ்ரீமான் சங்கரராவ்தேவ் காங்கிரஸ் உபயோகத்திற்காக பயிரிடப்பட்டிருக்கும் தானிய வயல்களைப்பார்வையிட்டுக் கொண்டிருக்கிறார்.



எதியோபியாவில் இத்தாலியர், அபிஸீனிய பாஷையில் பத்திரிகைகள் ஆரம்பித்திருக்கின்றனர். ஒரு அபிஸீனியப் போர் வீரன் பத்திரிகையைப்படித்துக்கொண்டிருக்கிறான்.



ஸ்பெயின் கலவரத்தில் காயமுண்டவர்களுக்குச் சிகித்ஸை செய்ய செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் சென்றுகொண்டிருக்கும் காட்சி.




சமீபத்தில் லண்டனில் நடைபெற்ற ரேடியோ ஒலிம்பியா காட்சி.




## புதுமாதிரி நிட்டிங் லேஸ்

(ஸ்ரீமதி ஆ. ராஜசூடாமணி அம்மாள் எழுதியது.)

[காபிரைட்]

தொடக்கத்தையல் 17 போட்டுக்கொள்ளவும்.

முதல் வரிசை:—2 முறை மாறிமாறித் தைக்கவும். ஊசிமேல் நூல், 1 பரல் உள்ளடக்கம், நிட் 1 ஊசிமேல் நூல், 1 பரல் உள்ளடக்கம், நிட் 6, 2 முறை மாறி மாறித் தைக்கவும், ஊசிமேல் நூல் 1 பரல் உள்ளடக்கம்.

2-ம் வரிசை:—2 முறை மாறிமாறித் தைக்கவும். ஊசிமேல் நூல் 1 பரல் உள்ளடக்கம். நிட் 9, 2 முறை மாறி மாறித் தைக்கவும். ஊசிமேல் நூல் 1 பரல் உள்ளடக்கம்.

3-ம் வரிசை:—2 முறை மாறிமாறித் தைக்கவும். ஊசிமேல் நூல். 1 பரல் உள்ளடக்கம். நிட் 2, ஊசிமேல் நூல் 1 பரல் உள்ளடக்கம். நிட் 3, ஊசிமேல் நூல் நிட் 2, 2 முறை மாறிமாறித் தைக்கவும் ஊசிமேல் நூல், 1 பரல் உள்ளடக்கம்.

4-ம் வரிசை:–2 முறை மாறி மாறித் தைக்கவும் ஊசிமேல் நூல், 1 பரல் உள்ளடக்கம் நிட் 10, 2 முறை மாறி மாறித் தைக்கவும். ஊசிமேல் நூல், 1 பரல் உள்ளடக்கம்.

5-ம் வரிசை:–2 முறை மாறி மாறித் தைக்கவும். ஊசிமேல் நூல், 1 பரல் உள்ளடக்கம், நிட் 3, ஊசிமேல் நூல் 1 பரல் உள்ளடக்கம், நிட் 3, ஊசிமேல் நூல் நிட் 2, 2 முறை மாறி மாறித் தைக்கவும். ஊசிமேல் நூல் 1 பரல் உள்ளடக்கம்.

6-ம் வரிசை:–2 முறை மாறி மாறித் தைக்கவும். ஊசிமேல் நூல் 1 பரல் உள்ளடக்கம், நிட் 11 2 முறை தைக்கவும், ஊசிமேல் நூல் 1 பரல் உள்ளடக்கம்

7-ம் வரிசை:–2 முறை மாறி மாறித் தைக்கவும். ஊசிமேல் நூல், 1 பரல் உள்ளடக்கம், நிட் 4 ஊசிமேல் நூல் 1 பரல் உள்ளடக்கம், நிட் 3 ஊசிமேல் நூல் நிட் 2, 2 முறை மாறி மாறித் தைக்கவும். ஊசிமேல் நூல் 1 பரல் உள்ளடக்கம்.

8-ம் வரிசை:—2 முறை மாறி மாறித் தைக்கவும். ஊசிமேல் நூல் 1 பரல் உள்ளடக்கம், நிட் 12, 12 முறை மாறி மாறித் தைக்கவும். ஊசிமேல் நூல் 1 பரல் உள்ளடக்கம்



9-ம் வரிசை:—2 முறை மாறி மாறித் தைக்கவும்—ஊசிமேல் நூல் 1 பரல் உள்ளடக்கம், நிட் 5, ஊசிமேல் நூல் 1 பரல் உள்ளடக்கம், நிட் 3, ஊசிமேல் நூல் நிட் 2, 2 முறை மாறி மாறித் தைக்கவும். ஊசிமேல் நூல் 1 பரல் உள்ளடக்கம்.

10-ம் வரிசை:—2 முறை மாறி மாறித் தைக்கவும். ஊசிமேல் 1 பரல் உள்ளடக்கம், நிட் 13, 2 முறை மாறி மாறித் தைக்கவும். ஊசிமேல் நூல் 1 பரல் உள்ளடக்கம்

11-ம் வரிசை:—2 முறை மாறி மாறித் தைக்கவும். ஊசிமேல் நூல் 1 பரல் உள்ளடக்கம் நிட் 6 ஊசிமேல் நூல் 1 பரல் உள்ளடக்கம் நிட் 3, ஊசிமேல் நூல் நிட் 2, 2 முறை மாறி மாறித் தைக்கவும். ஊசிமேல் நூல் 1 பரல் உள்ளடக்கம்,

12-ம் வரிசை:—2 முறை மாறி மாறித் தைக்கவும் ஊசிமேல் நூல் 1 பரல் உள்ளடக்கம் நிட் 14, 2 முறை மாறி மாறித் தைக்கவும், ஊசிமேல் நூல் 1 பரல் உள்ளடக்கம்.

13-ம் வரிசை:— 2 முறை தைக்கவும். ஊசிமேல் நூல் 1 பரல் உள்ளடக்கம் நிட் 7, ஊசி மேல் நூல் 1 பரல் உள்ளடக்கம், நிட் 5, 2 முறை மாறி மாறித் தைக்கவும் ஊசிமேல் நூல் 1 பரல் உள்ளடக்கம்.

14-ம் வரிசை:— 2 முறை தைக்கவும். ஊசிமேல் நூல் 1 பரல் உள்ளடக்கம், நிட் 14, 2 முறை மாறி மாறித் தைக்கவும் ஊசிமேல் நூல் 1 பரல் உள்ளடக்கம்.

15-ம் வரிசை:—2 முறை மாறி மாறித் தைக்கவும் ஊசிமேல் நூல் 1 பரல் உள்ளடக்கம், நிட் 8. ஊசி மேல் நூல் 3 தையலைச் சேர்த்து 2 பரல் உள்ளக்கம்,. 2 முறை மாறி மாறித் தைக்கவும். ஊசி மேல் நூல் 1 பரல் உள்ளடக்கம்.

16-ம் வரிசை.—3 தையல்களை முடித்துக்கொள்ளவும். நிட், ஊசி மேல் நூல் நிட், 10 2 முறை மாறிமாறித் தைக்கவும். ஊசி மேல் நூல் 1 பரல் உள்ளடக்கம்.

1 வரிசையிலிருந்து மாறி மாறித் தைக்கவும்.

யானைப்படை

யானைப்படைபோல் சில வருஷங்களுக்கு மேல்பட்டிருக்கும் எல்லா விதமான மேக காரகப் படைகளையும் ஓர் நிமிஷத்தில் ஆயிரக்கணக்கான புழுக்களைக் கொன்று வேருடன் நாசம் செய்யும்.

ரிங்கு வர்மிஸைட்
பெரிய சீசா ரூ. 1.
சிறிய சீசா 9 அ.ணா

ஆங்கில ஆயுர்வேத பார்மசி,
290, தங்கசாலைத்தெரு, மதராஸ்.




நஞ்சன்கூடு சத்வைத்யசாலை
ச்யாவனப்ராச
சுவாச டானிக்
யுனைடெட் கன்ஸர்ன், பந்தர்தெரு, மதருஸ்
(குழந்தைகளுக்கு நம்பிக்கையான மருந்துகள் இடம்.)

"ஜனனை க்ரீம்"

அற்புதமான சாஸ்திரீகசரக்கு; அநாவசியமாகக் கருதப்படும் ரோமங்களை நீக்க உயர்குடும்பங்களில் கனவான்களாலும் சீமாட்டிகளாலும், சினிமா நடிகைகளாலும் உபயோகிக்கப்படுவது. பரீட்சித்துப் பாருங்கள்.

கிடைக்குமிடம்:—
SHIVLAL & CO.,
Princess Street, Bombay 2.





வீதிவிடங்கன் ஓட்டிய தேர்.

# திருவாரூர்

—:[o]:—

## இந்திர பூஜை

—:[○]:—



மநுநீதிச் சோழன் தன் மகனைத் தேர்க் காலில் இட்டதைக் காட்டும் படம்.

"திருவாரூர் பிறந்தார் மீண்டும் பிறப்பதில்லை" 'திருவாரூர் பிறந்தார் அனைவர்க்கும் அடியேன்' எனத் திருத்தொண்டத் தொகையில் ஸ்ரீமத் சுந்தரமூர்த்தி சுவாமிகள் சொல்லியதற்கேற்பத் திருவாரூர் பிறந்த உயிர் கொன்றுறுதலினால் மநுநீதிச் சோழன் தன் அருமருந்தன்ன மகன் என்பதையும் பாராமல் கன்றினை இழந்த ஆவுற்ற துயரை நீக்க தன் மகன் மருமத்துத் தேராழி உற ஊர்ந்தான். இத்தகைய சிறப்பினை வாய்ந்த திருவாரூரில் வருஷத்துக்கு ஒருமுறை நடக்கும் இந்திர பூஜையின் விவரத்தைக் கீழே குறிக்கிறோம்.

தேவர்களுக்கு அசுரர்களால் இடுக்கண் நேர்ந்தபோது பூவுலகில் அரசுசெலுத்திய முசுகுந்தராஜனின் உதவியை இந்திரன் வேண்ட அவர் அசுரரை எதிர்த்து வெகு நாள் போர்செய்து அவர்களை ஒழித்தார். அப்பொழுது இந்திரன் பலவகையில் அவருக்கு உபகாரஞ்செய்து தன்னுடைய நினைப்பின் அறிகுறியாக ஏதேனும் ஒரு பொருளைக் கேட்டு வாங்கிக் கொள்ளவேண்டுமென்று பிரார்த்தித்தான். "தேவர்களுக்கரசே, யானும் அவ்வித எண்ணம் கொண்டுளேன். தேவவுலகில்உன் அருமையான பொருள் ஒன்றைக்கேட்டுப் பெறவேண்டுமென்று நினைத்திருந்தேன். நாளைத்தினம் அஃதென்னவென்பதைத் தெரிவிக்கிறேன்" என்று முசுகுந்தன் சொல்லி விடைபெற்றுக்கொண்டு தனக்கமர்த்தப்பட்டிருந்த மாளிகையில் மஞ்சத்தில் படுத்துக்கொண்டு எப்பொருளைக் கேட்கலாமென்று சிந்தித்தவண்ணமிருந்தான். அப்பொழுது கோடி சூரியப் பிரகாசம் அவன் கண் முன் தோன்றியது. சோமாஸ்கந்த உருவம் அவன் கண்களில் பட்டது. முசுகுந்தன் திகைத்து அஞ்சலி செய்துகொண்டு நிற்க, "அரசே! ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு இப்பூவுகில் இடங்கொள்ள நாம் விரும்பியுள்ளோம். என்னை உனக்குக் கொடுக்கும்படி இந்திரனைக் கேட்பாயாக" என்று சொல்லித் தியாகராஜப் பெருமான் மறைந்தார்.

மறுநாள் பொழுது விடிந்ததும் முசுகுந்தன் எழுந்து, நித்திய நைமித்திய கர்மங்களை முடித்துக்கொண்டு விபூதி, ருத்திராக்ஷம் துலங்க, இந்திரன் அவைக்குச் சென்று, 'வாசர்க்கரசே! யான் எதைக் கேட்பினும் தருவதாகச் சொன்னீர்கள். உங்களுடைய பூஜையாகிய தியாகேசனைக் கொடுத்தருள வேண்டுமென்று வணக்கத்துடன் கேட்டுக்கொண்டான். இடிவிழுந்தாற்போல் இந்திரன் நடுங்கினான். செய்வகையறியான் எதைக் கேட்பினும் தருவதாகச் சொல்லிவிட்டான். அச்சொற்படி நடக்கவும்வேண்டும், தியாகேசனைப் பிரியாமலும் இருக்கவேண்டுமென்று மனத்தினுள் நினைத்துக்கொண்டு தான் போகும்போது எடுத்துக் கொள்ளலாமென்று சொல்லி முசுகுந்தனை அவனது ஜாகைக்கு அனுப்பி, தேவர் ஸ்தபதியை அழைத்து தியாகராஜப் பெருமான்போல் 6 விக்கிரகங்களைச் செய்து தரும்படிக் கட்டளையிட்டான். அன்று இரவில் முசுகுந்தன் கனவில் பெருமான் தோன்றி, "அரசே! 7 விக்கிரகங்களிலிருந்து ஒன்றை எடுத்துக்கொள்ளும்படிச் சொல்வான். நமது உடலில் மாத்திரம் செங்கழுநீர் வாசனை வீசும். அதை அறிந்துகொள்" என்று சொல்லி மறைந்தார்.

மறுநாள் இந்திரன் முசுகுந்தனைத் தன் பூஜை அறைக்குஅழைத்துக்கொண்டுபோய் எழு விக்கிரகங்களில் ஒன்றைத் தாங்கள் எடுத்துக்கொள்ளலாமென்று கூற, செங்கழுநீர் வாசனை வீசிய விக்கிரகத்தை முசுகுந்தன் காட்டி, "இத்திவ்விய மூர்த்தியை எடுத்துக் கொள்ளுகிறேன்" என்றான். அதுகேட்ட இந்திரன் தாயை இழந்த கன்றைப்போல் அலறி, "மதியினத்தால் இக்கதியை அடைந்தேன். எல்லா முகூர்த்தங்களையும் பூவுலகிற்கொண்டுபோய் அங்கு பிரதிஷ்டை செய்வாய்" என்று சொல்லி, "என்றினி காண்பேன்" என்றலறினான். அப்பொழுது பெருமான், "ஒவ்வொரு புரட்டாசி மாதப் பௌர்ணமியன்று நீ பூவுலகிற்கு வந்து நம்மைப் பூஜிப்பாய்" என்று அனுக்கிரகித்தார். அப்படியே இன்றும் நடந்து வருகிறது. இந்திர பூஜையின் பொருட்டுசந்நிதானம் விசேஷமாகஅலங்கரிக்கப்பட்டு பூஜாத்திரவியங்கள் சேகரித்துவைக்கப்படும். இந்திரன் அன்றிரவு ஆரூர் இறைவனைப் பூஜித்துப் போவதாகப் பெரியோர் கூறுகின்றனர்.

இன்னும் திருவாரூரில், 'ஆனைஏறும் பெரும் பறையன்' என்பதாக ஒரு குடும்பத்தினர் இருக்கின்றனர். பங்குனி உற்சவத்திற்காகக்கொடியேறுமுன் "ஆனைஏறும் பெரும்பறையனுக்கே" கோவிலாரால் கையில் கங்கணம் கட்டப்படுகிறது. தியாகேசன் கோவிலுக்கு வெளியில் ரதோற்சவம் காணும்பொழுது, வெள்ளைப் பூச்சக்கிரக்குடை நிழலில் வழிதோன்றலாகிய இவர் போவதை எல்லோரும் காணலாம். தியாகேசனுடையஆத்ம பூஜை என்பதாக ஒரு மரகத லிங்கம்கோவிலுள் ஒருபெட்டியில் வைக்கப்பட்டிருக்கிறது. பிரதிதினமும் தியாகேசனுக்குப் பூஜை செய்கிறவர்கள் அந்த விடங்கருக்கு (உளி படாதது) பூஜை செய்வார்கள். மற்ற 6 த்யாக முகூர்த்தங்கள் திருநள்ளாறு, திருக்கரையூர் திருவாவடுதுறை, திருவொற்றியூர், திருவான்மியூர், திருநாகை என்ற க்ஷேத்திரங்களில் ஸ்தாபிக்கப்பட்டனவென்று ஆன்றோர் கூறுவர். திருத்தருப்பூண்டியிலும் தியாகேச விக்கிரகம் உளது. ஆனால் அது சப்தவிடங்க க்ஷேத்திரங்களில் ஒன்றல்ல என்பர். இன்னும் திருவாரூரில் தியாகேசனுக்கு ஒவ்வொரு நாளும் செங்கழுநீர் பூமாலை சாத்தப்படுகிறது. தீபாராதனை முதலிய காலங்களில் சுத்தமேளம் என்ற தெய்வத்தன்மை பொருந்திய வாத்தியம் தவிர வேறு எதுவும் வாசிக்கப்படுவதில்லை. தியாகேசனுக்குப் பூஜை செய்வோர் ஆதி சைவ குருக்கள்மார்களல்ல. வைதீகப் பாரம்பரையினர்.



ஹாஸ்யப்பகுதி

# நாய் வால்

"பூரி"



"நல்ல வேளை அது வாலுடன் தப்பித்தது தம்பிரான் புண்ணியமாயிற்று."

பங்களூரிலிருந்து தனது மாமன் சதாசிவம் வரப்போகிருரென்று கேள்விப்பட்ட போது மணியன் அடைந்த சந்தோஷத்துக் களவில்லை. ஏனென்ருல் அவர் வரும்போது அவன் கேட்டிருந்த அச்சு நாய்க் குட்டியையும் கொண்டுவருவதாக எழுதியிருந்தார்.

சதாசிவம் வந்துவிட்டார்; நாய்க்குட்டியும் வந்து சேர்ந்தது. ஆனல் மணிமட்டும் சந்தோஷமாயில்லை. அவன் தன் சிநேகிதன் ராஜு வைத்திருந்த மாதிரி சுருட்டை வாலுள்ள நாய் வேண்டுமென்று கேட்டிருந்தான். சதாசிவம் கொண்டுவந்திருந்த நாய்க்குச் சுருட்டை வாலில்லை; என்? அதற்கு வாலேயில்லை. அதன் வால் போன மர்மத்தைப்பற்றிச் சதாசிவம் அன்று மத்தியானம் விவரமாய்க் கூறினர்:—

நான் இரண்டு மெத்தையுள்ள ஒரு பங்களாவில் குடியிருக்கிறேன். முதல் மெத்தையில் நானும், கீழே ராகவன் என்பவனும் குடியிருந்து வருகிருேம். இரண்டு மாதத்துக்கு முன்பு நடுவில் காலியாயிருந்த இடத்தில் வேதாசலம் என்பவர் வந்து குடியேறினர்.

ராகவன் ஒரு பத்திரிகாசிரியன். அவன் பகலெல்லாம் ஊர் சுற்றுவான். இரவில் உட்கார்ந்து தான் கதைகள் முதலியன எழுதுவான். ஒருநாள் இரவு பத்துமணிக்கு எழுந்திருந்து ஒரு கதை எழுதுவதைப்பற்றி யோசனை செய்யலானன். அவன் கதா பாத்திரங்களைச் சிருஷ்டித்துவிட்டான். கதா நாயகியும் அவள் புருஷனும் ஏதோ தகராறு செய்யும் கட்டத்தைக் கற்பனை செய்து கொண்டிருந்த சமயம் ஹார்மோனிய சப்தம் கேட்டுத் திடுக்கிட்டான். மறு நிமிடம் அவன் யோசனைகள் எல்லாம் இருந்த விடம் தெரியாமல் பறந்தன. ஹார்மோனிய சப்தம் பலத்தது. சிறிது நேரத்துக்கெல்லாம் ஒரு பெண் சுருதி கூட்டிப் பாடும் சப்தம் கேட்டது.

ராகவனுக்குச் சுமாராகச் சங்கீத ஞானமுண்டு என்று சொல்லலாம். ஆனல் அவனுக்கு அந்தப் பெண் பாடிய "சங்கடரமணு" பாட்டை அவன் முன்பின் கேட்டதில்லை. அது பாடப்பட்ட ராகமும் அவனுக்கு என்னவென்று புரியவில்லை. அது என்ன ராகமாயிருக்கலாமென்று அவன் சிந்தித்துக் கொண்டிருந்த போது ஹார்மோனியச் சப்தமும் பாட்டுச் சப்தமும் நின்றன. பிறகு ஐந்து நிமிஷம் ஒரே மௌனமாயிருந்தது. ராகவன் தப்பித்தோம் என்று மறுபடியும் தன் கதையைப்பற்றி யோசனை செய்ய ஆரம்பித்தான். ஆனல் ஹார்மோனியச் சப்தமும் மறுபடியும் கிளம்பிற்று. மேலேயிருந்த பெண்மணி "சங்கடரமணு" என்று மறுபடியும் ஆரம்பித்துப் பாடலானள்; ஆனல் இப்பொழுதுராகம் சிறிது மாறுபட்டிருந்தது. ராகவன் மேலே சிந்தனை செய்ய முடியாமல் படுத்துத் தூங்க முயன்ருன். பெண்மணியும் தான் பாடிய பாட்டையே ஐந்து ஆறு முறைத் திரும்பத் திரும்பப் பாடிப் பார்த்துவிட்டு நிறுத்தினள்.

மறு நாளும் இதேமாதிரி நடந்தது. பாட்டுப் பாடும் மங்கைக்கும் ராகத்துக்கும் பெரிய யுத்தம் நடந்துகொண்டிருந்தது. மங்கை ராகத்தை அதனிஷ்டப்படிப் போகவிடாமல் தனக்குத் தோன்றியபடியெல்லாம் பாடிவந்தாள். அவள் புதுமாதிரியான ராகம் எதாவது கண்டு பிடிக்க முயற்சிக்கிருளோ என்றுகூட ராகவன் எண்ணினன்.

தொடர்ந்து பத்து தினங்கள்வரை இரவு இந்த சங்கீத சம்ஹாரம் நடந்து வரவே ராகவனல் தாங்க முடியவில்லை. பதினோராம் நாள் இரவு ஹார்மோனியத்தை உடைத்துப் போட்டுவிடுவதென்று ஆத்திரத்துடன் மாடிப் படியிலேறிச் சென்று வேதாசலத்தின் அறைக் கதவைத் தட்டினன். அவர் வந்து கதவைத் திறந்து

"மாடர்ன் டயமண்ட்ஸ்"

வில்லிங்டன் சீமாட்டியால் பாராட்டப்பட்டவை.
ஐரோப்பியா, இந்தியா வைரவியாபாரிகளால் போற்றப்பெற்றவை.

இழைக்கப்பட்ட ஆபரணங்கள் அருமையான அமைப்பு,
நேர்த்தியும், அழகும் மிகுந்தவை.

ஒரு முறை பரீக்ஷித்து உண்மை அறியுங்கள்.

வி. வி. ஆச்சார்யுலு & ஸன்,

நூறு வருஷ பிரக்யாதி பெற்ற நகை வியாபாரிகள்,

S—63, போன்னப்ப செட்டி தெரு, பார்க் டவுன், மதராஸ்.

1 & 2 மேலக்கோபுர வீதி

மதுரையில்

நரசுஸ்

சுத்தமான

காபித்தூள், நீலகிரி காப்பிக்கொட்டை

. தேயிலை

முதலியவைகளை விற்பனை செய்ய
12-வது கிளை ஆபீஸ் திறக்கப்பட்டிருக்கிறது.

உயர்ந்த சரக்கு! நயமான விலை !!

நாகரீக மின்சார இயந்திரங்களுடன் அமைக்கப்பட்டிருக்கிறது.

நரசுஸ் மான்யுபாக்சரிங் கம்பெனி,

மதுரை, பிராஞ்சு:

H. O. SALEM.

தென்னிந்தியாவெங்கும் கிளை ஆபீஸ்கள்:—

"என்ன விசேஷம்?" என்று அன்புடன் விசாரித்ததும் அவன் தைரியமெல்லாம் பறந்துவிட்டது. "கடியாரம் நின்றுவிட்டது; மணி என்ன ஆகிறது" என்று விசாரித்துவிட்டுத் தன்னிடத்திற்குத் திரும்பினான். போகும்போதுமட்டும் உள்ளே ஹார்மோனியத்தின் பக்கத்தில் உட்கார்ந்து பாடிக்கொண்டிருந்த பெண்ணைக் கோபமாகப் பார்த்துவிட்டுச் சென்றான். அப்பொழுது அவன் கண்ணில் கொலைக் குறித் தோன்றிற்று.

வேதாசலம் அந்த வீட்டிற்கு வந்து ஒரு மாதமாகியும் ராகவன் அவரை அன்று இரவுதான் முதன் முதல் சந்தித்தான். இதற்குப் பிறகு இருவரும் அடிக்கடி சந்தித்துப் பழகலானார்கள்.

வேதாசலத்தின் பெண் வழக்கம்போல் ஒவ்வொரு நாள் இராத்திரியும் அந்தப் பழைய பாட்டையே திருப்பித் திருப்பிப் புதுப்புது விதமாகப் பாடிக்கொண்டு வந்தாள். ராகவன் கதைகள் எழுதுவதை அடியோடு விட்டுவிட்டான். அந்தப் பெண்ணின் பாட்டைக் கேட்காமல் தப்பினால் போதுமென்று அவனுக்கு ஆகிவிட்டது.

ஒரு நாள் அவன் வேதாசலத்துடன் பேசிக்கொண்டிருந்தபோது "ஆமாம்! உங்கள் பெண்ணுக்கு "சங்கடரமணா" என்ற பாட்டு ரொம்பப் பிடிக்கும்போலிருக்கிறது" என்று கேட்டான்.

"பிடிக்கிறதா? வத்ஸலா அதை வெறுக்கிறாள்" என்றார் வேதாசலம்.

"பின் ஏன் தினமும் அதையே சும்மா பாடிக்கொண்டிருக்கிறாள்."

"அவள் சங்கித பரீக்ஷைக்குப் போன வருஷம் போனாள். பரீக்ஷை தவறிப் போய்விட்டது. இந்த வருஷமாவது பாஸ் செய்யவேண்டுமென்று பிடிவாதமாயிருக்கிறாள். "சங்கடரமணா" என்ற பாட்டைப் பரீக்ஷையில் நன்றாகப் பாடிக் காண்பிக்கவேண்டுமாம். அதற்காகத்தான் இப்படி ராப்பகலாகப் பாடுகிறாள்."

"இந்த வருஷமும் பரீக்ஷை தவறிவிட்டால்" என்று ராகவன் கவலையுடன் கேட்டான்.

"அடுத்த வருஷமும் பரீக்ஷைக்குப் போவாள்" என்று வேதாசலம் கூறியதைக் கேட்டதும் அவனால் மேலே பேச முடியவில்லை.

* * *

அன்று மாலை ராகவன் சங்கிதப் பரீக்ஷைக் காரியதரிசி சாம்பமூர்த்தியுடன் பேசிக்கொண்டிருந்தான்.

"சாம்பு! நீ எனது பிராண சிநேகிதன் தானே?" என்று ராகவன் கேட்டான்"

"ஆமாம்" என்றான் சாம்பமூர்த்தி.

"அப்படியானால் நான் தெருவில் போகும்போது இரண்டு குட்டிக்கரணம் போட்டுவிட்டு வழியில் போகிறவர்கள் காதைத் திருகினால் நீ சந்தோஷப்பட மாட்டாயே?"

"அதென்ன அப்படிக் கேட்கிறாய்? உனக்குப் பைத்தியம் பிடித்தால் நான் சந்தோஷமாகப் பார்த்துக்கொண்டிருப்பேனா"?

"அப்படியானால் நான்சொல்லுகிறபடி செய். இந்த வருஷம் சங்கிதப் பரீக்ஷைக்கு "சங்கடரமணா" பாட்டு வேண்டாம். என் அறைக்குமேலே மாடியில் குடியிருக்கிற பெண் ஒரு மாதமாக அந்தப் பாட்டைத் தினம் அரைடஜன் தரம் பாடி என் மூளை கலங்கும்படி செய்து வருகிறாள். உனக்குப் புண்ணிய முண்டு. அந்தப் பாட்டைத் தவிர வேறு எந்தப் பாட்டாவது ஏற்படுத்து" என்று ராகவன் கெஞ்சினான்.

"ராகவா! நான் இது விஷயத்தில் ஒன்றும் செய்வதற்கில்லை. அந்தப் பாட்டு சங்கீத பரீக்ஷை சபைத் தலைவரின் மைத்துனன் கவனம் செய்தது. அதை மாற்ற அவர் ஒரு நாளும் சம்மதிக்கமாட்டார்."

ராகவன் சிறிது யோசனை செய்தான். அவனுக்கு ஒரு யுக்தி தோன்றிற்று "சாம்பு, இதோபார்; பரீக்ஷை இன்னும் பத்து நாளிருக்கிறது. அவளுக்கு எப்படியாவது பாஸ் போட்டுவிடு. பரீக்ஷை தேறுவிட்டால் அவள் அடுத்தவருஷமும் பாடிப் பயிற்சி செய்துகொண்டு பரீக்ஷைக்கு ஆஜராகப் போகிறாளாம். அவள் பாடுவதை என்னால் ஒரு வருஷகாலம் கேட்டுச் சகித்துக்கொண்டிருக்க முடியாது" என்றான்.

சாம்பமூர்த்தி முதலில்தான் ஒன்றும் செய்வதற்கில்லையென்று சொல்லியபோதிலும் இறுதியில் நண்பனுக்கு உதவி செய்யச் சம்மதித்தான்.

பரீக்ஷை தினம் வந்தது. வத்ஸலை ஹார்மோனியத்தில் பாட்டைப் பாடியபோது பரீக்ஷாதிகாரிகள் "ஹார்மோனியம் கண்டுபிடித்தவன் அற்பாயுசாகத் தொலைந்திருக்கக் கூடாதா" என்று சபித்துக்கொண்டிருந்தனர். கடைசியில் சாம்பமூர்த்தியின் பெருமுயற்சியால் வத்ஸலை சங்கிதப் பரீக்ஷையில் தேறிவிட்டதாக சர்டிபிகேட் அளிக்கப்பட்டது.

* * * *

இதற்குப் பிறகு பத்துதினங்கள் வரை வத்ஸலை தனது தொண்டைக்கும் ஹார்மோனியத்துக்கும் லீவு கொடுத்திருந்தாள். ராகவனும் மனக்கவலையின்றி இரவில் கதைகள் முதலியன எழுதிவந்தான்.

ஆனால் இரண்டு வாரங்களுக்குப் பிறகு ஒருநாள் மறுபடியும் மேல் மாடியிலிருந்து ஹார்மோனிய சப்தம் கிளம்பிற்று. "சங்கடரமணா"..........என்ற பாட்டுத்தான் அப்பொழுது கொலை செய்யப்பட்டு வந்தது.

ராகவன் அந்தப் பாட்டைக் கேட்டதும் தூக்கிவாரிப் போட்டுக்கொண்டு வேதாசலத்தினிடம் சென்றான். "தங்கள் பெண்ணுக்கு பரீக்ஷை தேறிவிட்டது என்று சொன்னீர்களே?" என்று கேட்டான்.

"ஆமாம்! அவள் தேறியதைக் கண்டு எல்லாரும் ஆச்சரியப்பட்டார்கள். சங்கீதம் போதிக்கலாமென்று சர்டிபிகேட் கிடைத்திருப்பதால் அவள் இப்பொழுது வேறு சில பெண்களுக்குப் பாட்டுச் சொல்லிக்கொடுத்துவருகிறாள். முக்கியமாக "சங்கடரமணா"வைத் தான் எல்லாரும் அவளிடம் கற்றுக்கொள்ள விரும்புகிறார்கள்" என்றார்.

இதைக்கேட்டதும் ராகவன் ஒரு கூச்சல் போட்டுக்கொண்டு தெருவில் விழுந்தடித்து ஓடினான். அப்பொழுது வாசலில் நின்றுகொண்டிருந்த இந்த நாய்க்குட்டி பயந்துபோய் ஓடவே வழியில் சென்ற ஒரு பெரிய மோட்டார் வண்டியில் அகப்பட்டுக்கொண்டது. நல்ல வேளை அது வாலுடன் தப்பித்தது தம்பிரான் புண்ணியமாயிற்று.

நாய்க்கு வால் ஏன் இல்லை என்பதைப்பற்றி சதாசிவம் இவ்வாறு சொல்லி முடித்தார். ஆனால் மணி இந்தக் கதையை நம்பவில்லை. "அதெல்லாம் கிடக்கட்டும் மாமா! நாயின் வால் தப்பியது எப்படித் தம்பிரான் புண்ணியமாகும்?" என்று கேட்டான்.

சதாசிவம் இந்தக் கேள்விக்குப் பதில் சொல்வதற்காகத் தலையைச் சொரிய ஆரம்பித்தார்.


## வெற்றி கிட்டியது

என மிஸ்டர்..........22-6-36ல் பம்பாயிலிருந்து எழுதுகிறார்.

"தங்கள் "திபேத் மூலிகை"யால் தான் நான் மெட்ரிக் பரீக்ஷையில் தேறினேன்."

"திபேத் மூலிகை"யால் கீழ்க்கண்டவை சித்தியாகின்றன; லாமா யோகியின் வரப்பிரசாதம்.



வசீகரன் ஆண் பெண் இரு பாலருக்கும் இடையில் துன்பமயமான காதலை உடனே விளைவிக்கும். இதை அணிபவர் அதன் ஆச்சரிய சக்தியை விரைவில் அறிவர். விலை ரூபா 3-8-0

2. வியாபாரமும், தொழிலும்:— நிச்சயமான தொழில் விருத்தியும், இலாபமும்சித்திக்கும். விலைரூ.3-8-0

3. வியாஜ்யங்கள்:—இதன் சக்தியால் நம்பமுடியாத எவ்விதவியாஜ்யங்களும் ஜெயமாகும், விலை ரூ. 3-8-0

4. வியாதிகள்:— முடியாதெனக் கைவிடப்பட்ட சகலவித கொடிய ரோகங்களும் அடியோடு நீங்கும். விலை ரூபா 3-8-0 5. உத்தியோகம்:—வேலையில்லாத திண்டாட்டத்தில் அவதிப்படும் இளைஞருக்கு அவரவர் ஸ்திதிக்குத் தகுந்தபடி உத்தியோகம் கிடைக்கும். சம்பள உயர்வும் உத்தியோக மேன்மையும் நிச்சயம். விலை ரூ. 3-8-0 6. பரீக்ஷைகள்:- எவ்விதப் பரீக்ஷைகளிலும் நிச்சயமாய்த் தேறலாம். விலை ரூபா 3-8-0 7. சத்ருக்களை ஜெயித்தல்:—எவ்வளவு அபாயகரமான விரோதிகளும் இதை அணிபவர் முன், முழந்தாளிட்டுப் பணிவர். விலை ரூபா 3-8-0 8. கிரஹ தோஷம்:-எல்லாவிதமான கிரஹ தோஷங்களும் சாந்தியாகும். விலை ரூபா 3-8-0 9. ஆரோக்யமும், செல்வமும்:—எளிதில் சித்திக்கும். விலை ரூ. 3-8-0

அறிவிப்பு:—இந்து சாஸ்திரங்களில் நம்பிக்கை உள்ளவர்கள் மாத்திரம் தங்கள் நோக்கம் இன்னதென்பதைக் குறித்து எழுதவும். ஒவ்வொரு நோக்கத்துக்கும் தனிப்பட்டமூலிகை அவசியம். ஒரு மூலிகையின் விலை ரூபா 3-8-0. தபால் சார்ஜு வேறு. ஒரே தடவையில் 3 மூலிகைகள் வாங்கினால் தபால் சார்ஜ் உள்பட ரூ. 9-6-0.

**BIJOYA LODGE, (S.M.W.)**
**P. O. SALKIA HOWRAH.**

நஞ்சன்கூடு சத்வைத்தியசாலை
ஐ டி எல் **மகரத்வஜம்** I D L
ஆரோக்ய சஞ்சீவி
[illegible] பந்தர் தெரு, மதராஸ்
(ஒவ்வொரு கிராமத்திலும் ஸ்டாக்கிஸ்டு தேவை.)

**B.** Burma **C.** Chemical **D.** Diamond WORKS 99, Mint St Madras.

KING OF CHEMICAL DIAMONDS
எக்ஸ்ட்ரா ரகம் (ரிஜிஸ்தரானது)
**சிக்கனத்தில் சீமைக் கமல அழகு**
(அசல் வைரத்தூளினுதவியால் பட்டை பாலிஷ் தீர்க்கப்பட்டவை)
கம்மல் அல்லது தோடு செய்ய 14 கமலம்
விலை ரூபா 4—6—0
சவரன் தங்கத்தில் கட்டிய சகல நகைகளும் கிடைக்கும்
எழுதினால் காட்லாக் அனுப்பகூடும்.
பர்மா கெமிக்கல் டைமன் ஒர்க்ஸ்,
99 சௌகார்பேட்டை. மதராஸ்.

## "பாழடைந்த பாட்னு"

(16-ம் பக்கத் தொடர்ச்சி)

வரலாறுகளால் தெரிய வருகிறது. நகரத்திற்குத் தெற்கே புத்த பகவானின் அடிச்சுவட்டின் அடையாளத்தினுல் தூய்மையுற்ற ஸ்தலத்தின்மீது ஓர் பௌத்த விஹாரம் எழுப்பப்பட்டிருந்தது. அந்த அடிச்சுவடுகள் 18 அங்குல நீளமும் 6 அங்குல அகலமுமுள்ளதாக விருந்ததென்று அவர் தெரிவிக்கிறார். அவ்விஹாரத்திற்கருகே 30 முழ உயரமுள்ள ஓர் கற்றூணில் அசோக மன்னனின் சிலா லிகிதமொன்று பொறிக்கப்பட்டிருந்தது அக்கல்வெட்டில் அசோக மன்னன் தான் "இப்பிருதிவி மண்டலம் முழுவதையும் புத்த ஸங்கத்திற்கு மூன்று முறை மனமுவந்து தானமாக அளித்த பின்னர், மீண்டும் அதைத் தன்னுடைய ஆபரணங்களையும் பொக்கிஷங்களையும் கொடுத்து விலைக்கு வாங்கிக்கொண்டதாக" ப் பெருமை பாராட்டிக் கொள்கிறார்.

### யுவான்சுவாங்

கி. பி. 630 ஆம் ஆண்டிற்குச் சற்றேறக்குறைய பௌத்த மத க்ஷேத்ரங்களைத் தரிசித்து, அம்மதத்தின் புனிதமான கிரந்தங்களைச் சேகரித்துச் செல்லும் கருத்துடன், இந்தியாவுக்கு விஜயம்செய்த யுவான்சுவாங் என்னும் சீன யாத்திரிகரால், பாஹியானுல் அத்துணை பெருமையுடன் வருணிக்கப்பட்ட அசோக மன்னனின் அரண்மனையைக் காண முடியவில்லை. ஆனுல் அதன் பண்டைப் பெருமையின் நினைவாக அசனுடைய அஸ்திவாரத்தையும், சுவர்களின் சின்னங்களையுமே அவரால் காண முடிந்தது. கங்கைக் கரையை யடுத்தாப்போல், பழைய அரண்மனையிருந்த இடத்திற்கும் வடக்கே, சற்று நெருக்கமாகக்கட்டியிருந்த சுமார் 10,000 வீடுகளே மகத்தான பாடலீபுத்ரத்தின் எஞ்சிய சின்னங்களாக அவருக்குக் காட்சியளித்தன. முற்கூறிய இரண்டு சீன யாத்திரிகர்களும் அசோக மன்னனுடைய உத்திரவால் நிருமிக்கப்பட்ட, நரகத்தைபபற்றிப் பிரஸ்தாபித்திருக்கிறார்கள். அது குற்றவாளிகளைத் தண்டிப்பதற்காக உத்தேசிக்கப்பட்டதாகும். அது அரண்மனையின் வடபுறத்திலிருந்தது. அந்த இடத்தைக் குறிப்பிடுவதற்காக நூற்றுக்கணக்கான அடிகள் உயரமுள்ள பெரியதோர் கற்றூண் நிறுவப்பட்டிருந்தது ஆதியில் அந்த இடம் கடினகாவல் தண்டனையடைந்த கைதிகளுக்குச் [illegible] உத்தேசிக்

சித்திரவதை புரியுமிடமாக அதைச் செய்துவிட்டதாகவும், இவ்விஷயம் அசோக மன்னனுக்குத் தெரியாது என்றும் சொல்லப்படுகிறது. இதற்குச் சற்றுத் தெற்குப் புறமாக "சாய்வு ஸ்தூபி" யொன்று இருந்ததாகவும், அதில் புத்தர்பிரானின் சேஷங்கள் மிகுந்த பக்தியுடன் சேமித்து வைக்கப்பட்டிருந்ததாகவும் அறியக்கிடக்கிறது. பழைய அரண்மனைக்கு மேற்கில் ஓர் சிறிய குன்று உண்டு அக்குன்றில் அசோகமன்னனுடைய ராஜ குருவும் ஆசாரியருமான உபகுப்தனுடையவும், அவரைச் சேர்ந்த பல பிக்ஷுமார்களுடையவும் உபயோகத்தின் பொருட்டாகப் பற்பல குகைகள் வெட்டப்பட்டிருந்தனவாம். இந்தக் குன்றுக்கு இன்னும் தென்மேற்காகச் சேர்ந்தாப்போல் ஐந்து ஸ்தூபங்களிருந்தன. அவை யாவும் இப்பொழுது பாழடைந்து மறைந்தொழிந்தன. அசோக மன்னன் புத்த சமயத்தைத் தழுவிய சிங்காட்களுக்கெல்லாம் கட்டுவித்த குக்குடாராமத்தைப்பற்றியும், ஆமலகஸ்தூபத்தைக் குறித்தும் யுவான்சுவாங் பிரஸ்தாபித்திருக்கிறார். அவருடைய காலத்தில் பௌத்த விஹாரங்களும், ஹிந்து தேவாலயங்களும், பௌத்த ஸ்தூபங்களும் நூற்றுக்கணக்கிலிருந்தனவாயினும் இதுபோழ்து அவற்றில் இரண்டொன்றைக் கூட உருப்படியாகக் காண முடியாது.

### கர்னல் வாட்டலின் முயற்சி

1892-ம் வருட முதல் 1899-ம் ஆண்டு வரையில் கர்னல் வாட்டல் என்பவரின் மேற்பார்வையின் கீழ் பாட்னு நகரத்தைச் சுற்றிலும் தோண்டியெடுக்கும் வேலைகள் நடைபெற்று வந்தன. அவைகளின் வாயிலாக, மகத ராஜ்யத்தின் தலை நகராக விளங்கிய பாடலீ புத்ரமானது கும்ராபூர். என வழங்கும் கிராமத்திற்கு வடக்கே அரைமைல் தூரத்தில், சற்று மேட்டுப் பாங்கான நிலப்பகுதியின்மீது எழுதப்பட்டிருந்தாகத் தெரியவருகிறது மேற்கே பாங்கீ புரத்திலிருந்து கிழக்கே பாட்னு வரையில் எட்டு மைல் விஸ்தீர்ணமிருந்ததாம். அதன் வடக்கு திக்கில் கங்கா நதியும், மற்ற மூன்று புறங்களிலும் அகழியும் அதனை வளைத்


## எதிர்கால சோதிடம்.

ஒரு வருஷத்திற்கு வாரப் பலன் எழுத ரூ. 4. மாதவாரி பலன் எழுத ரூ. 2. பலன் சரியில்லாவிடில் பணம் வாபீஸ். ஜாதகம் அல்லது கடிதம்



## லக்ஸ் குளிர்ந்த ஜலத்திலேயே

### சீக்கிரமாகவும் பத்திரமாகவும் சலவை செய்கிறது

ஐந்து நிமிஷங்களே வேண்டும்.




விலையுயர்ந்த பட்டாடைகள், நுண்ணிய உடைகள் எல்லாவற்றையும் லக்ஸினுல் குளிர்ந்த ஜலத்திலேயே இப்பொழுது சலவைசெய்ய முடியும். அதன் நுரை நுட்பமான இழைகளைக் கெடுக்காமலே சலவை செயகிறது. இந்த விளம்பரத்தைக் கத்தரித்து பின் வரும் விலாசத்திற்கு அனுப்பிவைத்தால் ஒரு லக்ஸ் பாக்கெட் இனமாக அனுப்பப்படும்: லீவர் பிரதர்ஸ் (இந்தியா) லிமிடெட், த. பெ. நம்பர் 409, பம்பாய்.

லக்ஸ் கெட்ட வஸ்துக்கள் சம்மந்தப்படாதது. ஜாக்கிரதையாக சலவை செய்யவேண்டியவைகளை புத்திசாலிப் பெண்கள் லக்ஸினுல் வெளுப்பதற்கு இதுவே காரணம். மெல்லிய, சிறந்த உடைகளைச் சலவை செய்யும் முறைகளை விஸ்தரித்துள்ள 20 பக்கங்கள் கொண்ட ஒரு புத்தகம், எங்களுக்கு எழுதினுல் அனுப்பப்படும்.

1 மூன்று ஸ்பூன் லக்ஸை ஒரு காலன் தண்ணீரில் கரைக்கவும்.



2 அதன் நுரையில் உடைகளை கசக்கவும்,



3 பிறகு குளிர்ந்த ஜலத்தில் அலசவும். நீங்கள் செய்யவேண்டுவது இவ்வளவேதான்.

I-LX X 493-172

LEVER BROTHERS (INDIA) LIMITED
TAMIL



ஜகப்பிரசித்தி பெற்ற

ஆர். முகம் அண்டு கம்பெனியாரின்

## நெ. 1. மணிமார்க் பட்டணம் மூக்குத்தூளை




உபயோகியுங்கள்.

1 நெ. வீசை 1-க்கு விலை ரூ. 4 0
2 நெ. வீசை 1-க்கு விலை ரூ. 3 8

ஏஜண்டுகள் தேவை:—

விலாசம்: ஆர் முகம் அண்டு கம்பெனி, நெ. 5, ஓலடு ஜெயில் தெரு, மதராஸ்



## எது?

தமிழ் நாட்டில் குறைந்த சந்தாவில் அதிக பக்கங்களோடு வெளிவரும் தமிழ் மாதப் பத்திரிகை.

## "சித்தன்"

ஒன்றே, இனிய கதைகள், ஹாஸ்யம், உலகச் செய்தி, வைத்தியக் குறிப்பு, சினிமா விமர்சனம், சம்பாஷணை முதலியன நிறைந்தது

வருட சந்தா அணு (8) எட்டே. வெளி நாடு ரூ. 1.

கொண்டிருந்தது தென் த்திலிருந்த அகழி 200 அகலமுள்ளதாக இருந் ந. வருஷத்தின் பெரும்பாக ம் அது வற்றுவதே கிடை து. ஸோனு நதியினின்றும் ியும் கிளைக்கால் ஒன்றினல் ோரமும் அதில் ஜலம் நிரம்பி ருக்கும் அதனுடைய கீழ்ப் கத்தைப் பிற் காலத்திய கம்மதியர்கள் தம்மால் புதி ாக எழுப்பப்பட்ட கோட் டைக்குத் தெற்கழியாகப் யன்படுத்திக் கொண்டார் ள். பாடலீ கிராமம் மேற் றிய எல்லைக் குட்பட்டு ண்ட சதுரத்தின் வடிவத் தயொத்ததான பிரதேசத் ின் வட மேற்கு மூலையில் மட்டுப் பாங்கான இடத்தில் இருந்ததாக வாட்டல் துரை ருதுகிறார்.

அசோக மன்னனின் அரண்மனைக் கட்டடங்கள் சோடா பாஹாரியிலிருந்து கும்ராஹாரம் வரையில் வியாபித்திருந்தது. கும்ராஹாரத்தில் அசோகன் காலத்திய கல் தூண் ஒன்று அடையாளம் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. ஆனல் அதில் சாஸனமொன்றையும் காணேம். அதன் வாயிலாகவும், மற்றும் பல பூர்வீகச் சின்னங்களின் மூலமாகவும் முற்காலத்தில் அசோகச் சக்ரவர்த்தியின் அரண்மனையாக விளங்கிய அந்தப்பகுதி அந்தக் கிராமத்தின் 20 அடிகளுக்கும் கீழாகப் புதைந்து கிடப்பதாகக் கருதப்படுகிறது. அந்த இடத்திற்குத் தெற்கே மஹாராஜ்கண்ட மெனப் பெயர் வழங்கும் ஸ்தலமிருக்கிறது. ஆகம்கூபம் என்னும் கிணறு இருக்குமிடத்தில் தான் முற்காலத்தில் அசோக மன்னனல் கட்டுவிக்கப்பட்ட நரகம் (சிறைச்சாலை) யிருந்ததாகச் சொல்லப்படுகிறது. சோடா பாஹாரி கும்ராஹாரத்திற்கு ஒருமைல் தென் கிழக்காகவுள்ளது. உபகுப்தன் வாஸம் செய்து வந்தது அந்த இடமேயென்று வாட்டல் துரை கருதுகிறார். சோடா பாஹாரிக்குக் கிழக்கே அரை மைல் தூரத்தில் பிரம்மாண்டமான உத்திரங்களையும், பெரிய பெரிய கற்களையும் வாட்டல் துரை வெளிப்படுத்தினர். அவை அந்த இடத்தில் வெகு காலத்திற்கு முன்னிருந்த கோபுரத்தின் எஞ்சிய சின்னங்களாகவே யிருத்தல்வேண்டும். சோடா பாஹாரிக்கும் சிறிது தெற்காகச் சென்றால் பாஞ்ச் பாஹாரி என்னும் பெயருள்ள இடத்தில் அசோக மன்னனல் நிர்மாணிக்கப்பட்டதாகக் கூறப்படும் ஐந்து ஸ்தூபிகளும் இருந்ததாக வாட்டல் துரை அடையாளம் காண்கிறார். கும்ராஹாருக்கு வடமேற்கில் ஒன்றரை மைல் தூரத்தில் பிக்னு பாஹாரி என்ற சற்று உயரமான மேடொன்றுண்டு அது 20 அடி உயரமும், சுற்றளவில் ஒரு மைல் விஸ்தீர்ணமும் உள்ளது. அந்த இடத்தில் அசோக மன்னனின் சகோதரனை மஹேந்திரனின் வாஸத்திற்காக ஆச்சிரமமொன்றை அமைத்திருந்த விஷயம் ஏற்கனவே கூறப்பட்டுள்ளது. இங்கே ஆறு அடி உயரமுள்ள ஓர் சிலை "பிக்னு குன்வார்"—அதாவது "யாசக அரசன்" என்ற பெயரால் பூஜிக்கப்படுகிறது. அதைச் சுற்றியுள்ள பிரதேசத்திற்கும் மஹேந்திரனுடைய பெயரே வழங்குகிறது.

### குப்த மன்னர்களும் பாடலீபுத்ரமும்

அசோகச் சக்ரவர்த்தியின் மரணத்திற்குப் பிறகு, பாடலீபுரத்தின் கீர்த்தியும், பெருமையும் வெகுவாகக் குன்றத் தொடங்கியது. வைசாலி நகரத்து லிச்சாவி வகுப்பினர் அதைக் கைப்பற்றியதாக நினைப்பதற்குப் போதிய முகாந்திரங்களுள்ளன.

கி. பி. நான்காம் நூற்றாண்டின் ஆரம்ப நாட்களில் குப்த வம்சத்தைச் சேர்ந்த முதலாவது சந்திரகுப்தன் லிச்சாவி வகுப்பிலுதித்த குமார தேவி என்பவளை மணம் புரிந்துகொண்டான். இந்தச் சம்பந்தத்தின் விளைவாகச் சாமானியச் சிற்றரசனின் நிலைமையிலிருந்த சந்திரகுப்தன் ஓர் பேரரசனின் உயர் நிலையினையெய்துவது சாத்யமாயிற்று. அவனுடைய குமாரனும் அவனுக்குப்பின் பட்டத்திற்கு வந்தவனுமான ஸமுத்திரகுப்தனை இந்திய நெப்போலியன் என்ற சிறப்புப்பெயரால் சரித்திர ஆசிரியர்கள் அழைக்கிறார்கள். அத்தகைய மாபெருங் கீர்த்தியும், தோள்வலிமையும் வாய்க்கப்பெற்ற சமுத்திர குப்த மன்னனுடைய (கி. பி. 326—375) பரந்த ராஜ்யத்தின் எல்லைகள் வெகுதூரம் வரையில் எட்டியிருந்ததால் பாடலீபுத்ரத்தைக் காட்டிலும் கௌசாம்பி அல்லது காசியைப் போன்ற மத்யஸ்தலமொன்றை அம்மன்னன் தனது பெரிய ராஜ்யத்திற்குத் தலை நகராக ஏற்படுத்திக்கொள்ளவேண்டியது அவசியமாகஆயிற்று. ஆனதுபற்றி குப்த மன்னர்கள் தமது வாசஸ்தலத்தை வேறிடத்திற்கு மாற்றிக்கொண்டு விட்டதன் காரணமாக, அது மகத ராஜ்யத்தின் தலைமைப் பட்டணமாகவிருக்கும் பாக்கியமிழந்தது. எனினும் அதன் பண்டைப்பெருமை முற்றிலும் அழிந்துபடாமல் குப்த ராஜ்யத்தின் கீழ்ப்பகுதி மாகாணங்களில் அது சீரும் சிறப்புமுள்ள பட்டணமாக வெகு காலம் வரையில் இருந்து வந்தது பாஹியான் அதைக் குறித்து வருணித்திருப்பதை இதற்கு முன் கூறப்பட்டுள்ளது.

மேற்கூறிய ராஜீய மாறுதல்களின் காரணமாகப் பாடலீபுரம் தனது முக்கிய ஸ்தானத்தையிழந்து விட்டதாயினும், பாதுகாப்பு விஷயத்தில் அதனுடைய பண்டைக் கீர்த்தி முன்னிருந்தவாறகவே இருந்தது. வங்காளத்திலும் பீஹாரிலும் ஓரளவு கீர்த்தியுடன் அரசு செலுத்திய பாலவமிசத்தரசர்களின் தாமரப்பட்டயங்கள் பல பாட்னவில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. பிற்காலத்திய பால வமிசத்தரசர்களின் (கி. பி. 12 வது நூற்றாண்டு) ஆட்சி முறைக்குட்பட்ட மாகாணங்களுக்குப் பீஹார் பட்டணமே ராஜதானியாக விளங்கியது.

### முஹம்மதியர்களின் ஆட்சியில் பாட்னவின் நிலைமை

பக்தியார் கல்ஜியின் குமாரனை முகம்மது பீஹார் நகரத்தைக் கி. பி. 1198-ம் ஆண்டில் சூரையாடி, மகத ராஜ்யத்தைக் கைப்பற்றினன். அது முதலாகப் பிரிட்டிஷ் ஆட்சியின் காலம்வரையில் அந்த மாகாணம் முகம்மதியர்களின் ஆட்சிக்குட்பட்டதாகவேயிருந்து வந்தது. எனினும் மூன்று நூற்றாண்டுகளுக்கதிகமாகப் பாட்னவின் சரித்திர விசேஷங்களைக் குறித்து முற்று முடிதலாக அறிவதற்கேற்ற சரித்திர முகாந்திரங்கள் போதுமானதாக இராமையால், அப்பிரதேசத்தைப் பற்றியவரலாறனைத்தும் ஒரே அந்தகாரமாகவிருக்கக் காணப்படுகிறது. ஆனல் ஷேர்ஷா என்னும் முகம்மதிய அரசனுடைய ஆட்சியின் தொடக்கத்திலிருந்து இரண்டாம் முறையாகப் பாட்னவுக்கு நல்ல காலம் பிறந்ததாகக் கூறவேண்டும்.

இந்த ஆப்கானிய அரசன் கி. பி. 1541-ஆம் வருஷத்தில் ஓர் முறை பாட்னவுக்கு விஜயம் செய்தான். அப்பொழுது பாட்ன மிகச் சாதாரணமான ஒரு பட்டணமாகவே இருந்தது. எனினும் பாட்னவின் செழிப்பையும், அதனுடைய பூர்வீக சரித்திர விசேஷங்களையும், அதனுடைய கோட்டையாண்களின் மேன்மையையும் நேரில் கண்ணுற்று


**வாசனை எண்ணெய்கள் நீங்களே தயாரித்துபணத்தைமீதிசெய்யலாம்!**

கீழ்க்கண்ட ஏதாவது ஒரு ரக மோஹினி எஸன்ஸை 16 அவுன்ஸ் நல்லெண்ணெய் அல்லது தேங்காய் எண்ணெய் அல்லது விளக்கெண்ணெய், கடலை எண்ணெயில் கலந்தால் உங்களுக்கு சிறந்த வாசனை எண்ணெயாகும். விலைகளோ மிகவும் குறைவு. இத்துடன் வெகுமதிகள்:—1 பாக்கெட் ஆல்கனெட் ரூட் (எண்ணெய்க்கு கலர் கொடுக்க) வாசனை திரவியம் தயாரிக்கும் விதம் 1936ம் வருஷத்திய ஒரு பாக்கட் காலண்டர் இவைகள் தரப்படும்.

**சுத்தமான மோஹினி எஸன்ஸுகளின் பெயர்களும் விலைகளும்.**

| | | | |
|---|---|---|---|
| சாம்பாக் | ரூ. 2-0 | போகுல் | ரூ. 1-8 |
| காஷ் | ,, 2-0 | ஹீனு | ,, 1-8 |
| கொயிரோ | ,, 2-0 | லில்லி | ,, 1-0 |
| மஸ்க் | ,, 2-0 | தாமரை | ,, 1-0 |
| கதம்பம் | ,, 1-8 | கோலாகீ | ,, 1-0 |
| மல்லிகை | ,, 1-8 | மோடியா | ,, 1-0 |
| ரோஸ் | ,, 1-8 | ஸ்வீட் | ,, 1-0 |

அரை அவுன்ஸ் பாட்டில்களாக கிடைக்கும். பாக்கிங், தபால் சார்ஜ், வீ. பி. செலவு வேறு.

S PAUL & Co, Perfumers, (Dept. S. W.) 4, Hospital Street, Dharamtola, Calcutta.



தர்மாவரம் புதிய கரைச் சேலைகளை உபயோகியுங்கள்.

சரிகை மோஹினி, இந்திராணி கரைகள் பூனு தலைப்பு புடவைகள்

சுத்த மைசூர் பட்டால் ஆனவை.

D. R. NARAYANASWAMY & SONS., Darmavaram (Anantapur Dt)



வலுவூட்டும் சிறந்த

**வெப்ஸ்டர்ஸ் பாஸ்பாடம்**

கிருஷ்ராஜ் & கம்பெனி, மெத்தையில் ஆபீஸ், ... ரோட், மதராஸ்.

எல்லா மருந்து ஷாப்பு களிலும் கிடைக்கும்

வியந்த அம்மன்னன், ஆங்கு கங்கைக்கரைகளிலே மிகவும் உறுதியான கோட்டையொன்றைக் கட்டுவதற்கு உத்தரவிட்டான். இந்தக் கோட்டையைக் கட்டி முடிப்பதற்கு 5-லக்ஷம் ரூபாய்களுக்கு மேல் செலவாயிற்று. மிக்க உறுதிப்பாடும், இராணுவ முஸ்தீப்புகளும், வாய்ந்த இந்தக் கோட்டை இன்றளவும் இந்தியாவின் பூர்வீகக் கோட்டைகளிலே மிகச் சிறந்தவைகளில் ஒன்ருகக் கருதப் படுகிறது. இதன் பயனுகப் பீஹாரின் சீர்மைகுன்றவும், பாட்னுவை அதுகாறும் சூழ்ந்திருந்த அந்தகாரம் நீங்கி, அது முன்போல ஜனநெருக்கமும் வியாபார வசதிகளும், கலைப் பெருக்கமும் மிகுந்த நகரமாகப் பொலிவு பெறத் தொடங்கியது.

வங்காளச் சிம்மாதனத்தில் கடைசியாக வீற்றிருந்த முகம்மதிய அரசன் தாவுத்கான் என்பவனே. அவன் பாட்னுவையும் ஹாஜிப்பூர் கோட்டையையும் கி. பி. 1573-ம் ஆண்டு முதல் வங்காளத்தின் தலைமை ஸ்தானமாக ஏற்படுத்திக் கொண்டான். தம்மை யெதிர்க்கும்பொருட்டு டில்லியிலுள்ள முகலாய பாதுஷாவினுல் அனுப்பப்பட்ட முனிம்கான் என்பவனை அவன் இவ்விடத்தினின்றுமே தைரியமாக யெதிர்த்து நின்ருன். 1574-ம் ஆண்டில் அக்பர் சக்ரவர்த்தியே முற்கூறிய ஆப்கானியக் கலகத் தலைவனுன தாவுத்கானை நசுக்கும்பொருட்டு ஓர் பெரிய ஸைந்யத்திற்குத் தாமே தலைமைவகித்து நடத்திவந்தார். அவர் ஹாஜிப்பூரைக் கைப்பற்றி, பாஞ்ச்பாஹாரியில் தன் கூடாரங்களை யமைத்த செய்தி கேட்டு தாவுத்கான் ஓட்டம் பிடித்தான். பாட்னு முகலாயச் சக்ரவர்த்தியின் ஸ்வாதீனமாயிற்று. அன்று முதல் பாட்னுவில் முகலாயப் பிரதிநிதியொருவன் நியமிக்கப்பட்டு, பாட்னு அவனுடைய தலைமை ஸ்தலமாகச் செய்விக்கப்பட்டது. அரசனின் பிரதிநிதியாகப் பீஹார் ஸூபாவை யாண்டு வந்த முகலாயக் கவர்னர்கள் இவ்விடத்திலிருந்தே தமது அலுவல்களைக் கவனித்து வந்தார்கள்.

முகலாய வமிசத்தரசர்களின் ஆட்சிக்குட்பட்ட பிறகு பாட்னு மீண்டும் ராஜீய உலகில் தான் இழந்த ஸ்தானத்தையடைந்தது. ஆனுல் அது அப்பொழுதும் ஒரு மாகாணத்தின் தலைநகராகவேயிருந்ததென்பதைக் கூறத் தேவையில்லை. இந்தக் காலத்தில் பாட்னுவிலிருந்து முகலாயச் சக்ரவர்த்திகளின் இரண்டு ராஜீயச் சாஸனங்கள் விளம்பரப்பட்டன. அரச குடும்பத்திலுதித்த ஒருவனையே இம்மாகாணத்தின் சுபேதாராகப் பெறும் பாக்கியம் பாட்னுவுக்குக் கிட்டிற்று. கி. பி. 1622-ம் வருஷத்தில் தன் தந்தை ஜஹாங்கீர் பாதுஷாவுக்கு விரோதமாக எழும்பிக் கலவரம் புரிந்த குர்ரம் இளவரசன் இந்நகரத்தைக் கைப்பற்றினுன். இந்தக் குர்ரம் இளவரசனே பிற்காலத்தில் ஷாஜஹான் என்ற பெயருடன் முகலாயச் சிம்மாதனமேறியவன். அதற்குப் பிறகு கி.பி. 1626-ம் ஆண்டில் ஜஹாங்கீரின் மற்ருெரு பிள்ளையான பார்விஜ் இளவரசன் இவ்விடத்தை அரசனின் பிரதிநிதியாக ஆட்சி செய்துவந்ததன் அறிகுறியாக இவ்விடத்தில் முற்றிலும் கற்களாலாகிய மசூதியொன்றை எழுப்பினுன். அதற்குப் பத்தர்-கா-மஸ்ஜித் என்று பெயர் வழங்குகிறது. ஆனுல் அவுரங்கஜேப் சக்ரவர்த்தியின் பேரனுன அஸிம்-உஸ்-ஷானின் ஆட்சியிலேயே பாட்னு நகரமானது அது வரையிலுமில்லாத அளவிற்கு மேன்மைந்த நிலைமையினையெய்தியது என்று கூறவேண்டும். அஸிம் இந்த நகரைப் பலவழிகளிலும் அரண் செய்து, அதற்கு 'அஸிமாபாத்' என்று நாமகரணம் செய்தான். இன்றளவும் முகம்மதியர்களில் ஒரு சாரார் இந்தப்பெயராலேயே இதை யழைக்கிருர்கள். அதில் பல்வேறு வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கும் தொழிலாளிகளுக்கும் பிரத்தியேகமான வாசஸ்தலங்களை அவன் ஒதுக்கிவைத்தது குறிப்பிடத்தக்கது. உயர் குடும்பத்தைச் சேர்ந்த கனவான்களுக்காக "கைவான் ஷு கோ',—அதாவது அரண்மனைகள்; அரசிறை இலாகா அதிகாரிகளுக்கும், குமாஸ்தாக்களுக்கும் "திவான் மொஹல்லா" முகலாயர்களுக்கு "முகல்புரம்" ஆப்கானியலோடி வகுப்பினருக்கும் "லோடி காத்ரா" போன்ற விடுதிகள் அமர்த்தப்பட்டிருந்தன. இவ்வரசன் 1712-ம் வருடத்தில் ஜலத்தில் மூழ்கி இறந்தான். ஆகவே, சில காலம் வரையில் பாட்னுவின் நிலை சற்றுத் தாழ்வுற்றது.

அவுரங்கஜீப் பாதுஷாவின் காலத்தில் பீஹார் ஸூபாவில் 8 சர்க்கார்கள் அடங்கியிருந்தன. அவைகளில் பீஹாரும் ஒன்ருகும். பீஹார் சர்க்காரில் 60 லக்ஷம் பீசு நிலங்களுக்கு மேல் அடங்கியிருந்ததாக அக்காலத்தில் செய்யப்பட்ட நில அளவினுல் தெரியவருகிறது. பாட்னுவிலுள்ள வீடுகள் யாவும் தட்டோடு வீடுகளாக இருந்தனவாம். சுமார் 30 வருஷங்களுக்குமுன்புகூட இத்தகைய தட்டோடு வீடுகளே பாட்னுவில் அதிகமாக விருந்தன. 20, 25 வருடங்களாகவே கண்ணுக் கலங்கமான செங்கல் மாளிகைகள் கட்டப்பட்டு வருகின்றன.


BOERICKE&TAFEL'

அசல் ஹோமியோபதிக் டைல்யூ மருந்துகள் (உபயோகமற்றவை கொண்டு தயாரிக்கப்பட்டவையல்ல) நிவாரணிகளும்-½ அவன்ஸ் முதல் 4 ன்ஸ் வரையில் டிரைசுரேஷனஸ் & திரைகள்; அசல் சீல் வைத்த புட்டிக கிடைக்கும். கேட்லாக் இனம்.

GUERNSEY'S OBSTETRIC AND DISEASES WOMEN AND YOU CHILDREN Rs.

SETT DEY & CO

40-A, Strand Road, Calcutta

ஜி.கன்னய்யா கம்பெனி
இரும்பு பெட்டி வியாபாரம்.



நெ.137, பிராட் வே, மதருஸ்

வெய்யிற்காலம் வந்துவிட்டது!

பெண்மணிகள் இந்த வெய்யிற்காலத்தில் அடுப்பண்டை இருந்து நெருப்பினுல என் வருந்த வேண்டும்?

ருக்மணி குக்கர்

ஒன்றை வாங்கிப் புது முறையைக் கைக் கொண்டால் நெருப்பினுல் வாடவேண்டியதில்லை.

குறைந்த விலை! நிறைந்த சுகம்!





1 முதல் 16 பேர்களுக்குத் தகுந்த அளவுகள்:

ரூபா 9, 12, 16, 21, 26, 32, 38.

ருக்மணி குக்கர் கம்பெனி,

ராயபுரம், (12) சென்னை.

எமது ஏஜெண்டுகள்:

திருவனந்தபுரம்:—இந்தியன் எம்போரியம் மெயின் ரோடு.
பெங்களூர்.—இன்டஸ்டிரியல் & கமர்சியல் கோவாபரேடிவ் சொசைட்டி புதுமார்க்கட்.
மட்டுங்கா (பம்பாய்):—தி சௌத் இந்தியன் கன்சர்வன்ஸ் Ltd.,

DIAMONDS ESTD 1910 JEWELLERY

புரோபஸர்

K. R. பிஷாரட்டி, M. A.,

அண்ணுமலை சர்வகலாசாலை.

வைரத்தோடுகள் வந்து சேர்ந்தன; அவை நன்கு கட்டப்பட்டிருக்கின்றன. பரம திருப்தியடைந்தேன்.

BAPALAL & Co

சிறுவர் பகுதி

# கணக்குப்பிள்ளை உத்தியோகம்

(ஸ்ரீமதி கே. பட்டம்மாள்)

முன் ஒரு காலத்தில் அயோத்தியில் ஒரு பிராமணன் வசித்து வந்தான். அவன் எல்லாக் கலைகளிலும் வித்வானாக விளங்கி வந்தான். அவ்விதமிருந்தபோதிலும் அவன் செல்வவந்தனாக விராமையால் ஒவ்வொரு நாளும் உஞ்சவிருத்தி எடுத்து ஜீவனம் செய்துவந்தான்.

ஒரு நாள் பிராமணன் உஞ்சவிருத்தி எடுப்பதற்காகப் புறப்பட்டான். அவன் பின் ஒரு நாயும் சென்றது. பிராமணன் முதலில் ஒரு வீட்டுக்குச் சென்றபோது வீட்டில் இவனைக் கவனித்து ஒருவரும் பிச்சை போடவில்லை. சிறிது நேரம் பிராமணன் அங்கு தங்கியும் பிச்சை கிடைக்காது போகவே மனவருத்தம் கொண்டு திரும்பினான். நாயும் பிராமணனைச் சுற்றிக்கொண்டே பின் தொடர்ந்தது. மறுபடியும் பிராமணன் மற்றொரு வீட்டிற்குச் சென்றான். நாயும் இவன் முன்னே சென்றது. அவ்வீட்டிலும் பிராமணனுக்கு பிச்சை கிடைக்கவில்லை. இம்மாதிரியே பல இடங்களிலும் நடக்கவே பிராமணன் மிகுந்த கோபங் கொண்டு, "இந்தப் பாழும் நாயால் அல்லவா எனக்குப் பிச்சை கிடைக்கவில்லை" என்று



கூறி, தான் பிச்சை

மீது எறிந்தான். சொம்பு நாயின் தலைமீது படவே காயம் உண்டாகி ரத்தம் பீரிட்டு வந்தது.

அக்காலத்தில் அயோத்தியில் ஸ்ரீராமன் ஆண்டு வந்தார். மேற்கூறியவாறு அடிபட்ட நாய் அரண்மனைக்கு ஓடிச் சென்று வாயிலில் கட்டப்பட்டிருந்த மணியை அடித்தது. மணி ஒலியும் ஸ்ரீராமபிரானுடைய காதுகளுக்கு எட்டவே, அவரும் மணி அடித்தவரை அழைத்து வரும்படி உத்தரவிட்டார். அதிகாரிகள் நாயை அரசரது சமூகத்தில் கொண்டுபோய் நிறுத்தினார்கள்.



நாய், "அரசே! நீங்கள் ஆண்டுவரும் காலத்திலுமா இப்படிப்பட்ட அதர்மம் நடக்கும்" என்று கூறி, தன் தலையைக் காட்டிற்று. ஸ்ரீராமனும் நாயின்மீது பரிவு கொண்டு காயத்தின் காரணத்தைக் கேட்டார். நாய் தன்னைப் பிராமணன் அடித்ததைப்பற்றி விஸ்தாரமாகச் சொல்லிற்று. உடனே ஸ்ரீராமன் தன்னுடைய சேவகர்களை அனுப்பி பிராமணனை அழைத்து வரும்படிச் செய்தார். அவ்வாறே பிராமணனும் ஸ்ரீராமன் முன்னிலையில் அழைத்துவரப்பட்டவுடன் ஸ்ரீராமன் பிராமணனை நோக்கி "நீங்கள் இங்க


தழும்பின்றி ரணம் ஆற்றுவது




கத்தி வெட்டுகள், சிராய்ப்புகள், புண்கள் முதலிய வற்றிற்கான நேர்த்தி மிகுந்த மெழுகு.

எந்தப் புண், ரணம், அல்லது காயத்தின் மீதாவது ஜாம்-பெக் மூலிகை மெழுகைத் தடவினால் வலி மறைந்து, குணம் ஆரம்பிக்கிறது. ஜாம்-பெக் விஷக் கிருமிகளை அழிக்கிறது. விரைவில் தழும்பின்றி ரணமாற்றுவது. நமைச்சல், வண்ணாரபுண், சொறி, சிரங்கு, வேர்க்கூர் முதலியவற்றிற்கு உபயோகியுங்கள். ஜாம்-பெக் பெட்டி 1-க்கு ரூ. 1 அல்லது ரூ. 2-4 வீதம் கிடைக்கும்.

ஏஜண்டுகள்: மெஸர்ஸ் தாதா & கம்பெனி, பார்க் டவுன், மதராஸ்.

மிருகக் கொழுப்பற்றது.

ஜாம்பெக்
Zam Buk



10வருஷம்உத்திரவாதமுள்ள புது மாதிரியான பஞ்சவர்ண கல் செயின்கள்



(செயின் 1-க்கு)

ரூபாய் 5-0-0

எங்கள் ரோல்டு கோல்டு செயின்கள் ஐந்துவித நிறமான செயற்கைகற்கள் வைத்துக் கட்டிய இந்த புது மோஸ்தர் செயின்களை குழந்தைகளும், பெரியவர்களும் அணிந்து ஆனந்த மடையலாம்.

(கேட்லாக் இலவசம்)

R.S. பிரகாசம் & கோ,
அலாய் கோல்டு ஜுவல்லர்ஸ்,
187, சைனா பஜார் ரோட், ஜி. டி. மதராஸ்.



தமிழன்பர்களுக்கு ஓர் நல்விருந்து!
புதுமைக்கவி ஸ்ரீ பாரதியாரின் நூல்களைப் படித்து ஆனந்தமடையுங்கள்.

| | | | |
|---|---|---|---|
| 1. | கவிதைகள் (8-பாகங்கள்) | | ரூ. 2—8—0 |
| 2. | வசனங்கள் (6-பாகங்கள்) | | ,, 2—0—0 |
| 3. | கதைக்கொத்து | | ,, 0—8—0 |
| 4. | பகவத் கீதை | | ,, 0—8—0 |
| 5. | கட்டுரைகள் பகுதி | 1 தத்துவம் | ,, 0—10—0 |
| | ,, ,, | 2 மாதர் | ,, 0—8—0 |
| | ,, ,, | 3 கலைகள் | ,, 0—8—0 |
| | ,, ,, | 4 சமூகம் | ,, 0—12—0 |

**6. Bharathi and his works**
by Mr. C. Visvanathan, Brother of Bharathi 0 4 0

பாரதி பிரசுராலயம்,
திருவல்லிக்கேணி, சென்னை.

## பழிக்குப் பழி

(11-ம் பக்கம் தொடர்ச்சி)

சாயங்காலம் ஏழுமணிக்குப் பொன்னுசாமி கஞ்சியை எடுத்துக்கொண்டு வந்தான். "என்னப்பா தீவுளிக்கோளி மாதிரி முளிக்கிறே" என்றான். "ஒன்றுமில்லே; இந்தச் சிறையைவிட்டு எப்படித் தப்பியோடுவது என்றுதான் யோசனே" என்றான். "ஓஹோ! அப்படியா? இந்தச் சுவர்கள் மூன்று செங்கல் வரிசை வச்சு கட்டிருக்கு. இடிச்சுகிட்டு போக உன்னால் முடியாது. நம்பகிட்ட உன் வாலாட்டமுடியாது. குழந்தை மாதிரி தூக்கி உன்னைத் தொட்டிலேகொண்டு போட்டுடுவேன். அம்பலகாரன் சுப்புசாமித்தேவன் மகனுக்கோம், சரியான ஜாண்டோன்னு நினேச்சுக்கோ" என்றான். கைதியும் சிரித்துக் கொண்டு "ஆமாம் என்வாழ்வுகொஞ்சம் தானே, அதற்குள் எனக்குத் தண்ணீரில்லாமல கஞ்சி கொடுத்து இப்பவே உயிரை எடுத்துடலாம் என்று பாக்கரயா" என்றான். பொன்னுசாமியும் 'கொணுரேன்' என்று சொல்லி வெளியே போனான். கொஞ்ச நேரம் கழித்ததும் பூட்டின கதவைத் திறந்துகொண்டு நிச்சிந்தையாய் உள் நுழைந்தான் பொன்னுசாமி. அவன் திரும்புவதற்குள் உள்ளே பதுங்கியிருந்த கைதி அவன் மேல் பாய்ந்து கையிலிருந்த துண்டால் அவன் கழுத்தை நெறித்துவிட்டான். இனிமேல் வெளியில் தப்பி ஓடிவிடலாம். அப்பொழுது அந்தக் கைதியின் பையிலிருந்த ஒரு கடிதத்தை எடுத்தான். அதில் அவனுடைய விலாசம் எழுதப்பட்டிருந்ததைப் பார்த்து, ஆச்சரியத்துடன அதைப் பிரித்துப் பார்த்தான்.

"என் பிரிய காதலனுக்கு,

நீங்கள் நிரபராதி என்பதைப்பற்றி எனக்கு எவ்விதத்திலும் சந்தேகமேயில்லே. அதற்கேற்றாற்போல் நேற்று போலீஸாரால் சுடப்பட்ட ஒரு கொள்ளேக்காரன் மரணத் தறுவாயில் தான் :ஏலூர் ஜமீந்தாரைக் கொன்றதாக ஒப்புக் கொண்டுவிட்டான். அவனும் ஏறக்குறைய உங்களைப் போலவே யிருக்கிறான். அரசாங்கத்தார் உங்களைச் சீக்கிரம் விடுதலை செய்வார்கள்,

இப்படிக்கு

என் பிரியமுள்ள கமலா

இதைப்படித்ததும் ஐயோ என்ற சப்தத்துடன் கீழே விழுந்தான் கைதி.


## ரூ. 500 இனும்!

**திமிர் குஷ்டமும், வெண்குஷ்டமும்,**

உலகக் கியாதி வாய்ந்த எனது மருந்துகளை 15 தினங்களுக்கு உபயோகித்தால் எல்லாவிதமான திமிர் குஷ்டமும், வெண்குஷ்டமும் நிரந்தரமாக நிவர்த்தியாகிவிடும். பற்பல டாக்டர்கள், கவிராஜர்கள், ஹகீம்களும் கைவிட்டதானல்கூட பரவாயில்லே. எனது அற்புத மருந்துகளை உபயோகியுங்கள். பலனில்லே என நிரூபிப்பவருக்கு ரூ. 500 இனும் 7 நாள் மருந்து ரூ. 2—8; 15 நாள் மருந்து ரூ. 4. தபால் செலவு தனி.

SRI SWAMI & Co,
(34) Panchpota, Bengal.








வலுவாகவும்,

நிரந்தரமாகவும், பத்திரமாகவும்

இருக்க இரும்பையே

கட்டிடங்களில் உபயோகியுங்கள்.

உயர் ரகத்திற்கு

# டாடா இரும்பையே

கேளுங்கள்.

ஒவ்வொரு பட்டணத்திலும்

வியாபாரிகளும், ஸ்டாக்கிஸ்டுகளும்

இருக்கின்றனர்.

**Tata Iron & Steel Co., Ltd.,**

18, எர்ரபாலு செட்டித் தெரு, மதராஸ்

தந்தி: 'IRONCO' MADRA" போன்: 2701








# குழந்தைகளின் வயிற்று ஜுரக் கட்டிகளை

சந்தேகமின்றி சமனப்படுத்துவது

# பால சஞ்சீவினி

இதுவேதான்

**உண்மையான அசல் விஜயநகரம் மருந்து**

விஜயநகர சமஸ்தான வைத்திய பரம்பரை பின்னா குடும்பத்தாரால் தயார் செய்யப்பட்டது.

Dr. பின்னா பாபய்யா பாத்ருடு பிரதர், விஜயநகரம்.

மதராஸ் பிராஞ்சு: 98-99, பிராடிஸ் ரோட், மைலாப்பூர்.

# அதிசயம் ஆனால் உண்மை

மத்தியதரைக் கடற்கரையிலுள்ள பார்மாகிராண்டி என்னும் குகையில் காணப்பட்ட இரண்டு உருவங்கள். க்ரோமக்னன் என்னும் இவர்கள் கிறிஸ்து பிறப்பதற்கு 25000 வருஷங்களுக்கு முன் வசித்து வந்தனராம்





கால்விரேவிஸ் என்ற வியாதியால் பீடிக்கப்பட்டு டாகோமா (வாஷிங்டன்) என்றவிடத்தைச் சேர்ந்த 19 வயது பெண் மிஸ் நோறைக்ளாய்ஸ் கல்லாக மாறி வருகிறாள்.



அமெரிக்காவிலுள்ள இந்த 9 வயதுப் பசு வருஷத்திற்கு 32 727 பவுண்டு பால் தருகிறதாம் இதிலிருந்து 1.525 பவுண்டு வெண்ணெய் எடுக்கப்பட்டதாம். இம்மாதிரி உலகிலேயே வேறு எந்தப் பசுவுமில்லையாம்.

# புலால் விற்ற புஷ்பகன்

(ஸ்ரீமான் தி. கி. சுப்பிரமண்யன் எழுதியது.)

உலகில் சிருஷ்டிக்கப்பட்ட சகல உயிர்களிடத்தும், குணங்களில் சிலவும், உருப்புகளில் சிலவும், நம் எல்லைக்குட்படாததாய் இலங்குகிறது. உதாரணமாக, நம் ஹிருதயம் சிறிது நேரம் சப்திக்காமல் இருக்கும்படிச் செய்ய முடிவதில்லை. கண் இமைகளை அசையாமல் இருக்கும்படிச் செய்ய முடிவதில்லை. அதை ஆங்கிலத்தில் "இன்வாலண்டரி" என விளக்கப்படுகிறது. மானிடப் பிறவிக்குவனைய ஜீவராசிகளைவிடப் பகுத்தறியும் தன்மை அதிகம் உண்டு. ஆதலால் பொதுவாக, உயர் குணத்தைப் பற்றியோ அல்லது துர்க்குணத்தைப்பற்றியோ குணத்தைப்பற்றிய உதாரணமாக நாம் அவர்களையே எடுத்துக்கொள்கிறோம். அவ்விதமே அன்பு எனப்படும் ஓர் குணம் சகல ஜீவராசிகளிடத்தும் வேற்றுமையற்று உயிர் பெற்று நிற்கிறது. இவ்வுலகம் அன்பின் மயமாக ஒன்றக் கொன்று பிணைக்கப்பட்டு ஓர் உருவமாகத் தோற்றுவிக்கப்படுகிறது. சாதாரணமாகக் குழவிகளிடம் ஏற்படும் அன்பிற்கு வாத்ஸல்யமெனவும்; அன்னையர், குரு, தெய்வம் இவர்களிடம் பக்தியெனவும்; உறவின் முறையர், நட்பாளரிடம் வாஞ்சையெனவும்; பெண் மக்களிடம் காதல் எனவும் பாகுபாடுடையதாய் வழங்கி வருகிறது. இரண்டாவதாக மேலே சொல்லப்பட்ட பக்தியெனும் வஸ்து சிலரிடம் வெளிப்படையாக ப்ரகாசிக்கிறது. சிலரிடம் மருந்துக்குக் கூட வெளிப்படையாகத் தெரிவதில்லை. எது எவ்வாறிருப்பினும், இல்லாமல் ஒரு ஜீவனும் இருக்க முடியாது. அவ்விதமிருந்தால் ஈசுவர சமத்துவமுள்ளவராகவோ, மனித சுபாவமற்றவராகவோ இருத்தல்வேண்டும்.

பக்தியினால் மனம் தூய்மையடையும். நாம் ஒவ்வொரு நாளும் கணக்குக்குட்படாத செய்யத் தகாதனவும் சொற்பமான செய்யத் தகுந்தவையும் செய்கிறோம். சாஸ்திரங்களும் புராண இதிகாசங்களும் செய்யத் தகுந்தவைகளையும் ஆண்டவனுக்குப் பிரியமுள்ளவை பற்றியும் உதாரணங்கள் மூலம் முறையிடுகின்றன. அனுபவ மூலமல்லால் நற்காரியம் இது; துர்க்காரியம் இது என்று எல்லோரும் ஒப்புக்கொண்டு அதை ஓர் விதியாய் அனுசரிக்குமாறு உண்டாக்குவதென்பது மனித இயற்கையில் மிக துர்லபம் ஆகையால் சாஸ்திரமென்பது அனுபவபூர்வமாய் தெய்வத்தன்மை வாய்ந்தவர்களால் ஆறறிவு படைத்த சிருஷ்டிகளின் முந்தன்மையிலும் நலம் பெறும் நோக்கத்துடன் அமைக்கப்பட்டு இன்றுவரை நமது அனுபவத்தில் இருந்து வருகிறது.

எனினும், இவ்விதிகள் மேற்சொன்ன பக்தி விஷயமாய் எவ்விதமாயும் எவ்வருணத்தாரையும் கட்டுப்படுத்தவில்லை. கடவுள் எப்பிறப்பாயினும் வேற்றுமையற்று அவர்கள் குற்றங் களைந்து ஆட்கொள்கிறார். தர்மம் சிதைந்து, நாஸ்திகம் தலையெடுத்து நவநாகரிகத்துடன் இலங்கும் இச்சமயம் கடவுள் தன் நாமதேயங்கள் உச்சரிக்கப்பட்ட மாத்திரத்தில் பக்த கோடிகளாகக் கருதி ஆட்கொள்கிறார்.

பழைமயதொரு 18-ம் நூற்றாண்டில் புஷ்பகன் எனப் பெயர் பூண்ட ஓர் படையாளர் வகுப்பைச் சேர்ந்தவன் ஒருவனிருந்தான். (படையாளர் எனும் வகுப்பு தற்சமயம் தென்னிந்தியாவில் படையாச்சிகளென வழங்கப்படுகிறது) அவன் மிகுந்த ஏழ்மையுடையவன். பல நபர்களிடம் வேலைக்கமர்ந்து அதனால் கிடைக்கும் சொற்ப ஊதியத்தைக் கொண்டு வயது சென்ற கைம்பெண்ணாகிய தன் தாயைக் காப்பாற்றி வந்தான். அவனுக்குவேறு உறவின்முறையார் யாரும் இல்லை. ஓர் நாள் நோய்வாய்ப்பட்ட அவன் தாய் தான் இறப்பது நிச்சயமென உணர்ந்து, தன் மகனை அருகேயழைத்து உச்சிமுகந்து "என் கண்ணே! என்னிடமாக நீ கொண்ட பக்தியும் இன்னல்களும் கணக்கில. கருமமே கண்ணான என் ரத்னத்தை நான்விட்டுப் பிரியும் காலம் சமீபித்திருக்கிறது. நான் பெற்ற மாணிக்கம் எனக்கு ஓர் மாணிக்கமாகவே கடைசிவரை பிரகாசித்து புஷ்பகன் என்னும் பெயருடன் புஷ்பங்களின் நந்நாற்றமாகவே தோன்றிவிட்டாய். உன் கடமையைச் சரிவர முடித்தாய்! இப்பாக்யசாலியான உன் கையினால் சிதையிலேறவும் தீயடையவும் யாது பாக்யம் செய்தேனோ தெரியவில்லை. இஜ்ஜன்மா புனிதமடைந்தது! கடவுள் உனக்கு நற்கதிபருள்வாராக! அவரிடம் அன்பும் உண்மையுமுடையோனாக விளங்குக! எவ்வேலை செய்யினும் அவரை ஞாபகப்படுத்திக்கொண்டு, அவர் நாமங்களை உன் நா வழங்குமாக! என மொழிந்து இப்பூதவுடல் நீத்தனள்.

புஷ்பகனும் தன் தாயின் ஈமச் சடங்குகளை செவ்வனே முடித்து, தான் துணையிழந்த அநாதையானதையும் தன் தாயின் அமுத வாக்குகளை நினைந்துருகியவண்ணம் அன்ன ஆகாரமன்னியில் நாட்கள் சிலவைக் கழித்தனன். பின் ஒருவரிடம் அண்டிப் பிழைக்கும் தொழிலையும் ஒழித்தான். வயிற்றின் கொடுமைக்காக மாம்சங்களை விலைக்குச் சரமாக வாங்கி ஓர் வயிற்றிற்குப் போதுமான அளவு சொற்ப லாபம் வைத்துத் தன் வாழ்நாட்களைக் கழித்தான். ஆனால் தன் தாயின் அமுத வாக்குகள் அடிக்கடி ஞாபகத்திற்கு வரும்பொழுது பகவானுடைய நாமங்களைத் திருப்பித் திருப்பிச் சொல்லித் தன் ஞாபகத்தை மறந்தான். பக்தியும் வேரூன்றியது. தனக்கு சீக்கிரம் மரணம் அளிக்குமாறு பிரார்த்தித்தனன்.

* * * *

ஓர் நாள் காலை அவ்வூர் சரவண நதிக்கு நீராடச் சென்றான். சூரியன் ஒளியால் நீரோட்டம் பளிங்குக் கற்கள் போல் ஒலிக்கவும் நீரின் தெளிவையும் உற்று நோக்கியவண்ணம் கடவுளின் சிருஷ்டியை வியந்து நின்றான். அப்பொழுது ஓர் உருண்டை வடிவமான கல் தன் கரு நிறத்துடன் உருண்டுருண்டு அவன் காலடியில் நின்றது. அதனைக் கையிலெடுத்தான். மிகுந்த மழமழப்புள்ளதாகத் தென்பட்டது. பொன்னிறமான கோடுகளும் தென்பட்டன. பின் தன் ஸ்நானத்தை முடித்து அக்கல்லை எவ்விதமாய் உபயோகிக்கலாமெனவும் அது தன் மனதை என் அவ்விதம் ஆகர்ஷிக்க வேண்டுமென்ற எண்ணத்துடனும் யோசனை செய்தவண்ணம் வீடடைந்து அக்கல்லைத் துலாக்கோலிலிட்டு நிறுத்தான். பின் அது சேர் கல்லுக்குச் சரியாயிருக்கக் கண்டு அதையே நிறைக்கல்லாக உபயோகிப்பதெனவும் தீர்மானித்தான்.

ஓர் சமயம் ப்ராஹ்மணர் ஒருவர் அவ்வழியாகச் செல்



ம்படி நேர்ந்தது. புஷ்பக
ம் துலாக்கோலில் சாலிக்
ாமமிட்டு மாம்சம் நிறுப்ப
ம் அவருக்குப் புலனுயது.
தைக் கண்ணுற்ற வேதியர்
நாராயணு நாராயணு'' என்று
க்குரலிட்டுத்தான் இவ்விதம்
பத்தைக் கண்ணுல் பார்க்க
நர்ந்ததை எண்ணி நொந்து
காண்டே வேகமாய் நடந்
ார். புஷ்பகனும் நாராயண
ாமத்தைக் கேட்டு வெளியே
ந்தான். புஷ்பகன் அவ்
பிப்ரரை அணுகினுன். அவ
னக் கண்ட விப்ரர் அக்கல்லை
டுத்து வருமாறு செய்து
அதனை உற்று நோக்கினுர்.
அது மூர்த்திகரமுள்ள சாலி
ராமமெனத் தெளிந்தார்.
அதனைத் தனக்களிக்குமாறு
பாசித்தார். புஷ்பகனும் மன
முவந்து, ''ஸ்வாமி இஜ்ஜன்மா
வில் தங்கள்போன்ற பெரி
யாரைத் திருப்தி செய்து அறி
யேன். நான் தொழிலால்
கேவலம் புலால் விற்கும் புல்
லுக்கு நிகரோனுயினும் தங்
களைத் தரிசிக்கும்படிச் செய்த
இக்கல்லுக்கு நான் என்றும்
கடமைப் பட்டுள்ளேன். என
க்கு நற்காலம் கிட்டியதாக
எண்ணி என் மனம் பூரிப்
படைகிறது. என் பாக்யத்தை
என்னவென்று நினைப்பேன்!
தங்களை நான் நாராயண ஸ்வ
ரூபமே எனக்கருதி, இதோ
இக்கல்லைத் தங்களிடம் ஒப்
படைத்தேன். என்னுல் தாங்
கள் கூவுமாறு எற்பட்ட ஸ்ர
மத்திற்கு மன்னித்தருள்க!''
எனப் பணிந்து நமஸ்கரித்துக்
கல்லை ஈந்தனன்.

ப்ராஹ்மணரும் அதைச் சந்தோஷத்துடன் பெற்றுப் புஷ்பகனை ஆசீர்வதித்துச் சாலிக்ராமத்தை மந்திர அபிஷேகாதிகளால் புனிதப்படுத்திப் பூஜைப் பெட்டியில் வைத்துப் பூஜை செய்து வந்தார். புஷ்பகனும் மனத்திருப்தியுடன் பகவந் நாமங்களைச் சொல்வதிலும் பக்தியிலும் வேரூன்றலாயினன்.

நமது விப்ரர் ஓர் நாள் அயர்ந்து நித்ரை செய்கையில் ''ஓ விப்ரஸ்ரேஷ்டா! நான் ஆடலிலும் பாடலிலும் என் பக்தனுடன் கூவிக் களித்து சுகானுபவத்தில்மூழ்கியிருந்த என்னை என் நீர் இவ்விதம் பூஜை செய்வதாக அபிநயித்து ஓர் டப்பாவில் அடைத்துவைக்க வேண்டும். நாம் பக்தியில்லா உம் பூஜையை எற்றுக்கொள்ளவில்லை. உடனே என் அடியவனுகிய புஷ்பகனிடம் சேர்ப்பிராக'' என்று வேற்று முகமுள்ள ஒருவர் அதட்டியதாகக் கனவு கண்டு மெய்சிலிர்த்து உள்ளம் பதைத்துப் படுக்கையைவிட்டு எழுந்து உட்கார்ந்தார். பின் தன்னையே நொந்தார். சூரியனின்வரவை பயத்துடன் எதிர்நோக்கி, ஒவ்வொரு வினடியை யும் ஓர் யுகமாகக் கழித்தார்.




விஷம்!

நல்ல பாம்பின் விஷம் தீண்டினுல் உடனே மரணமேற்படுகிறது.
பலவீனமும் அவ்வளவு ஆபத்தானதே
இது தேக உருப்புகளைக் கொஞ்சம் கொஞ்சமாகத் தின்றுவிடுகிறது நல்ல பாம்பின் விஷத்துக்கு மருந்தோ மாயமோ இல்லை. ஆனுல் பலவீனத்தைப்போக்க மருந்துண்டு.

அதுதான் ''அமிர்தா''

இது பலவீனத்தை ஒழித்து, தேக, மனுேதிடத்தை யளிக்கிறது.
அமிர்தா எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

கேஸரி குடீரம், எழும்பூர், மதராஸ்.



# செவிடு

''டெப்கில்லர்'' செவிட்டுத் தன்மையை சாசுவதமாகப் போக்கிவிடும். இன்னும் காதில் எற்படும் இதர கோளாறுகளையும் அகற்றிவிடும். எவ்வளவு நாள்பட்ட செவிடாக விருந்தாலும் சரி, சிறிதும் சந்தேகமின்றி நிரந்தரமாக நிவர்த்திக்கப்படும்; செவிடர் செவ்வையாகச் செவியுறுகிறுர். கால்செவிடு, அரைச்செவிடு அல்லது முழுச்செவிடு எதுவாகவிருந்தாலும் அக்கரையில்லை; நீண்டகால ஜலதோஷம், இருமல், ஜுரம், தொண்டைக் கோளாறு, மூக்குக் கோளாறு முதலிய எக்காரணங்களால் எற்பட்ட செவிடாயினும் சரி குணமாகிவிடும். சீழ்வடிதலும் நின்றுவிடும். ஆயிரக்கணக்கானவர்கள் குணம் பெற்றிருக்கின்றனர். விலை ரூ. 5; தபால் செலவு 7-அணு
சென்னையில் எல்லா பிரபல மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும். அல்லது,

MAHAMBS TRADING COMPANY OF ASIA, Indian Depot, P. O Box 2186 Bombay.



சரசமான விலை! பகட்டுக்கு குறைவு இல்லை!

டால்வீசும்

# பர்மா அவுத்த பையா கல்

உருவு கற்கள் ரதி ஒன்றிற்கு ரூபா 3 வீதம் விற்கப்படும்.



| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ரதி ஒன்றுக்கு | 1 | கல்கொண்டது | நூறுகல்லுக்கு ரூபா | 300 | 0 | 0 |
| ,, | 2 | ,, | ,, ,, | 200 | 0 | 0 |
| ,, | 3 | ,, | ,, ,, | 150 | 0 | 0 |
| ,, | 4 | ,, | ,, ,, | 135 | 0 | 0 |
| ,, | 5 | ,, | ,, ,, | 125 | 0 | 0 |
| ,, | 6 விருந்து 10 | ,, | ,, ,, | 115 | 0 | 0 |
| ,, | 10 மேல் | ,, | ,, ,, | 100 | 0 | 0 |

இந்த பர்மா அவுத்த பையா கல் அசல்வைரங்களுக்கு இரண்டாவதாக ஒப்பிடக்கூடியது. கல் பரிசோதனை செய்யக்கூடியவர்களையும் பிரமிக்கச் செய்யும்படியான அவ்வளவு பள பளப்பும், கலரும், பட்டையும் இதற்கு அமைந்திருக்கிறது.

இந்த ஜாப்தாவில் குறிக்கப்பட்டுள்ள விலைகள் சொற்ப லாபத்துடன் ரொக்கத்திற்கு விற்கப்படும். இந்த அவுத்த பையா கல்லானது மற்ற எல்லா கற்களையும்விட அதிக மேலானதும் குன்றுத ஜோதியும் மாறுத நிறமும் வாய்ந்த உயர்வான ரகங்களாகும். அரத்திற்கும் நெருப்பிற்கும் எண்ணெய்க்கும் திராவகத்திற்கும் திறமான உத்திரவாதம் அளிக்கப்படும். மேலே காண்பிக்கப்பட்டுள்ள அளவுகளை விட பெரிய அளவுகளிலும் கல்லுகள் கிடைக்கும். வெளியூர் ஆர்டர்கள் உடனுக்குடன் அனுப்பிவைக்கப்படும்.

பர்மா அவுத்த பையா கல் வியாபாரம்:—மோத்தத்திலும் சில்லரையிலும் விற்கப்படும்.

ஜே. எச். டோரஸ், 313, மங்கமாரி வீதி, இரங்கூன்.


மிங்கும் கூக்குரலுடன் சஞ்சாரம் செய்தன. ஆதவனும் தன் கிரணங்களால் உலக இருளைப் போக்கினன். பிராமணனும் தனது நித்யகர்மானுஷ்டானங்களை முடித்துக்கொண்டு ஓடோடியும் சென்று புஷ்பகனிடம்சாலிக்ராமத்தைக்கொடுத்து விபரமனைத்தும் கூறினர். [illegible]ந்த புஷ்பகன் கருணையங்கடலாகிய எம்பெருமான் மூடபக்தியுள்ள தன் மாட்டுக் கொண்டுள்ள ஆர்வத்தையும் அர்த்தமில்லாத் தன் செய்கையைப் புகழ்ச்சிக்கிடமாக்கியதையும் தன் தாயின் அமுதமொழிகளையும் நினைந்துருகிச் சரீரம் நடுக்குண்டு உள்[illegible] வரும்பொன்னை[illegible]திற்காளானதாக நினைத்துக் கண்ணீர் ஆருய்ப்பெருகிவழிந்தோடவும் நெஞ்சக்குழியில் ஓர் பறை வந்து அடைத்திருப்பதுபோலவும் எதோ செய்யத் தகாத ஓர் காரியத்தைச் செய்து நிந்தனைக்காளானதாகவும் உணர்ச்சிபெற்றுப் பேச நாவெழாமல் ஸ்தம்பம்போல் அசைவற்று நின்றுன். பின்

மீறி விப்ரரை மும்முறை நமஸ்கரித்து ப்ரதக்ஷிணம் செய்து குழறிய குரலில், "ப்ராஹ்மணோத்தமா! அடியேன், பெருமையறியாது இழைத்த இகழ்ச்சியையும் மரியாதையற்ற செய்கைகளையும் பரம்பொருள் பொறுப்பரோ? ஐயன்மீர்! ஏழைமேல் தயைசெய்ய வேணும்! நான் எவ்வாறு தெய்வ நிந்தனையைத் தவிர்த்தல் கூடும்? கருணையின் உருவே ஞான ஒளி தரல் வேண்டும்" என இறைஞ்சினன்.

விப்ரரும், "உன் அறியாத் தன்மையினால் செய்தவை குற்றமாகா. உலகில் கடவுள் என்னும் வஸ்து நம்முடன் நித்யமாய் நிராமயமாய் நிஷ்களங்கமாய் துரியநிறை சுடராய் விளங்குகிறார். பக்தி வெள்ளப் பெருக்கால் சோதனைகள் நேருவது சகஜம். அதையறியாமல் அறிவிழக்குமாறு செய்வது அவன் திருவுளம்; அறிந்து பின் அபசாரத்துக்குத் துயருறுவது லக்ஷணம் வாய்ந்த பக்தர்களின் இயற்கை. அதுபோலவே உனக்கும் ஏற்பட்டுள்ளது. மூடவுலகில் திருவள்ளலின் ஆற்றலை அறியும் சுபாபவமுள்ளவர்கள் மிகவும் சொல்பம். எம்பெருமானுக்கு அடியவர்களால் குறைவு நேரிட்டதாக எனையோர்களின் சரித்திரம் கூறும் பொழுது அதற்குப் பரிகாரங்களும் கூறப்பட்டிருப்பது மிக அவசியமாய் ஏற்படுகிறது. அது புகழ்ச்சி இடமாய் விளக்கிக் காட்டுவது, உண்மை அடியவர்களுடையகடமையாகும். ஆதலால், நீ தீர்த்தாடனம் செய்தல் நலம்" எனக் கூறி விடைபெற்றுச் சென்றார்.

* * * *

விப்ரரின் வார்த்தைகளைச் செவியுற்ற புஷ்பகன் அன்றே நடுப்பகல் போஜனமருந்திப் புனித நீராடப் புறப்பட்டான். இரவு நெடுநேரம்வரை நடந்து ஓர் கிராமத்தை அடைந்தான். களைப்பும் மேலிட்டது. பசியின் நோய் தலையெடுத்து வாட்டியது. குலசேகரபுரம் என்னும் அச்சிறு கிராமம் சுமார் 15 வீடுகளும் பதினைந்து வீடுகளில் பல திறப்பட்ட தொழிலாளரும் பல்வேறு ஜாதியினரும் தனித்தனியே மூலைக்கொன்றாய் அமைக்கப்பட்டு விளங்கியது. அவ்வூரின் மத்தியில் ஓர் சிவன் ஆலயமும் சந்நதியில் இரு வேதியர் கிரஹமும் கோவிலையெதிர்த்து ஓர் குளமும் அவற்றைச் சூழ்ந்து வயல்களுமாய் ப்ரகாசித்தது. இரவு அக்ராமத்தை அடைந்த புஷ்பகன் பசியின்மேலீட்டால் ஜனநடமாட்டமுள்ள ஒரே வீடாகிய அந்தணர் கிரஹத்தையடைந்து தனக்குச் சிறிதளவு அன்னமும் தங்க இடமும் அளிக்க வேண்டித் தன் வரலாறுகளையும் அவ்வீட்டு எஜமானியம்மையிடம் தெரிவித்தான்.

அவ்வீட்டில் சுமார் இருபது ப்ராயமுள்ள ஓர் இளமங்கையும் ஏழைந்து பிராயமுடைய ஓர் இளைஞர் வியாதியினால் பீடிக்கப்பட்டவராய்க் காணப்பட்டார். தன் கணவனுக்கு ஏற்பட்டவியாதி நிவர்த்தியாகவேண்டி இரவு காலம் அதிதிக்கு அன்னமிட இசைந்தாள் அவ்வம்மணி. பின் புஷ்பகனும் அன்னம்புசித்து அன்னவர் வீட்டின் நடையில் முடங்கினன். வெள்ளிடை மனத்தரை அயர்ந்து புத்துயிர்பிக்கும் இரவு! பொய், கொலை, களவு, வஞ்சியரைத் தூண்டும் இரவு! பேய் பிசாசு நடமாடும் இரவு! இருளடைந்த பேராசையுடைய மனத்தோரைத் தூண்டும் இரவு! தீயவை நட்புகொள்ளும் இரவு!

இவ்விரவில் அவ்வீட்டுக்குடையவளான ப்ரேமா தன் படுக்கையில் விழித்துக் கொண்டு தூக்கமின்றி ஏதோவொன்றை யோசித்து ஓர் முடிவிற்கு வர இயலாமல் புரண்டு படுப்பதும் பெருமூச்செறிவதுமாக இருந்தாள். அவள் மனம் தன் கணவன் கதியையும் தன் வாழ்நாள் துருவேறியிருப்பதையும் நினைந்து துக்கித்துப் பலவாறு யோசித்து ஓர் முடிவிற்கு வர முடியாமல் பெருமூச்செறிந்தாள். எங்கும் நிசப்தம் குடிகொண்டிருந்தது பின் ப்ரேமா மெதுவாகப் படுக்கையைவிட்டெழுந்திருந்து தன் கையில் விளக்கேந்தி புஷ்பகன் படுத்துறங்கும் இடத்தை அடைந்தாள். பின் அவரை எழுப்ப முயன்றாள். வெளிச்சத்தை முகத்தில் வீசவும் புஷ்பகன் திடுக்கிட்டுக் கண்விழித்து உட்கார்ந்து பின் எழுந்து நின்று, "தாயே! தாங்கள் தனியே வந்து என்னை இந்நேரத்தில் எழுப்புவானேன்? என்ன விபத்து நேரிட்டுள்ளது. அயர்ந்து விட்டேன். மன்னித்தருள்க!" என வினவினன்.

ப்ரேமா புஷ்பகனின் பரபரப்பைக் கண்டு புன்சிரிப்படைந்து புஷ்பகன்கருத்தைப் பற்றியவளாய், "நண்பரே! தங்களைக் காரணமில்லாமல் எழுப்புவேனோ! தங்களைவிட நான் இளம்பிராயத்தினள் என்பதை மறந்து தாங்கள் என்னை தாயே என அழைக்கலாமா?" எனக் கொஞ்சிக் கேட்டாள்.

அயல்மாதொருவள் தன் கரத்தைத் தீண்டவும் மனச் சமாதானமற்றுப்பிடி திமிறியவனாய் சரீரம் ஒடுக்குண்டு "அம்மாது எக்காரணம் தெரிவிப்பாளோ என்ன பாபம் சம்பவிக்குமோ மனக்குரங்கை அடக்க ஆற்றலில்லாதவளாய் தோன்றுகிறாளே" என ஐயுற்றவனாய் அசைவற்ற மரம்போல் ஸ்தம்பித்தான். பின் அருகே நின்றிருந்த மங்கையும்,

"நண்பரே தாங்கள் மனது வைத்து அடியேனுக்குச் செய்யக்கூடியதொரு காரியம் உண்டு. அச்செய்கை துருவேறி நிற்கும் என் வாழ்நாளை புனிதமாக்கக் கூடியது. தாங்கள் ரூபத்தில் சிறந்தவராயும் எனக்குகந்தவராயும் என்மனம் எனக்குக் காக்ஷியளிக்கின்றது. நான் தங்களைக் கண்ணுற்ற நிமிஷம் முதல் என் உடல் பொருளாவியையெல்லாம்உமது பார்வை கொள்ளைகொண்டது. நான் இவ்வீட்டில் காலடி வைத்தது முதல் என் கணவர் குஷ்டநோயால் அவஸ்தைப்பட்டுக் கொண்டு அசுசியக் குவியல்கவி


# சிறந்த கூந்தல் ஆகாரம்



உடலுக்கு எப்படி நல்ல உணவு அவசியமோ அதே மாதிரி கூந்தலுக்கும் சிறந்த ஆகாரம் அவசியமானது. எனவே உலகப்புகழ்பெற்ற காமினியா ஆயில் (ரிஜிஸ்டர்ட்) உபயோகியுங்கள். கூந்தலின் ஆரோக்கிய வளர்ச்சிக்கு அத்யாவசியமான சத்துக்கள் பல சேர்ந்தது. மூளைக்குக் குளிர்ச்சி; துல்லிய மணம் நிறைந்தது.

விலை புட்டி 1-க்கு ரூ. 1.
" 3 புட்டிகள் ரூ. 2-10.

வி. பி. சார்ஜ் தனி.

தபால் செலவுக்காக அரையணா ஸ்டாம்பு அனுப்புவோர்க்கு சாம்பிள் இலவசம்.

ப்ராசீன மலர்களின் சுவாசனையும், புத்தப் புதிய இனிமையும் வாழ்விற்கு மகிழ்ச்சியூட்டுபவை; இவ்வளவையும் கீழ்க்கண்டதன் வாசனையில் நன்கு அனுபவிக்கலாம்.

# ஆட்டோ டில்பஹார்

(ரிஜிஸ்டர்ட்)

ஒரு சில துளிகள் பல நாட்களுக்கு அழியாத வாசனை யூட்டும்; ஏனெனில் ஆட்டோ டில்பஹாரில் விரைவில் ஆவியாக மாறிவிடும் ஆல்கஹால் கிடையாது.

விலை ¼ அவுன்ஸ் ரூ. 1-4. 1 டிராம் 12 அணா.

தபால் செலவு தனி.

சோல் ஏஜெண்டுகள்:—

**The Anglo Indian Drug & Chemical Co**
**BOMBAY 2.**

நஞ்சன்கூடு பல்பொடி
டப்பி) I. D. L. №. 61. மெடிகேடட் (அணா 4







போலிகளைக் கண்டு உஷார்!!!




# அமிர்தாஞ்சனம்

சகல வலிகளையும் போக்கும்
இந்திய திவ்யாமிர்தம்

அமிர்தாஞ்சனம் டிப்போ

பம்பாய், மதராஸ், கல்கத்தா.

டை நான் இகசுகத்தையே னவிலும் கண்டறியாத் துர்ப்பாக்யவதியாய் ஒளியில்லா விளக்காய் இருந்து வருகிறேன். கடவுள் கிருபையால் இக்கிராமத்தில் சுமார் 25 வேலி நிலம் என் கணவர் என் பெயரால் வைத்திருக்கிறார். அவர் அன்னையர் அவரது ஐந்தாம் ப்ராயத்தில் காலகதி அடைந்தனர். அவருடைய சிஷ்ருஷையால் நொந்த நான் என் மனோபீஷ்டத்தை பல தடவைகளில் அவரிடம் வற்புறுத்திக் கூறியும் அவர் தனக்குத் தற்சமயம் சிஷ்ருஷையொன்றே முக்யமென்றும் பின் நான் எவ்விதம் அழகு செய்து கொள்வதிலோ ஆடை அணிவதிலோ பிறர் மூலம் தன் சொத்துக்களிலிருந்து செலவன்னியில் இக சுகத்தை அடைவதிலும் தனக்கு யாதொரு ஆக்ஷேபமில்லை எனத் தெரிவித்தார். ஆகையால் சுந்திர மன்மதராகத் தோன்றும் தாங்கள் என் மனோபீஷ்டத்தைப் பூர்த்திசெய்து என்னுடன் உண்டு களித்துத் தாங்கள் யாத்ரையை ஓர் புறம் ஒதுக்கி வைக்க வேணுமென்பது எனது வேண்டுகோள்'' எனத் தாளைப்பற்றி இறைஞ்சிச் சரண்புகுந்தாள்.

நாராசம்போன்ற இம்மொழிகளைச் செவியுற்ற புஷ்பகன் அனலிலிட்ட புழுபோல் துடித்து, "அ— நாராயணா! அன்னையே! வேண்டாம்! தங்களில் நான் தாழ்ந்த குலத்தோன். நான் பாபத்தை நாசம் செய்யும்பொருட்டுத் தீர்த்தாடனம் செய்யப் புறப்பட, இன்னும் பாபம் சூழ்கிறதே! என்ன செய்வேன்! கணவன் சிஷ்ருஷைதான் தங்களுக்குச் சொர்க்கமெனக் கருத வேண்டும். அவர்தான் தங்களுக்குத் தெய்வம். சிற்றின்பமாகிய இகசுகம் அழியும் ஆற்றலுள்ளது. வெறுப்பளிக்கக் கூடியது. ஆதலால் தங்கள் மனதை அடக்கிப் பேரின்பப் பதவியை அடையத் தங்கள் கணவரையே வழிபடுங்கள். அவரை வஞ்சித்துக் கேவலமாகிய இச்செய்கைகளினால் தங்கள் பதவியை இழக்கவேண்டாம்'' எனத் தெரிவித்தான்.

ப்ரேமாவின் கண்களில் தீப்பொறிபறக்க, "காமத்திற்குக் கண்ணில்லையென்பதை மறந்தீரோ? உமக்கு ஆண்மைத் தனமே இல்லையா? தானாக வரும் ஸ்ரீதேவியாகிய என்னை உம்போன்ற இரந்துண்போர் தள்ளல் நீதியோ?'' என்று சீறி உள்சென்று உதிரம் சிந்தும் தன் கணவன் தலையை ஓர் கையில் தாங்கியவளாயும் மற்றொரு கையில் கூறியவாளுடனும், "இதற்கன்றோ நீர் அஞ்சினீர்! இனியாவது நீர் என்னுடனிருக்கச் சம்மதிக்கவேண்டும். இல்லையேல் நீர் கஷ்டத்திற் வண்ணம் அதட்டிப் பேசினாள் ப்ரேமா.

"ஆ! கடவுளே! பேதையரிடம் இவ்விதம் தோன்றுவித்தல் நீதமோ? ஏழையாகிய என்னை இவ்விதம் சோதிக்கலாமா? நான் நன்நீதியைச் சொல்லியும் தீயவை நெய்யிட்ட அனல்போல் பிரகாசிக்கின்றதே! ஓர் பாவத்தை விலக்கவெண்ணிய வென்னை ஓர் பெரும் மூட்டையைத் தலையில் சுமத்தி என்னை இன்னும் கஷ்டத்திற்கு உள்ளாக்க நினைப்பது உன் திருவுளமோ? இதுவும் உனக்குச் சம்மதமோ!'' எனப் புலம்பலாயினன். ப்ரேமாவும் இவன் தன் வலைக்குட்படாதவன் எனக் கருதித் தன் கணவனைக் கொன்றுவிட்டதாகக் கூக்குரலிட்டாள். உடனே அவ்வூரிலுள்ளாரனைவரும் புஷ்பகனை வரிந்து அடித்து இம்சித்துச் சிறைபிலமர்த்தி அரசனிடம் பிராது செய்தனர்.

ப்ரேமாவும் ஸ்த்ரீ ரத்னங்களுக்குள்ள சாகஸங்களினால் தன் கணவனின் ஈமச் சடங்குகளையும் உலக நம்பிக்கையுண்டாகுமாறு செய்து முடித்தாள். சந்தர்ப்ப சாக்ஷிகளைக்கொண்டு ஜூரிகளின் அபிப்ராயத்தை அனுசரித்தும் புஷ்பகன் குற்றம் செய்ததாக நிரூபிக்கப்பட்டது. அதனால் அரசன், எந்த புஷ்பகனுடைய இரு கைகள் ப்ரேமாவைத் தழுவுவதற்காக அவள் புருஷரான சந்த்ரசேகரரின் சிரங்களைக் கொய்தனவோ அந்த வாளைக் கொண்டே அவன் இரு கைகளையும் சிறுசிறு துண்டுகளாக முழங்கையளவு துணித்துவிடுமாறு தீர்ப்புக் கூறினர்.

* * *

மறு நாள் பகல் பன்னிரண்டு மணிசுமாருக்குப் புஷ்பகன்பட்டாக்கத்தி உருவிய இருகொலையாளருடன் கொலைக்களம் கொண்டு போகப்பட்டான். இரு முன் கைகளும் முறையே நசுக்குண்டு துணிக்கப்பட்டு வழிந்தோடும் உதிரத்துடன் புஷ்பகன் கொலைக்களத்திலிருந்து விடுவிக்கப்பட்டான். தர்மம் அதர்மமாவதும் அதர்மம் தர்மமாவதும் அவரவர் விதியின் பயனெனப் பெரியோர் கருதுகின்றனர். சேதிக்கப்பட்ட கைகளின்வலி பொறுக்காத புஷ்பகன் "தெய்வமே! என்னப்பனே! இம்சை பொறுக்கமுடியவில்லையே! இதுவும் உனக்குச்சம்மதமோ? மெய்யுடைய வரொருவன் சொல்ல மாட்டாமையால் பொய்யாகுமோ! உன்னை தரும தேவதையென்றும் தர்மத்தின் சொரூபம் என்றும் பெரியோர் கூறும் மொழிகளில் என் விஷயத்தில் ஏன் குறைவுபடச் செய்யவேண்டும்? இஜ்ஜன்மாவில் விபரம் அறிந்த நாள் முதலாய் இவ்வுலகிலாளப்பட்ட எஜ்ஜீவராசிகளிடத்தும் நான் னல்லன், உனக்குத்தெரியாதா? பரம்பொருளே; உன் திருவடிகளே சரண்புகுந்து உடல் பொருள் ஆவி இவையனைத்தும் உனக்கு அர்ப்பணம் செய்தேனல்லவா? ஐயோ! வலி பொறுக்கவில்லையே? என் உயிரை எடுத்துக்கொள்வாயாக அல்லது நான் ப்ராணத்யாகம் செய்துகொள்வதைத் தவிர வேறு வழியில்லை. என் சொற்கள் காதில் விழவில்லையா? கஷ்டம் கண்ணுக்குப் புலனாகவில்லையா? எனப் புலம்பி நாக்குழறி மூர்ச்சையாயினன்.

சூர்யனும் இக்காக்ஷியைக் காணப்பொறாது நாராயணமூர்த்தியிடம் நான் சீக்கிரம் சென்று தெரிவிக்கிறேன் என ஆறுதலளிக்கும் அமுதமொழி போல் மேற்றிசையில் ஆழ்ந்தனன். பக்ஷி ஜாதிகளும் பக்தன் படும் துயரினால் உலகில் யாது அனர்த்தம் சம்பவிக்குமோவென தன்கூண்டடைந்து விழித்து இரவில் கூவிக்கொண்டே நின்றன. புஷ்பகனும் வலி தாளாமல்புரள்வதும், அழுவதும் பெருமுச்செறிவதும் ஈசனை நிந்தித்தவண்ணம் கூக்குரலிட்டான்.

இரவு சுமார் பன்னிரண்டு மணியிருக்கலாம். ஆகாயவெளியில் ஓர் ஜோதியுண்டாயது. பொழுது புலர்ந்ததெனப்புஷ்பகன் எழுந்ததாகவிடாய் தீர்க்க நினைத்தான். பின் வலி தாளாமல் ஆகாயத்தைப் பார்க்கவும் நீலமேக ச்யாமள வர்ணராய், லக்ஷ்மி ஸமேதராய் கருடாரூடராய் புன்னகை தவழ்ந்த முகத்தினராய்,

"அப்பனே! அஞ்சற்க! வருந்தவேண்டாம். நாம் உம்மைப் புனிதமாக்கவே ஆட்கொண்டோம். இப்பிறப்பில் நீ யாதொரு தீமையும் செய்யாவிடினும் சென்ற பிறப்பில் ஓர் உத்தம அந்தணராகவிருந்தீர். அதுசமயம் சாயங்கால நேரத்தில் பசுக்களை வதைசெய்யும் ஓர் மிலேச்சன் கட்டவிழ்த்து ஓடிவந்த பசுவொன்றைப் பின்பற்றித் தங்களை நோக்கி வந்தான். அவன் உம்மைக் கூவியழைத்து அதை வளைத்துக் கொடுக்குமாறு வேண்டினன். நீரும் காரணம் தெரியாமல் அதைவளைத்து அவன் கையில் ஒப்படைத்தீர். மிலேச்சன் பசுவைக்கொண்டுபோய் வாளுக்கிரையாக்கினன். ஆகையால் அப் பசுவின்வதை தோஷம் உம்முடைய முன்கைகளைப் பற்றிக்கொண்டது. ஆதலால் உம் முன்கைகள் துண்டிக்கப்படுமாறு செய்தது நம் சோதனையேயாகும். இனி நீர் இப் பிறவியிலிருந்து விடுபடக் கங்கை புனித நீராடி நமது உலகத்தை அடையக்கடவீர். உமது பக்திக்கு மெச்சினோம். பக்த உலகில் நாம் வர்ணாச்ரம தர்மத்தை அறவேயொழிப்போம். நாம் பலபல வழிக கொண்டாடப்பட்டாலும் உலக மக்களிடம் பொதுப்படையான ஓர் பரம்பொருளாக இலங்குகிறோம் என்பதை உம் சரித்திரத்தின் மூலம் நிரூபித்தனம்'' என அருள் வாக்கு செய்தி மறைந்தனர். ஜோதியும் மறைந்தது. ஆதவனும் கீழ்த்திசையில் தன் ப்ரபையுடன் புஷ்பகனுக்கு உத்திரவளித்தனன். புஷ்பகன் கங்கையில் புனித நீராடி ஐயன் திருவடி சார்ந்தனன்.


## வெண்குஷ்டம், பெரு வியாதி

இம்மருந்தை உபயோகித்தால் இவ்விரு வியாதிகளும் ஒழியும். ஹக்கீம்கள், வைத்தியர்கள், கவிராஜர்களின் வைத்தியத்தில் பலனேற்படாமல் போயிருந்தால்கூட இதை உபயோகியுங்கள். பலனில்லையேல் ரூபா 500 இனாம். விலை ரூபா 2.

**Vaidyaraj Akhil Kishore Ram,**
No, 32/5, P. O. Katrisarai (Gaya)

## "குப்த மந்திரம்"

ரூபா 100 இனாம்.

லக்ஷம் லக்ஷமாகப் பணத்தைச் செலவழித்துச் சாதிக்க முடியாத காரியங்களை இந்த மந்திரத்தை ஏழு தடவை ஜபித்துச் சாதிக்கலாம். கஷ்டமெதுவுமில்லை. முன் தயாரிப்பு அவசியமில்லை. யாவரும் உங்களை நேசிப்பார்கள். இது ஓர் 'வசீகரண மந்திரம்' உங்களுக்கு அதிர்ஷ்டமுண்டாகும்; வியாஜ்யத்தில் வெற்றியும், வியாபாரத்தில் லாபமும் அளிக்கும். பலனில்லையென நிரூபிப்பவர்க்கு ரூ 100 இனாம். தபால் செலவு உள்பட ரூ 2-7.

SIDDHA MANTRA ASHRAM
No 33/6, P.O. Katrisarai (Gaya)

## ரூ. 100 இனாம்

(மாந்திரீக மோதிரம்)




காதல் விஷயங்களில் வெற்றியைத் தரும். பரீக்ஷையில் தேர்ச்சி உண்டாகும், உத்தியோகம், புத்திர பாக்கியம், செல்வம் முதலியவைகளைத் தரும். வியாஜ்ஜியங்களில் வெற்றி, வியாதிகள் நீங்கும். அதிர்ஷ்டம் உண்டாகும். இதை வாங்கி வைத்துக் கொள்ளுங்கள். விலை ரூ. 2.

BENGAL MESMERISM HOUSE,
(S M.) Panchpota, BENGAL

# ஜம்புலிங்கத்தின்

## திருவிளையாடல்கள்

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

உலக:—இதைச் சொல்ல மட்டும் வாய்திறந்ததே அந்த வாய், நான் வந்தவுடன் திறக்கக் காணோமே!

ஜெய:—உங்களுக்காக இஷ்டமிருக்கும்போது வருகிறது. இல்லாவிட்டால் 'வருகிறேன்' என்று சொல்லியிருந்தாற்கூட யாதொரு தகவல்களும் சொல்லிவிடாமலேயே நின்றுவிடுகிறது. இப்படித்தானே!

உலக:—அடடா! நேற்று வரவில்லையே. அதற்காகவா?

ஜெய:—நேற்று வரவில்லையோ, முந்தின நாள் வரவில்லையோ. அதை நானேன் சொல்லவேண்டும்? தங்கள் மனதுக்குத் தெரியாதா? [என்று சற்று பிணங்கினாள்.]

உலக:—என்ன ஜெயர்! இதற்கெல்லாம் கோபித்துக் கொள்வார்களா! நேற்று உன்னிடமிருந்து சென்றவுடன், ஒரு முக்கிய ஜோலியாய் ஒருவரைப் பார்க்க வேண்டியிருந்தது. உன்னிடம் பேசிக்கொண்டிருந்து விட்டேன். உன்னுடன் இருக்கும்பொழுது இந்த உலகின் நினைவு எனக்கேது! உன்னிடம் அனுமதி பெற்றுக்கொண்டு, போய்க்கொண்டிருந்தபொழுதுதான் அது ஞாபகம் வந்தது. உடனே அங்கு சென்று, அவரைக் கண்டு பேச வேண்டியதையெல்லாம் பேசி முடித்துவிட்டுத் திரும்பும்பொழுது மணி ஒன்பதாய் விட்டது! நீ தூங்கிவிட்டிருப்பாய், உன்னைத் தொந்திரவுசெய்யக்கூடாதென்றெண்ணிக் கொண்டு, இருந்துவிட்டேன்.

ஜெய:—ஆஹா! அடடா! ஐயோ பாபம்! எவ்வளவு உருக்கம்! இந்த ஜாலமெல்லாம் யாரிடம்? உம்?—உம்—உங்களைச் சொல்வானேன்? நீங்கள் ஆண் பிள்ளை. எவ்வளவோ ஜோலி. எங்கெங்கோ செல்ல வேண்டியிருக்கும்! யார்யாரையோ காண வேண்டியிருக்கும், பேசவேண்டியிருக்கும்—டிப்—போகிறது. இப்பொழுது ஜோலி ஒன்றும்......?

உலக:—ஜோலியா! இருக்கிறது. சொல்லட்டுமா? [என்று திடீரென்று கட்டிப்பிடித்து ஒரு முத்தம் கொடுத்தார்]

ஜெய:—[மேலுக்குக் கோபம் கொண்டவளைப்போல] போதும், விடுங்கள். இப்படியா கண்டகண்ட இடத்திலெல்லாம். யாராவது வந்துவிட்டால்? உங்கள் ஜோலிகளெல்லாம் இப்படித்தானிருக்

என்று புரளி செய்துகொண்டிருக்கும்பொழுதே முதல் மணி அடித்தது.

உலக:—முட்டாள் பயல்! சமயந் தெரியாமல் மணியை அடிக்கிறான்!

ஜெய:-உங்களுடைய பேச்சே பேச்சு! அன்றையதினம் 'மணியை ஏன் இன்னும் அடிக்கவில்லை? வீட்டிற்குப் போக வேண்டும்' என்று அவசரப்பட்டீர்களே! இன்று—

உலக:—அது கிடக்கட்டும்—நீ இன்று முதல் சினிலேயே நடிக்கவேண்டுமல்லவா?

ஜெய:—ஆம் ஏன்?

உலக:—ஹும்—சரி, [என்று வெளியே செல்லத் திரும்பினார்]

ஜெய:—இன்று அப்பா வரவில்லை. நீங்கள் கட்டாயம் வருவீர்களென்று சொன்னேன். என்னை வீட்டில் கொண்டுபோய் விட்டு விட்டு—

உலக:—ஆகா, உத்திரவுப்படி

என்று சொல்லி வெளியே சென்று, முதல் வரிசையில் போடப்பட்டிருந்த ஆசனங்களில் ஒன்றிலமர்ந்து, நாடகம் ஆரம்பிக்கப்பட்டு முடிவடைவதை எதிர்பார்த்திருந்தான்.

X

"குடி உயரக் கோன் உயரும்." அதாவது, ஒரு தேசத்தில் எவ்வளவுக்கெவ்வளவு குடிகள் க்ஷேமமாயிருக்கிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு அந்தத் தேசமும் சுபிக்ஷமாயிருக்கும் தேசம்சுபிக்ஷப்பட்டால் அதையாள்கின்ற அரசனும் அதிகச் செல்வாக்குள்ளவனாயிருப்பான் என்ற மூதுரை இதன்கருத்தை நன்றாக உணர்ந்துகொண்டே, நமது சென்னை நகர பரிபாலன சபை, தனது ஆதிக்கத்தின் கீழ் வாழும் மக்களது சுகாதாரத்தைக் கருதி, இராப்பகலாகக் கண்ணுங் கருத்துமாய் உழைத்து வருகிறது. இதைப் படிக்கும் நேயர்களின் மனதில், சிற்சில சந்துகளில் நுழையும்போது, புராணங்களில் 'நரகம்' 'நரகம்' என்று சொல்லுகின்றதே அந்த இடம் இப்படித்தான் இருக்குமோ என்று சந்தேகிக்கத்தக்க நிலைமையில், நமது மூக்கிற்கும், கண்களுக்கும் மகா அருவருப்பைக் கொடுக்கக்கூடிய நிலைமையிலிருப்பது முன் தோன்றுமானாலும், அது கீழ்த்தரச் சிப்பந்திகளின் சோம்பேறித்தனமும், அங்கு குடியிருந்து வரும்


# உன் குழந்தையின்

# உத்தமமான துணைவன்.

சுத்தமாகவும் சிறப்பாகவும் மருந்தூட்டிய குடிகூரா டால்கம் (Cuticura Talcum) தான் குழந்தையின் இளமையான தோலைத் தேற்றி, உல்லாசமான வாசனை உண்டாக்கும். குழந்தைக்கு ஸ்நானம் செய்த பிற்பாடு குடிகூரா டால்கம் (Cuticura Talcum) தூளை உடம்பின்மேல் தூவினால், பதரும், எரிப்பும் வராதபடி காப்பாற்றும். குழந்தையின் தோலை சரியான பக்குவத்தில் வைக்கச் செய்யும்.




குடிகூரா டால்கம் (Cuticura Talcum) தான் நேர்த்தியாகவும் பரிசுத்தமாகவு மிருப்பதினால், உலகமுழுதலும் வைத்தியர்களும், தாதிகளும் இதை குழந்தையின் கட்டிளமைத் தோலுக்கு உபயோகப் படுத்தும்படியாகபுகழ்ந்தொப்பு வித்திருக்கிறார்கள். இந்த காரணத்தினாலேதான் ஸ்திரிகளும் இந்தத் தூளை ஸ்நானம் செய்த பிற்பாடு உபயோகித்து சந்தோஷ மடைகிறார்கள். அதுவுமல்லாமல், இந்தத்தூளை உபயோகித்து ஸ்திரிகள் பதரையும் எரிப்பையும் போக்கச் செய்து களிப்படைகிறார்கள். அது வேர்வையைத்தணிக்கிறது; தோலின் சூடான மினுக்கத்தை நீக்கி, திரேகத்துக்கு முழுதலும் இனிப்பான வாசனை கொடுக்கும்.

எல்லா மருந்து கடைகளிலும் பஜார்களிலும் வாங்க அகப்படும்.

குடிகூரா டால்கம்

CUTICURA TALCUM

குடிகூரா டால்கம் (Cuticura Talcum) தான் வேண்டுமென்று இன்றைக்கே கேள்.






கொசுக்களைக் கொல்ல உபயோகமற்ற "கிருமி நாசினிகளை" நம்பாதீர்கள்

பிளிட் தெளியுங்கள்

# FLIT

"பிளிட்" என்ற பெயருடன் விளங்கும் போலிச் சரக்குகளை நம்பாதீர்கள். கறுப்புப் பட்டையுடன் கூடிய சோல்ஜர்கொண்ட மஞ்சள் டின்னிலேயே "பிளிட்" விற்கப்படுகிறது. இடக்குகளில் "பிளிட்" தெளியுங்கள். ஊர்வன அதைத் தொட்டு மடிகின்றன.




ஸோல்ஜர் உருவம் இல்லாத டின் பிளிட் அல்ல.

அசிரத்தையும் காரணமே தவிர, நகரபரிபாலன சபையை அவ்வளவு பொறுப்பாளியாக்க முடியாது. ஜனங்களின் நன்மையைக் கவனிப்பதற்காகவென்றே ஏற்பட்ட சபை, சுயநலங் கொஞ்சமும் கருதாது, அச்சபையின் நோக்கத்தை நிறைவேற்றி வைப்பதற்காகப் பொதுஜன சேவையில் ஊக்கங் காட்டிவரும் சில பிரமுகர்களை அங்கத்தினர்களாகப் பொதுஜனங்களாலேயே தேர்ந்தெடுக்கப் பெற்றுக்கொண்டு, அவசியத்திற்குத் தக்கபடி மாதம் எத்தனைமுறை வேண்டுமானாலும் ஒன்றுகூடிச் செய்யவேண்டிய காரியங்களை நன்றாகக் கலந்து யோசித்துச் செய்துகொண்டு வருகிறார்கள்.

ஜனங்களின் தேக ஆரோக்கியத்திற்காகப் பாடுபட்டு வருவது போலவே, அவர்கள் மனதும் சற்றே உற்சாகமடைய வேண்டும் என்று சிற்சில அங்கத்தினர்களால் பிரேரிக்கப்பட்டுச் சாயங்கால வேளைகளில் சிங்காரத் தோட்டங்களிலும், சமுத்திரக் கரைகளிலும், இரண்டு மணி நேரம், ஒலிபரப்புங்கருவி மூலம் (ரேடியோ) நல்ல இனிய சங்கீதத்தைப் பரவச் செய்து, அன்று பகல் முழுதும் தத்தம் ஜீவனத்திற்காக வேலை செய்து சலிப்படைந்திருக்கும் மனிதர்களின் மனதில் சற்றே உற்சாகம் ஊட்டப்பட்டு வருகிறது.

ஒருநாள் சாயங்காலம், திருவல்லிக்கேணிக் கடற்கரையில் வழக்கம்போல, ஜனங்கள் ரேடியோவின் மூலம் சங்கீதத்தைக் கேட்டானந்திக்க ஏராளமாகக் கூடியிருந்தார்கள். அன்றைய தினம் திருவனந்தபுரமெங்கும் பிரக்யாதி பெற்ற வாசுதேவ பாகவதரின் பாட்டாகையால், சங்கீத ப்ரியர்களனைவரும் ஏராளமாகக் குழுமியிருந்தனர். வழக்கப் பிரகாரம் ரேடியோ 5-30 மணிக்கு வேலை செய்ய ஆரம்பித்தது.

“சென்னை பேசுவது, வைக்கம், வாசுதேவ பாகவதர், ‘அம்மராவம்மா’ என்னும்பாட்டைக் கல்யாணி ராகத்தில் பாடுவார்” என்று கேட்டது. இரண்டொரு விநாடிகளில் பாட்டு கேட்கவாரம்பித்தது. அங்கு கூடியிருந்தவர்கள் சித்திரப் பதுமைகள்போல அசைவற்று, தம்மையும் மறந்து பாட்டில் லயித்துப்போயிருந்ததிலிருந்தே, பாட்டின் சிறப்பை நாம் அறிந்துகொள்ளலாம். சுமார் பதினைந்து அல்லது இருபது நிமிஷங்கள் கழிந்திருக்கும். அப்பாட்டு முடிந்தது ஒரு நிமிஷம் ஓய்வு. பிறகு மறுபடியும் “சென்னை பேசுவது அடுத்த பாட்டு ஷண்முகப்ரியாவில் பாடப்படும்” என்று கேட்டது. நாலைந்து விநாடிகளுக்குள் ஷண்முகப்ரியா ராகம் ஆரம்பிக்கப்பட்டது. இப்படி பல பாட்டுகள்பாடப்பட்டன.

மணி ஏழடிக்கும் சமயமாயிற்று. திடீரென்று பாட்டு நின்றது! உடனே நகர பரிபாலன சபையில் வைத்திருக்கும் கடியாரம் ஏழடித்தது கேட்டது! மறுபடியும் ரேடியோ பேச வாரம்பித்தது. ஆனால் வழக்கத்திற்குமாறாக “சென்னைவாசிகளுக்கும் மற்றும் சம்பந்தப்பட்டவர்களுக்கும் இன்றைய தினம் சரியாகப் பத்து மணிக்கு, மதராஸ் பாங்கியின் கஜானா அறையில் ஓர் பாகம் சூறையாடப்படும் என்பதை அறிவித்துக் கொள்ளுகிறேன், ஜம்புலிங்கம்” என்று கேட்டது. ஒருவிநாடி எங்கும் நிசப்தம் குடிகொண்டிருந்தது. மறுவிநாடி பாட்டு கேட்கவே ஜனங்களினிடையே மிகுந்த பரபரப்பு ஏற்பட்டு, கூட்டங் கலைய வாரம்பித்தது. இது நடக்கும் என்று சிலரும், வீண் மிரட்டல் என்று சிலரும் கூறிக்கொண்டே தத்தம் மனம் போன போக்கிற்குத் தக்கவாறு தத்தம் வீடு நோக்கினர். ஆனால், எல்லோர் மனத்திலும், இது உண்மையாக நடக்கிறதா இல்லையா என்பதைக் காணவேண்டுமென்று ஆவல் கொண்டிருந்தார்களென்பது விளங்கிற்று. நகர பரிபாலன சபையின் காரியாலயத்தின் டெலிபோன் ஓயாமல் அடிக்கத் தொடங்கி, டெலிபோன் குமாஸ்தாவைக் கேழ்ப்பவர்களுக்குப் பதில் சொல்லி முடியாதபடித் திக்குமுக்காடச் செய்துவிட்டது. இன்ஸ்பெக்டர் தங்கத்துரை, கமிஷனரால் ஏவப்பட்டு, நகர பரிபாலன சபைக்கு விரைந்து சென்றுகொண்டிருந்தார். அங்கு சென்று விசாரிக்க, யாரோ இரண்டு ஆட்கள், முகமூடியணிந்து, கையில் ரிவால்வர்களைத் தயாராய்ப் பிடித்துக்கொண்டு, திடீரென்று, பாடகர் பாடிக்கொண்டிருக்கும் அறையினுள் புகுந்து, தங்களைக் கூச்சலிடாமலும், அப்படியிப்படி அசையாமலிருக்கும்படிக்கும் ஜாடை செய்து பயமுறுத்தி, இரண்டொரு நிமிடங்கள்பேசிவிட்டு, வந்ததைப்போலவே திடீரென்று சென்றுவிட்டார்கள்” என்பதையறிந்துகொண்டு, கமிஷனருக்கு ரிப்போர்ட் செய்யத் திரும்பினர்.

கமி:—அந்தப் பயல் எப்படி அங்கு முளைத்தான்?

தங்கத்துரை தான் விசாரித்து வந்ததைச் சொன்னார். அதைக் கேட்ட கமிஷனர், அங்குமிங்கும் உலாவிக் கொண்டே சற்று உரக்க, தனக்குத்தானே,

“வாஸ்தவத்திலேயே அப்படிச் செய்வானா? அல்லது வீண் மிரட்டலாயிருக்குமா? ஆனால், இது வரையில் அவன் வீண்மிரட்டல் எந்த விஷயத்திலும் செய்ததாய்த் தெரியவில்லையே”

என்று இரண்டொரு நிமிஷம் யோசித்துப் பின் ஏதோ முடிவிற்கு வந்தவராய், டெலிபோனண்டையிற் சென்றார்.

“ஹலோ எக்ஸ்சேஞ்—எ. இன்ஸ்பெக்டர்—

இன்ஸ்பெக்டர் டிப்பியா? சரி—இருநூறு ரிஸர்வ்கான்ஸ்டேபில்களையழைத்துக் கொண்டுபோய் மதராஸ் பாங்கியைச் சுற்றி வளைந்துகொள்ளும். கூட்டத்தை அதிகமாய் நெருங்கவிடாமல் எட்டவே நிறுத்திவிடும். தயாராய் எந்தச் சமயத்திலும் புறப்பட நூறு பேர்கள் ஆயுதங்களுடன் ஆஜரிலிருக்கட்டும்; சீக்கிரம்”

என்று பேசிவிட்டு தான் உடுத்திக் கொள்ளச் சென்றார்.

ஐந்து நிமிடங்களில், புதுப்பேட்டையில், ரிஸர்வ் கான்ஸ்டேபில்கள், அவரவர்கள் இருந்த நிலைமையை விட்டு, உடனே எழுந்து, தம்தம் உடைகளை மாட்டிக் கொண்டு துப்பாக்கிகளையும் எடுத்துக்கொண்டு, தயாராய் நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் லாரிகளில்ஏறிக்கொண்டனர். இதற்குள் எ. இன்ஸ்பெக்டர் அங்கு வந்து சேர்ந்து, பின்னால் புறப்பட வேண்டியதற்கு நூறு பெயர்களை ஸார்ஜெண்ட் பிரௌனின் தலைமையில் விட்டு மற்றப் பெயர்களைச் செல்ல உத்திரவு கொடுத்தார். லாரிகள் புறப்பட்டன. தானும் தன் வண்டியிலேறிக் கொண்டு பாங்கியை நோக்கிச் சென்றார்.

(தொடரும்.)


## நரைமயிரை அகற்றுங்கள்



உங்களது தலைமயிர் வெகுகாலமாகவோ, மிக அதிகமாகவோ நரைத்திருந்தால் **விவலைன் ஹேர் ஆயிலை** உபயோகித்தால் நரை நீங்கித் தலைமயிர் கருகருவென்று பழையபடிப் பிரகாசிக்கும். இன்றே **விவலைன்** எண்ணெயை உபயோகியுங்கள். அதிக நரையில்லாவிடில் சிறிய பாட்டில் ரூபா 1-12. நரை முற்றியிருந்தால் பெரிய பாட்டில் ரூ. 3. ஏககாலத்தில் 3 பாட்டில்கள் வாங்கினால் தபால் செலவு இனாம்.

சயண்டிபிக் பப்ளிஷிங்கம்பெனி,
(மெடிகல் டிபார்ட்மெண்டு, S. 15)
பவானிப்பூர், — கல்கத்தா.

மதராஸ் ஸ்டாக்கிஸ்டு:—
ஜே. ஹஸாரிமால் & கம்பெனி, 260, சைனாபஜார் ரோட்,

ஸப் ஸ்டாக்கிஸ்டு:—
தாதா & கம்பெனி, மருந்து வியாபாரிகள், 52, நைனியப்ப நாயக்கன் தெரு, பி. டி. மதராஸ்.

செகந்தராபாத் ஸ்டாக்கிஸ்டு:—
பரேக் பிரதர்ஸ், ஜம்மா மஸ்ஜித்

## பிரபல ஜோதிஷர்



மஹாராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசுபெற்றவர். ஒரு ஜாதகம் கணிக்க ரூபா 2. 1 வருஷ மாதவாரிப் பலன் எழுத ரூபா 5. எதிர்காலத்தைப் பற்றின 3 கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணா 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார், 58, லஸ் சர்ச் ரோடு, மைலாப்பூர், மதராஸ்.

டாக்டர் ஜம்மி வெங்கடரமணய்யாவின்

# லிவர்க்யூர்

குழந்தைகள் ஈரல், குலைகட்டிகளுக்கு நிகரற்றது என்று டாக்டர்களாலும், பெற்றோர்களாலும் போற்றப்பட்டது.

அநேக கண்காட்சிகளில் தங்கமெடல்களும், நற்சாட்சி பத்திரங்களும் பெற்றது.

ரங்கூன் ஏஜெண்டு:—ரிலையன்ஸ் பார்மசி, 125-12, பின்னட் வீதி—ரங்கூன்.



# நவ நாகரீகம்

## கிராம வாழ்க்கை

(காசினி எழுதியது.)

* * * 'நேற்று மத்தியானம் டிபனுக்கு போண்டா போட்டுக் கொண்டிருந்தேன். அப்பொழுது கொஞ்சம் நெய் கடன் வாங்குவதற்காக எங்கள் பக்கத்தாத்து மாட்டுப் பெண் வந்தாள். அவர்களுக்கு வாடிக்கையாக நெய் போடுகிறவள் அன்று முறையாக இருந்தும், ஏதோ வரவில்லையாம். 'நாளைக்குக் கட்டாயம் வந்து விடுவாள். கடை நெய் எங்களுக்குச் சுத்தமாகப் பிடிப்பதில்லை. இராவேளைக்கு மட்டும் ஒரு கிண்ணம் நெய், எங்க மாமியார் வாங்கி வரச் சொன்னாள் என்றாள். 'இரு; இந்த ஈடு போண்டாவை எடுத்து விட்டுத்தரேன்,' என்று சொல்லிக்கொண்டே, போண்டாக்களை வாறினேன். அவசரப்பட்டது, ஜல்லிக் கரண்டியில் இருந்து, இரண்டு போண்டா உருண்டு எண்ணெயில் விழ,எண்ணெய்வாரி இறைத்தது. உடனே அவள், 'குழிவான ஜல்லிக் காண்டி வாங்கப்

வாழ்க்கை வாழப் போன பொழுது, மன்னி, வறுவல் வறுக்கக் கம்பித்தட்டு முதலிய சாமான்கள் வாங்கினாள் தானே சமைக்க எவ்வளவோ சௌகரியமாக இருந்தது. வேடிக்கையாகவும் இருந்தது. இந்தமாதிரி வாழ்க்கை இல்லை. நாகரீகமான கிராம வாழ்க்கை வாழ்ந்தோம்! என்றாள். இவளுடன் பேச்சு என்னவென்று, நெய்யைக் கொடுத்து அனுப்பி விட்டேன். குழிவான ஜல்லிக் கரண்டியாவது, வறுவல் கம்பித் தட்டாவது, நாகரீகமான கிராம வாழ்க்கையாவது? விளங்க எழுது? என்று நீ கேட்டிருக்கிறாய்.

இவ்வித வாழ்க்கையில் சில நாட்களுக்குமுன் நான் கலந்து கொள்ள நேரிட்டது. உன் கேள்விக்குச் சரியாக பதில் எழுதுகிறேன். என் சிநேகிதி ஒருத்தி, போன மாதம் பம்பாயில் இருந்து இந்த ஊருக்கு வந்தாள். இரண்டு குழந்தைகள் உண்டு; பெண்ணுக்கு ஒன்பது வயதாகிறது! பிள்ளைக்கு ஐந்து வயதாகிறது. அவளு

உத்தியோகம், சதிபதி இருவர்களுக்கும், பம்பாய் பட்டணத்தில் வெகு நாளாக வசித்ததில் சில காலமாவது கிராம வாழ்க்கை வாழ வேண்டும் என்று மிகவும் ஆசையாக இருந்ததாம். இதற்காக இரண்டு மாதம் லீவு எடுத்துக் கொண்டு இங்கு வந்தார்கள்.

பட்டணத்துக்குப் பத்து மைல்களுக்கு அப்பால் உள்ள ஒரு கிராமத்தில், ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்து, அதில் குடி ஏறினார்கள். என்னைத் தங்களுடன் வரும்படி மிகவும் வற்புறுத்தினார்கள். சில தினங்களுக்குமுன், நான் அங்கு சென்றிருந்தேன்.

நான் அதிகாலையிலேயே அங்கு புறப்பட்டுச்சென்றேன். அவர்கள் வீட்டை அடையும் பொழுது, மணி ஆறரை இருக்கும். என் சிநேகிதி காபி போட்டுக் கொண்டிருந்தாள். ஒரு ஸ்டவ்வில் ஜலம் கொதித்துக்கொண்டிருந்தது. குழந்தைகள் இரண்டு கட்டில்களில் தூங்கிக் கொண்டிருந்தார்கள். என் சிநேகிதி அகமுடையான் சிவசர்மா பல் துலக்கிக்கொண்டிருந்தார். காபி பில்டரில் கொதித்தஜலத்தைக் கொட்டிவிட்டு, ஒரு அலுமினியம் பிடிப் பாத்திரத்தில் பாலை விட்டு, ஸ்டவ்வின்மேல் என் சிநேகிதி வைத்தாள். அதற்குள் சர்மா குழந்தைகளை எழுப்பிப் பல் தேய்க்க பிரஷ், மெழுகு முதலியவைகளை எடுத்துக் கொடுத்தார். 'கிராம வாழ்க்கை என்று நாங்கள் சமையலாள் வைத்துக்கொள்ளவில்லை. வீட்டு அலுவல்களைப் பார்க்க ஒரு நாயர் மட்டும் வைத்திருக்கிறோம். நான் சமையல் வேலைகளைச் செய்வேன்; அவர் குழந்தைகளைக் கவனிப்பார், என்று என் சிநேகிதி, விளக்கிக் கூறினாள்,

(40-ம் பக்கம் பார்க்க)



தமிழ்க்கலைச் சொல்லாக்க மகாநாடு சென்ற ஞாயிற்றுக்கிழமை சென்னை பச்சையப்பன் கலாசாலை மண்டபத்தில் நடைபெற்றது. ஸ்வாமி விபுலாநந்தா தலைமை வகித்தார்.


## ஐந்து வருஷ சேவை.

வி. குப்புசாமி ஐயர், பி. ஏ. பி. எல்., அட்வகேட்.

கைலாஸபுரம், திருநெல்வேலி ஜங்ஷன், 23-3-35.



கேசவர்த்தினியை உபயோகித்ததால் அடைந்த அனுகூலத்தைத் தெரிவிப்பதில் எனக்குப் பரம ஸந்தோஷம். இழந்த கூந்தலை மீட்டுக்கொடுப்பதாலும், கூந்தலை நீண்டு வளரச்செய்வதாலும், இது நமது சிறுமிகளுக்கேற்றதொரு பிரஸாதமே! சிறுவயதிலிருந்து உபயோகித்தல் மிகத் தரம். நாங்கள் ஐந்து வருஷகாலமாக இதை உபயோகித்து வருகிறோம்.

(கையொப்பம்) வி. குப்புசாமி ஐயர்.

மாத உபயோகத்துக்குப் போதிய கேசவர்த்தினி விலை அணு 12; கேசவர்த்தினி ஷாம்பு விலை அணு 12; மேற் செலவு வேறு.

தென் இந்திய ரஸாயன சாலை,

கணக்குப்பிள்ளை உத்தியோகம்

(28-ம் பக்கத் தொடர்ச்சி)

நாயை அடித்தது உண்டா?'' என்று கேட்டார்.



பிராமணன் அடித்ததை ஒப்புக்கொண்டு, "நான் செய்தது தவறுதான். நான் முன்கோபத்தால் செய்துவிட்டேன். அதன் காரணமும் என் வறுமை தான். எனக்கே ஒருவரும் பிச்சை போடாதிருக்கையில் என்னுடன் என் காலைச் சுற்றிக்கொண்டு இந்த நாயும் வந்தால் யார் பிச்சை போடுவார்கள்'' என்று கூறித் தன்னை மன்னிக்கும்படி வேண்டிக்கொண்டான்.

பிராமணன் தன்னை மன்னிக்கும்படி கேட்டுக்கொண்டு விட்டதால் எவ்வாறு அவனைத் தண்டிக்க முடியும் என்று ஸ்ரீராமனும் யோசித்துக் கடைசியில் வசிஷ்டரை அழைத்து, இதற்கு என்ன தண்டனை விதிக்கலாம் என்று கூறும்படி கேட்டார்.

வசிஷ்டர் ஆலோசனை செய்து ஒன்றும் புரியாமல் நாயை நோக்கி, "பிராமணன் செய்த குற்றத்திற்காக என்ன தண்டனை விதிக்க வேண்டுமென்கிறாய்'' என்று கேட்டார்.

நாய், "இந்தப் பிராமணனை ஒரு மாதத்திற்குக் கோவிலில் கணக்குப் பிள்ளை உத்தியோகம் பார்க்கும்படி உத்திரவு இட வேண்டும். அதுவே போதுமான தண்டனை'' என்றது.

வசிஷ்டர், "இதுவா தண்டனை? இது மிகவும் ஸௌக்கியமான வேலை அல்லவா?'' என்றார்.

அதற்கு நாய், "அப்படி அல்ல'' என்று கூறிவிட்டு தான் அவ்வாறு சொன்னதற்குக் காரணத்தைப் பின் வருமாறு கூறியது:—

"நான் முன் ஜென்மத்தில் மனிதப் பிறவியாய் இருந்தேன். நான் வேலை செய்துவந்த இடம் ஒரு கோவிலுக்கு அருகாமையில் இருந்தது. அந்தக் கோவில் கணக்குப்பிள்ளை ஒவ்வொரு நாளும் கோவிலின் தீவட்டியை எடுத்துக்கொண்டு இரவில் வீடு செல்வது வழக்கம். அதே வெளிச்சத்தில் நானும் வீடு செல்லுவேன். அந்தக் காரணத்தினால் இந்த ஜென்மத்தில் நான் நாயாகப் பிறந்து இருக்கிறேன். நானே இவ்விதம் இருக்கையில் தீவட்டியையே உபயோகித்த அந்த கணக்குப்பிள்ளையின் கதி என்ன ஆயிற்றோ? எனக்குத் தெரியவில்லை.''

இவ்வாறு கூறிவிட்டு நாய் உயிர் துறந்தது. பிராமணன் தான் கோபத்தினால் செய்ததை மன்னிக்கும்படி இறைவனை வேண்டிக்கொண்டான்.





"அம்மா! பக்ஷணம் எனக்கென்றாள்"

சற்று முன் தான் குழந்தை ராஜம் வாசலில் விளையாடிக் கொண்டிருந்தாள். "கம்'' என்று ஒரு வாசனை உள்ளிருந்து வெளிக் கிளம்பியது. தாயார் பக்ஷணங்கள் தயார் செய்கிறாளென்றெண்ணி ஓடோடியும் உள்ளே வந்து,

"அம்மா! பக்ஷணம் எனக்கென்றாள்''

"கண்ணே! ரசமல்லவோ அடுப்பில் கொதிக்கிறது. தின்பண்டமேதுமில்லையே'' என்றாள்.

"அன்னையே! ரசத்திற்கு இவ்வளவு அபரிமிதமான வாசனையேது?'' என்று குழந்தை ஆவலுடன் வினவினாள்.

"செல்வமே! இது எல் ஜி. பெருங்காயத்தின் இன்பகரமான வாசனை. கொஞ்சந்தான ரசத்தில் போட்டேன். அதற்குள் வாசனை ஊரைத் தூக்குகிறது'' என்று அம்மையார் பதிலளித்தார்.

உடனே சாப்பிட வேண்டுமென்று ஆசைப்பட்ட குழந்தையை அன்னையும் எடுத்து அமுது படைத்தாள். வயிறு நிறைய உண்டபின் குழந்தை ராஜம் மகிழ்ச்சியுடன் பள்ளிக்கூடத்திற்கு ஓட்டம் பிடித்தாள். எல். ஜி. தான் எல். ஜி அதற்கு ஒப்பும், உயர்வும் இல்லை எல். ஜி. கொள்வோர் எழில் பெறுக.

**லால்ஜி கோது & கம்பெனி,**

பிரபல பெருங்காய வியாபாரிகள்.

பம்பாய் — சென்னை — கும்பகோணம்



**"குஜராத்சமாச்சார்"** (தினப் பதிப்பு)

**"பிரஜாபந்து"** (வாரப் பதிப்பு)

[1898-ல் ஸ்தாபிக்கப்பட்டவை]

குஜராத்தில் பிரபல்யம் வாய்ந்தவை. ஆமதாபாத்தினின்று பிரசுரிக்கப்படுபவை.

குஜராத்தில் உங்கள் வியாபாரம் பெருக வேண்டுமானால் இப்பத்திரிகைகளில் விளம்பரஞ் செய்யுங்கள்.

ஆங்கிலத்திலேயே கடிதங்கள் எழுதவேண்டும்

Manager, Gujerat Samacher & Praja Bandhu

AHMEDABAD.



BLACKLOCK & MACARTHUR LTD., GLASGOW




வெள்ளை வர்ணத்தில் 541 வெள்ளை தான உயர்ந்தது. வெண்மை மாறாது. வெடிக்கவும் செய்யாது. அதிக ஸன்னமாதலால் ஆண்டுவரும். 541 ஈய வெள்ளையை வாங்கி உபயோகித்தால் கூலி மிச்சமாகும். அடிக்கடி வர்ணம் கொடுக்கவேண்டிய அவசியமுமிராது. 541 கெக்கின்பேரில் மான்மார்க்கும் இரண்டு ஈய ஸீல்களும் இருக்கிற கெக்காகப் பார்த்து வாங்குங்கள். போலிகளை வாங்கி ஏமாறாதீர்கள். செந்தூரத்தில் "மான்மார்க்"செந்தூரம்தான் உயர்ந்தது. இவைகள் எல்லா வர்ண வியாபாரிகளிடத்திலும் கிடைக்கும்.



"உங்கள் வருங்கால அதிர்ஷ்டம்"





பண்டிட் M. R. K. மூர்த்தி. ஜோதிஷ கலா வல்லபர்

பண்டிட் E. S. K. சுவாமி. ஜோதிஷ தத்வ ஞானி

ஒரு ஜாதகம் கணிக்க ரூ. 1, ஜாதகத்தின் பேரில் கேள்வி 1-க்கு ரூ. 1, ஒரு வருஷ பலன் மாதவாரி எழுத ரூ. 2, நேரில் ஜாதகம் பார்க்க ரூ. 5, ஆயுள் வரை பொதுப் பலன் எழுத ரூ. 10.

# கண்ணோட்டம்-பிரமுகர்கள்









மன்னர்பிரானைக் கொல்ல முயர்சித்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டு ஒரு வருஷக் கடுங்காவல் தண்டனையடைந்த ஜார்ஜ் மாக்மோஹன்.

குப்பகோணத்தில் "பாரதிதின"க் கொண்டாட்டத்தை யொட்டி நடந்த பாரதி கீதப் போட்டியில் முதல் பரிசு பெற்றவரும் 'சுதேசமித்திரன்" கும்பகோணம் நிருபருமான் ஸ்ரீமான் என். ஸ்ரீனிவாஸாச்சாரியார். (இரண்டாவது படம்) மேற்படி போட்டியல் இரண்டாவது பரிசுபெற்ற ஸ்ரீமான் சுப்ரமணிய ஐய்யர். (மூன்ருவது படம்) பெண்கள் பகுதியில் முதல் பரிசுபெற்ற அட்வகேட் ஸ்ரீமான் வி சிதாராமய்யர் குமாரி ஸ்ரீமதி வத்ஸலா குமாரி.



மதுரை ஜில்லா கிழையூர் ஸ்ரீமான் கருப்பையாவுக்கும் மதுரை காங்கிரஸ் காரரான ஸ்ரீமதி தாயம்மாளின் குமாரி ஸ்ரீமதி மீனாக்ஷிக்கும் திருப்பரங்குன்றத்தில் சீர்திருத்த முறையில் விவாகம் நடைபெற்றது.



நெல்லிக்குப்பம் காங்கிரஸ் கமிட்டித் தலைவர் டாக்டர் தில்லை கோவிந்தராஜபிள்ளைக்குச் சமீபத்தில் விவாகம் நடந்தது.



சென்னை ரிகார்டுகள் காரியாலய அதிகாரியாக நியமிக்கப்பட்டிருக்கும் டாக்டர் பி. எஸ். பாலிகா.



இங்கிலாந்திலிருந்து வந்துள்ள மிஸ். ஜி. டி. மெக்கலஸி. இவர் சென்னை அனாதை விடுதியின் தலைவராக விருப்பார்.



வடக்கனந்தல் நாட்டார் வி. டி. இளையாப்பிள்ளைக்குச் சமீபத்தில் விவாகம்



வைசியர் வகுப்பில் விதவா விவாஹம். சேலத்தில் வைசியர்களுக்குள் முதல் தடவையாக ஒரு சமூகச் சீர்திருத்த விவாகம் நடத்தப்பட்டது. கன்னியாப் பெண்ணாயிருக்கும் போதே விவாகம் நடந்து கணவனை இழக்க நேர்ந்த ஸ்ரீமதி நாகரத்னம் அம்மாளை ஸ்ரீமான் ராஜு



கோயமுத்தூர் ஸ்பெஷல் டெபுடி தாசில்தார் ஸ்ரீமான் வி. இ ஷண்முக முதலியார் குமாரன் சுப்ரமணியனுக்கும் திருவாரூர் போலீஸ் ஸர்க்கிள் இன்ஸ்பெக்டர் ஸ்ரீமான் சிதம்பர முதலியார் குமாரி ஸ்ரீமதி மீனாக்ஷிக்கும் சமீ



பேரளம் பி. டபிள்யூ டி. சூபர்வைஸர் ஸ்ரீமான் ராமய்யா பிள்ளையின் குமாரன் ராதாகிருஷ்ணனுக்கும் மருவிப்பட்டணம் முனிஸிபாலிட்டி கமிஷனர் ஸ்ரீமான் சம்பந்தம்பிள்ளை

## நவநாகரீகம்

(37-ம் பக்கத் தொடர்ச்சி)

குழந்தைகள் ஓவல்டினும் ட்ஸ் கஞ்சியும் ரொட்டியும் வண்ணெயும் சாப்பிட்டார் ள். நாங்கள் காப்பியும் ராட்டியும் அவல் உப்புாவும் சாப்பிட்டோம். நாயர் ாத்திரங்கள், தட்டுக்களை ல்லாம் கழுவி, படுக்கை டித்து, வீட்டைப் பெருக்கி த்தி செய்தான். வீட்டுப் றக்கடையில் ஒரு வாய்க் ால் இருந்தது. இதில் ஸ்நா ாம் செய்து, அவர் அவர்கள் ணியை அவர் அவர்களே து வைத்துக்கொண்டோம். ழந்தைகள் மிகவும் உல்லாச ாகத் தண்ணீரில் விளையாடி ார்கள். பிறகு, கொஞ்ச நே ம், அன்று காலையில் வந்த ின சரிப் பத்திரிகைகளைப் படித்தோம். இதற்குள், மூன்று ஸ்டவ்களை மூட்டி, காய்வகை நறுக்கிப் பாத்திரங்களைச் சமையலுக்குத் தயாராக நாயர் எடுத்து வைத்தான்.

என் சிநேகிதி சமையல் செய்தாள். குக்கரில் சாதம், பருப்பு, கறி முதலியவைகளை வைத்து, ஒரு ஸ்டவ்வில் வைத்தாள். ஒன்றில் பொரிச்ச குழம்புக்கு வைத்தாள். ஒன்றில் வறுவல் வறுத்தாள். உருளைக் கிழங்கைத் துருவி, அலம்பி, கம்பியினால் பின்னப் பட்ட, காம்பு உடைய ஒரு தட்டில் போட்டு வைத்தாள். ஒரு அலுமினியம் ஸாஸ்பானில் (இது அதிக ஆழமில்லாத பிடி உள்ள பாணலி போன்ற தட்டு) எண்ணெயை ஸ்டவ்வில் வைத்து, அது காய்ந்ததும், கம்பித் தட்டை அப்படியே எண்ணெயில் விட்டு, இரண்டு தரம் குலுக்கி, வறுவல் பொரிந்ததும், அப்படியே தூக்கி எடுத்து விட்டாள். சமையல் வெகு சிக்கிரமாகவே முடிந்தது. சாப்பாடானதும், கொஞ்ச நேரம் வம்பு பேசிவிட்டு எல்லாரும் தூங்கினோம். நாயர் எல்லாம் சுத்தி செய்து உலர்ந்த துணிகளை மடித்து வைத்து, மத்தியானக் காப்பிக்குத் தயார் செய்தான். என் சிநேகிதி காப்பி போட்டாள். ஆரஞ்சு, ஆபிள், மலை வாழை முதலிய பழங்களுடன் காபி சாப்பிட்டோம். இரவுக்குச் சப்பாத்தி, சாதம், தயிர், ஊறுகாய், முதலியவை ஊறுகாய் சட்டினி எல்லாம் பாட்டில்களில் வாங்கப்பட்டவைகளே. இருட்டினதும் இரண்டு பெட்ரோமாக்ஸ் விளக்குகளை நாயர் ஏற்றினன். எல்லாருக்கும் காம்புக் கட்டில்களில் படுக்கை போட்டுக் கொசுவலை கட்டினன். வரும் விருந்தினர்களுக்கு என்று இரண்டு கட்டில் படுக்கை முதலியவை ...சிகமாகவே என் சிநேகிதி

...தைகள் சிக்கிரமாகவே தூங்கச் சென்றுவிட்டார்கள். நாங்கள் வெகு நேரம் வரையில் படித்துக் கொண்டும், சொக்கட்டான் முதலிய ஆட்டங்கள் ஆடிக் கொண்டும் இருந்து விட்டுப் பிறகு உறங்கச் சென்றோம். பழங்கள், தினசரிப் பத்திரிகைகள் முதலிய சாமான்கள் எல்லாம் தினம் அனுப்பும்படி சர்மா ஏற்பாடு செய்திருந்தார். இவ்விதம் வெகு உல்லாசமாக நாகரீக முறையில் இவர்களுடன் நான் கிராமவாழ்க்கை வாழ்ந்தேன். இதற்குள், புதுத் தண்ணீரில் அலைந்ததின் பயனாகப் பிள்ளைக்கு நல்ல தொண்டைக் கட்டு ஏற்பட்டு விட்டது. குழந்தையைச் சமாதானம் செய்து தூங்க வைத்துவிட்டு, என் சிநேகிதி பேபரை எடுத்தாள். மூவரும் கொஞ்சநேரம் மௌனமாகப் படித்தோம். திடீரென்று என் சிநேகிதி, 'பட்டணம் எங்கும் டிப்தீரியாவாம்; பேபரில் தொண்டைக்கட்டை அசட்டை பண்ணக் கூடாது என்று போட்டிருக்கு. ரவி தொண்டையை இப்பொழுதே பார்க்க வேண்டும்' என்றாள். தூங்கிக்கொண்டிருந்த குழந்தையை எழுப்பி அழ விட்டு, ஒரு மின்சார தீவட்டியின் உதவியுடன் தொண்டையைச் சோதித்தோம்; ஒன்றும் புரியவில்லை. போதாக் குறைக்கு உடம்பும் கதகத வென்று சுட்டது. உடனே தந்தி கொடுத்து, காலையில் ஒரு டாக்ஸி தருவித்துப் பட்டணத்திற்கு வந்து விட்டோம். என் சிநேகிதி, 'கிராம வாழ்க்கையாவது அத்வானம்' என்று சொன்னவள், குழந்தைக்கு ஒன்றுமில்லை என்று தெரிந்ததும், மறுபடியும் அங்கு சென்றிருக்கிறாள். என்னையும் பத்து நாளாவது வந்து இருக்கும்படி சொல்லி இருக்கிறாள். மற்றைய விஷயங்கள் அடுத்த கடி...




"நீம் டூத் பேஸ்ட்" உங்கள் பற்களை வெகு அழகாகவும், வெண்மையாகவும் சுத்தி செய்கிறது; நீங்கள் வெற்றிலை போட்டு மென்றால் உங்கள் பற்கள் மாதுளம் பழ விதைகளை யொத்திருக்கும்; அதாவது சிகப்பு நிறத்தினிடையே அவை முத்துப் போல் பிரகாசிக்கும்.



'Neem' TOOTH-PASTE

பவுடர் வேண்டுமாயின் "மார்கோப்ரீஸ் நீம் பல் பவுடர்" உபயோகியுங்கள். கல்கத்தா கேமிகல்.

T P 1



உங்கள் குழந்தைக்கு

டோங்கரேயின்

பாலாம்ருதமும்

கோடுங்கள்

டோங்கரேயின் பாலாம்ருதம் என்பதென்ன ?

1. டோங்கரேயின் பாலம்ருதம் குழந்தைகளுக்கான ஓர் சிறந்த டானிக்.

2. நீடித்த தொந்தரவான இருமலையும், சாதாரண ஜுரத்தையும் போக்குகிறது.

3. மெலிந்து கிடக்கும் குழந்தைகளுக்கு வலுவூட்டுகிறது.

4. பல் முளைக்கையில் குழந்தைகளுக்கு உதவி செய்கிறது.

மதராஸ் ஏஜண்டுகள் :

ஏ. பி. பரேர், 268, சைனபஜார் ரோட்.

ஸ்தாபிதம் 1913

சவரன் மாத்து தங்கத்துக்கும், அசல் வெள்ளி சாமான்களுக்கும், மேன்மையான வேலைப்பாட்டுக்கும் உத்திரவாதமுள்ள இடம்.

கரம்சந்த் சபில்தாஸ் & ஸன்

நகை வியாபாரிகள்

175, சைனபஜார் ரோட் — மதராஸ்.

காட்லாக்குக்கு எழுதவும்.




## பிரான்ஸின் சமாதான ஆர்வம்

பிரெஞ்சு பிரதம மந்திரி சமீபத்தில் செய்த ஒரு ஒலி பரப்புப் பிரசங்கத்தில் பின்வருமாறு குறிட்பிட்டார்:—பிரெஞ்சு மக்கள் அனைவரும் ஒருமுகமாக சமாதானம் வேண்டுகின்றனர். தாய்நாட்டின் பந்தோபஸ்து நீடித்திருப்பதற்கவசியமான சமாதானத்தில் அவர்கள் எப்பொழுதும் ஒருமுகமான ஆர்வம் கொண்டவர்களாயிருப்பர்.

பிரான்ஸ் தன் கருத்துப்படி நடக்குமாறு பிறர் எவரையும் டயமுறுத்திக் கட்டாயப்படுத்த விரும்பவில்லை. அதே முறையில் பிறர் எவரும் நேரடியாகவோ, மறைமுகமாகவோ, தன்னைப் பயமுறுத்திக் கட்டாயப்படுத்த பிரான்ஸ் அனுமதிக்காது.

சீக்கிரத்தில் துவங்க விருக்கும் முக்கியமான சர்வதேசிய விவாதத்தில் பிரான்ஸ் இந்த மனப்பான்மையுடனேயே கலந்துகொள்ள எண்ணியிருக்கிறது. மற்ற நாடுகளில் எத்தகைய ஆட்சி முறைதான் இருந்துவந்தபோதிலும் அவற்றுடன் நேசமாக வாழவேண்டுமென்பதே பிரான்ஸின் விருப்பம்.

யுத்தத்துக்கு மூலகாரணமாக இருக்கக்கூடிய தகாறுகள் தனக்கும், வேறெந்த நாட்டுக்கும் ஏற்பட்டிருந்தாலும் அவற்றை நீக்க பிரான்ஸ் தன்னாலானவரை முயன்று வருகிறது."

## அபிஸீனிய மன்னரின் வேண்டுகோள்

அபிஸீனியமன்னர் லண்டனிலிருந்து உலக மக்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்திருக்கிறார். அதில், "எதியோபியாவில் மூன்றில் இரண்டுபாகங்களுக்கதிகமான பிரதேசம் இன்னும் இத்தாலியரின் ஆதிக்கத்துக்குட்படவில்லை. மேற்கு அபிஸீனியாவில் ஒரு தற்காலிகமான எதியோபிய அரசாங்கம் திருப்திகரமாக நிர்வாகம் நடத்திவருகிறது.

எஞ்சியுள்ள மூன்றில் ஒரு பாகத்தில், இத்தாலியர் விமானங்களிலிருந்து விஷ வாயுவைப் பிரயோகிப்பதுபோன்ற கொடூரமான முறைகளால், தங்கள் ஆதிக்கத்தை நிலை நாட்டி வருகின்றனர்.

உலக மக்கள் எதியோபியர்களை இத்தாலியரின் அக்கிரம ஆதிக்கத்தினின்றும் விடுவிப்பதன் மூலம், தங்கள் நல்லுணர்ச்சியையும், நேர்மைப் போக்கையும் செயலளவில் காட்டுமாறு நான் விண்ணப்பித்துக் கொள்ளுகிறேன்" எனத் தெரிவித்திருக்கிறார்.

—

## சர்வ தேச சங்கக் கூட்டம்

சர்வதேச சங்கத்தின் கூட்டம் ஆரம்பமாகியிருக்கிறது. சர்வதேச சங்க விதிகளைச் சீர்திருத்துவது சம்பந்தமாகப் பல நாடுகளிலிருந்தும் கிடைத்துள்ள பதில்களை சங்க அங்கத்தினர்களுக்கனுப்புவ ✻தென்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. எதியோபியப் பிரதிநிதி சர்வதேச சங்கக் கூட்டத்திற்கு வராமலிருந்தால்தான் இத்தாலி கலந்து கொள்ள முடியும் என்று முஸோலினி விதித்திருப்பதாக இத்தாலியப் பிரதிநிதி அவிஞல் கூறியிருக்கிறார். இதை ஒரு கமிட்டி தீர்மானிக்கும். ஆனல் எதியோபியாவை நீக்குவது கஷ்டமல்லவென்று தெரிகிறது. தற்போதுள்ள நிலைமையில் ஆயுதப் பரிஹாரணம், பொருளாதாரப் புனரமைப்பு, சர்வதேச சங்கத்தைத் திருத்தியமைப்பது ஆகியவற்றை பிரான்ஸ் வற்புறுத்துமென்று கூறப்படுறது.

—

## ஸ்பெயின் நிலைமை

மாட்ரிட் நகரைக் கைப்பற்றுவதற்காகக் கலகக்காரர்கள் முயன்று வருகின்றனர். ஆனல் அது அவ்வளவு சுலபமாக இராதென்று தோன்றுகிறது. மாட்ரிட் நகருக்குச் செல்லும் முக்கிய சாலைகள் சர்க்கார் துருப்புகள் ஆக்ரமணத்திலேயே இருந்து வருகிறது ஆகையால் சமீபத்தில் பலமான யுத்தம் நடைபெறக் கூடும்.

—

## "ஸ்திரீகள் செய்யவேண்டிய வேலை வீட்டில்தான்"

"பெண்களுக்கு! வீடுகளைச் சுத்தமாகப் பெருக்கி குடித்

(4-ம் பக்கம் பார்க்க)

பொருளடக்கம்.


| விஷயம் | பக்கம் |
|---|---|
| பிரபஞ்ச வர்த்தமானம் | 1 |
| இந்திய வர்த்தமானம் | 2 |
| நாட்டு நடப்பு-சித்திர கண்ணுடி | 3 |
| விநோதக்கொத்து | 5 |
| ஜம்புலிங்கத்தின் திருவிளையாடல்கள் (புதிய தொடர்கதை) | 6 |
| தென்னிந்தியப் பிரமுகர்கள் | 9 |
| பழிக்குப் பழி (சிறுகதை) | 11 |
| ஸங்கீதப்பகுதி | 2 |
| பாழடைந்த பாட்டை | 15 |
| தையல் வேலை | 17 |
| திருவாரூர் | 18 |
| நாய்வால் (ஹாஸ்யக்கதை) | 23 |
| கணக்குப் பிள்ளை உத்யோகம் (சிறுவர் பகுதி) | 28 |
| அதிசயம்-ஆனல் உண்மை | 30 |
| புலால்விற்ற புஷ்பகன் | 31 |
| நவநாகரீகம் | 37 |
| கண்ணேட்டம் - பிரமுகர்கள் (படங்கள்) | 3? |





ஜகத்ரஷக
ஸ்ரீ ஷண்முக யந்திரம்
125,6600. ஜனங்கள் போற்றுவது
பரீக்ஷை வெற்றி, ஜீவன விருத்தி, சொற்பன மிரட்சி, சத்துரு அடக்கம், வழக்கு ஜெயம், புத்திர விருத்தி, குடும்ப ஒற்றுமை, நோய்பேய் ஒழிதல், யந்திரம் 1க்கு ரூ 2.
மாந்திரீக மருத்துவ ஆபீஸ்,
வாலாஜாபாத், P.O, S.I.R. சென்னை.






பாலஸ்தீனத்திற்குப் புறப்படுவதற்காகப் பிரிட்டிஷ் படைகள் வாட்டர்லூ ஸ்டேஷனில் தயாராகவிருந்த காட்சி. (வலது பக்கம்) பாலஸ்தீனப்




### காங்கிரஸ் தலைவரின் தமிழ்நாட்டு விஜயம்

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட் த் தலைவரான ஸ்ரீமான் எஸ். த்தியமூர்த்தியின் கோரிக் கைக்கிணங்க பண்டித ஜவஹர் ால் நேரு அக்டோபர்மாதம் -ந் தேதி சென்னைக்கு விஜயம் செய்வார். பண்டித ஜவஹர் ஸ்ரீமான் சத்திய மூர்த்தியுடன் இரண்டுவாரகாலம் தமிழ்நாட் டில் சுற்றுப்பிரயாணம் செய் வார்.

நிலைமையைப் பற்றி திட்ட மாக ஒரு முடிவுக்கு வரக்கூட வில்லையென்றும், இவர் தேக நிலையை நன்கு பரிசிலனை செய்ய வேண்டுவது அவசிய மென்றிருந்தால் இவரை கல் கத்தாவுக்கு மாற்ற வேண்டு வது அவசியமென்றும் டாக் டர்கள் தங்கள் யாதாஸ்தில் சிபார்சு செய்திருப்பதாகத் தெரிகிறது.

——

மெண்டிலுள்ள நான்கு கக்ஷி களின் பிரதிநிதிகளும், உள் நாட்டிலாகா உத்தியோகஸ் தர்களும் வந்திருக்கின்றனர். ஒரே சாம்ராஜ்யத்திற்குட் பட்ட தேசமென்ற நோக்கத் தில் இந்தியாவுக்கு தென் ஆப் ரிக்காவின் நல்லுணர்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தியா அபிவிருத்தியடை வதில் இது முக்கியமான சமயமாகையால் இச்சம யம் இதைத் தெரிவித்

மூலையில் இடமளிக்கப்பட்ட தால் மேயர் அந்தஸ்திற்குத் தக்க மரியாதை செய்யப்பட வில்லையென்று மேயர் ஸ்ரீமான் ஜம்னுதாஸ் மேட்டா கருதி ஞர். அவர் இதைப் பார்த்து விட்டு அமைதியாக வெளி யேறிவிட்டார். சிறந்த விருந் தில் இச்சம்பவம் எல்லோருக் கும் ஆச்சரியத்தை உண்டுபண் ணியது.

மேயர், ஷெரிப், இவர்களு டைய சமூக அந்தஸ்து, சம்பந் தம்முதலியவற்றை நிஷ்கர்ஷை செய்வதற்காக இவ்விஷயம் கார்ப்பொரேஷன் கூட்டத்தில் விவாதத்திற்கு வரக்கூடும்.

——

### இடிதாக்கி மரணம்

சென்ற 13-ந் தேதி கோம் பைக்குச் சமீபத்தில் மலையி

(4-ம் பக்கம் பார்க்க)



இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ள தென்னாப்பிரிக்கா தூது கோஷ்டியினர்,

### ஸ்ரீமான் சுபாஷ்போஸின். தேக நிலை

ஸர் நீலரத்ன ஸர்க்காரும் ார்ஜிலிங் ஸிவில் ஸர்ஜன் பஜர் டிரம்மண்டும் ஸ்ரீமான் பாஷ்சந்திரபோஸின் தேக லைமையைப்பரிசிலனை செய் தற்காக இந்தியா கவர்ன் மண்டால் நியமிக்கப்பட்ட ர்கள். இவர்கள் ஸ்ரீமான் பாஸைப்பார்த்துவிட்டு ஒரு ாதாஸ்தை அனுப்பியிருப்ப ாகத் தெரிகிறது.

எக்ஸ்ரே பரீக்ஷைசெய்ய டியாததாலும், மலத்தில் ஷப்பூச்சி யிருப்பதுபற்றிப் ரிசிலனைசெய்யவசதியில்லாத ாலும், ஸ்ரீமான் போஸ் தேக

### தென் ஆப்பிரிக்கா தூது கோஷ்டி

தென் ஆப்பிரிக்கா நல் லுணர்ச்சி தூதுகோஷ்டி மிஸ் டர் ஸி. எச் ஹாப்மீரின் தலைமையில் இந்தியாவுக்கு வந் திருக்கிறது. பம்பாயில் வந் திறங்கியவுடன் மிஸ்டர் ஹாப் மீர், கோஷ்டியின் நோக்கத் தைப்பற்றிப் பத்திரிகை நிரு பர்களிடம் பின் வருமாறு கூறியிருக்கிறார்:—தென்னாப் பிரிக்கா பார்லிமெண்ட் தூது கோஷ்டி மரியாதையையும் நல் லெண்ணத்தையும் வெளியிட வேண்டி இப்பிரயாணத்தை ஏற்றுக்கொண்டிருக்கிறது. இந் தக் கோஷ்டியில் இரண்டு மந் திரிகள் இருக்கின்றனர். பார்லி

துக்கொள்ளுகிறோம். இப்பெ ரிய தேச மகாஜனங்களின் பிரச்னைகளை அறிந்து நாங்கள் நாடு திரும்பக்கூடுமென நம்பு கிறோம். பூர்வ காலத்தில் விஷயங்களை நன்கறியாதத ஞல், பல தப்பபிப்பிராயங்க ளேற்பட்டிருக்கின்றன. நேரில் நெருங்கிப் பழகுவதனால் இந் தத் தப்பபிப்பிராயங்களை நீக்க இடமேற்படக் கூடும்.

——

### மேயருக்கு அவமதிப்பா?

சென்ற 21-ந்தேதி சனிக்கி ழமை இரவு பம்பாய் ஷெரிப் தென் ஆப்பிரிக்கா தூது கோஷ்டிக்கு டாஜமகால் ஹோட்டலில் நடத்திய விருந் தில் மேயருக்கு எங்கோ ஒரு

உயர்ந்த
வைரங்கள்
T. R.
ஜோஷி & சன்ஸ்,
Diamond Mercha ts
38, ஏகாம்பரேசுவரர் அக்ரஹாரம்
பி. டி. மதராஸ்

AN OPPORTUNITY
WHICH MUST NOT BE MISSED!
The renowned 'DAWSON' Lever wrist watch now offered at considerably reduced price for a short period only; GUARANTEED FOR 5 YEARS. Can be returned and full price obtained if found unsatisfactory even aft r a week's use.



'DAWSON' is the only Low Priced High Class Lever wrist watch that you can choose with full confidence to obtain LONG and CONTINUOUS service with perfect reliability and accuracy. Its wonderful design and pretty small size, strong construction and elegant appearance make it equal to many watches sold elsewhere at four times the price.
Packing & Postage As. 7/- extra.
Bright Nickle Silver Case Rs. 6-4-0
Highly Gold Plated Case Rs 6-12-0
Above with RADIUM dial As. 8 extra
THE UNION TRADING CO.,
2, Doyehatta St, Calcutta

# நாட்டு நடப்பு-சித்திரக் கண்ணாடி



"ஹிட்லர் யுவர் இயக்கம்." இப்பெயர் கொண்ட இயக்கத்தைச் சேர்ந்த யுவர்கள் ஹெர் ஹிட்லர் முன்பு அணி வகுத்துச் சென்ற காட்சி. ஹிட்லர் பிரதி வந்தனம் செலுத்துவதையும் காணலாம்.



பிரிட்டிஷ் தொழிற் சங்கக் காங்கிரஸின் கூட்டம் ப்ளிமத்தில் நடைபெற்றது. அதில் பிரஸன்னமாகவிருக்கச் சென்ற தலைவர்கள் (இடதுபக்கமிருந்து) மேஜர் அட்லி, மிஸ்டர் பிண்ட்லே தொழிற் சங்கக் காங்கிரஸ் தலைவர், ஸர் வால்டர் ஸிட்ரேன், காரியதரிசி, மிஸ்டர் ஜேம்ஸ் மிடில்டன், தொழிற் கட்சிக் காரியதரிசி.



சென்னை ஹிந்துஸ்தான் பாங்கி மானேஜிங் டைரக்டர் பதவியிலிருந்து விலகிக் கொள்ளும் பண்டித வித்யாசாகர் பாண்டியாவுக்குச் சமீபத்தில் ஒரு உபசாரம் நடத்தப்பட்டது.





பம்பாய் பார்ஸி ஜிம்கானா அங்கத்தினர்களுக்குக் கிரிக்கெட் ஆட்டத்தின் நுணுக்கங்களைக் கற்றுக் கொடுப்பதற்காக [illegible]

## பிரபஞ்ச வர்த்தமானம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தனக் காரியங்களில் கவனம் செலுத்துங்கள். அவ்வாறு செய்தால் உங்களுக்குரிய கணவர்களை எளிதாகப் பெறுவீர்கள்" என்ற வாக்கியங்கள் கொண்ட பெரிய விளம்பரங்கள் பெர்லின் நகரம் முழுவதும் ஒட்டப்பட்டிருக்கின்றன. இன்னும் சில விளம்பரங்களில், "வர்த்தகத்துறையிலுள்ள ஸ்திரீகளுக்கு! கடைகளையும் காரியாலயங்களையும் விட்டுச் செல்லுங்கள். நீங்கள் செய்ய வேண்டிய வேலை உங்கள் வீட்டில்தான்" எனத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

——

### பாலஸ்தீன நிலைமை

அராபியர், யூதர்களைத் தாக்கியிருப்பது பற்றிச் செய்திகள் வந்திருக்கின்றன. இதைத் தவிர பாலஸ்தீன நிலைமையில் மாறுதலேற்படவில்லை. இது நிற்க காலனி மந்திரி இங்கிலாந்தில் பிரிட்டிஷ் சர்க்காரின் கொள்கையைப்பற்றிக் கூறியிருக்கிறார். ராணுவச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவருவது ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

——

### மாண்டவர் மீண்டார்?

பிரஸ்டனைச் சேர்ந்த ஒரு நிலக்கரி வியாபாரியின் மனைவி சென்ற 14-ந் தேதி தனது கணவனின் ஈமக்கடனைச் செய்து முடித்தாள். ஆனால் அவள் மறுநாளே தனது கணவனைத் திரும்பப் பெற்றிருக்கிறாள்.

மிஸஸ் கிபிள் என்ற மாது சென்ற மாதம் 6-ந் தேதி தனது கணவனுடன் கடற்கரையிலுள்ள ஒரு கிராமத்திற்குச் சென்றிருந்தாள். அவளது கணவன் கடலுக்குக் குளிக்கச் சென்றார். நெடுநேரமாகியும் திரும்பிவரவில்லை. கடற்கரையில் அவருடைய துணிகள் காணப்பட்டதிலிருந்து அவர் நீரில் மூழ்கி இறந்துவிட்டதாகக் கருதப்பட்டது. பிறகு கடலில் அகப்பட்ட ஒரு பிரேதத்தைக் கண்டு அது தன் கணவனுடையதுதான் என அந்த ஸ்திரீ தெரிவித்தாள். அவருடைய பல் வைத்தியரும் அந்தப் பிரேதத்தின் பற்களைப் பார்த்து, அப்பிரேதம் மிஸ்டர் கிபிளினுடையதுதான் எனச் சொன்னார்.

மறுநாள் அந்த வைத்தியர் பிரஸ்டனில் மிஸ்டர் கிபிளைச் சந்தித்தார். உடனே அவரது மனைவிக்குச் செய்தி யனுப்பப்பட்டது. தான் குளிப்பதற்காக நீரில் இறங்கியதற்குப்பின் என்ன நடந்ததென்பது தமக்கு ஞாபகமில்லையென்றும், பிறகு தமக்கு பிரக்ஞை ஏற்பட்டபொழுது தாம் ஒரு ரயில்வண்டியில் இருந்ததாகவும் மிஸ்டர் கிபிள் கூறினர்.

## இந்திய வர்த்தமானம்

(2-ம் பக்கம் தொடர்ச்சி)

விருந்து வந்துகொண்டிருந்த கூலிகளின் மேல் இடி விழுந்ததில் அதே இடத்தில் 3-கூலிகள் இறந்து போயினர். கோம்பை யூனியன் குப்பை மேட்டின்மீதும் இடி விழுந்து குப்பை வெந்து சாம்பலாகி விட்டது. அக் குப்பைக்கு சமீபத்தில் ஆடுமேய்த்துக்கொண்டிருந்த சிறுவன் ஒருவனுக்கு ஒளி அடித்து தலை மயிரெல்லாம் கருகி விட்டது. ஆனால் பையனுக்கு அதிக ஆபத்து இல்லை.

கோம்பைக்கு மேற்கே 3-மைல் தூரத்தில் திருவாங்கூர் பலையடிவாரத்தில் 3-மணி நேரம் விடாமல் மழை பெய்தது பெரும் பாகமான இடங்களில் பருமனான ஆலங் கட்டி மழை பெய்ததாகத் தெரிகிறது.

——



மைசூர் பத்திரிகைக்காரர்கள் சங்கம் திவான்பகதூர் ஸா டி. விஜயராகவாச்சாரியாருக்கு ஒரு விருந்து நடத்தியபோது எடுத்த படம்.

### போலீஸ் தடியடி

கூலியில் குறைவேற்படுத்தியதற்காக இரண்டுமாதங்களுக்குமுன் மேற்கிந்திய தீக்குச்சி தொழிற்சாலை தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். இது சம்பந்தமாக 40 பேர்கள் கைது செய்யப்பட்டனர். வேலை நிறுத்த நிலைமை சென்ற வாரம் கடுமையாகப் போய்விட்டது. ஸ்திரீகள் தலைமையில் சென்ற வேலை நிறுத்தக்காரர்கள் கோஷ்டிக்கும் போலீஸுக்கும் தகராறு ஏற்பட்டது. இதில் போலீஸார் சாமான்யமாகத் தடியடிப் பிரயோகஞ் செய்ய நேரிட்டது. பின்னர் பலர் கைது செய்யப்பட்டனர்.

——

### நான்கு காலுள்ள கோழி

விருதுநகருக்குத் தெற்கே மூன்றாவது மைலிலுள்ள சூலக்கரை ரயில்வே ஸ்டேஷன் பாயின்ட்ஸ்மென் ஸ்ரீமான் இஸ்ரவேல் கவுண்டர் வீட்டில் அன்னார் வளர்த்துவந்த கோழி முட்டையிட்டுக் குஞ்சு பொறித்ததில் நான்கு கால்களுள்ள கோழியைப்பொறித்திருக்கின்றது. அங்க அடையாளங்களில் அசல் கோழிதான்; கால்கள் மட்டும் நான்கு. அவையும் யாதொரு ஊனமின்றி இருக்கின்றன. ஏராளமான ஜனங்கள் இவ்வதிசயக் கோழியைப் போய்ப் பார்த்து வருகின்றனர்.

——

### மிருக பலியைத் தடுக்க உண்ணா விரதம்

மதத்தின் பெயரால் கல்கத்தா காளிகாட் கோவிலில் பிராணிகள் பலி கொடுக்கப்படுவதை ஆக்ஷேபித்துப் பண்டித ராமச்சந்திர சர்மா உண்ணா விரதமனுஷ்டித்து வருகிறார். இவர் சென்ற வருஷமும் உண்ணா விரதமிருந்தார். பின்னர் பண்டித மாளவியா தலையிட்டதன் பயனாக இதைக் கைவிட்டார். சிலவிடங்களுக்குள் ஸ்ரீமான் சர்மா செல்லக் கூடாதென தடை யுத்தரவும் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

——



டாம்கோ விற்பனை இலாகா
19A, வாணியர்தெரு, மதராஸ்
டாடா ஆயில் மில்ஸ் கம்பெனிலிமிடெட், டாடாபுரம் & பம்பாய்
T. S. 536



சிறைவார்டன்:—இந்த அறையில் எவ்வளவோ பெயர்கள் வருகின்றனர்; எவ்வளவோ பெயர்கள் போகின்றனர்.

கைதி:—வாஸ்தவம்தான். நான் மட்டும் இங்கு 20 வருஷங்களாக விருக்கிறேன்.

——

"என்னப்பா, பால் சுத்தமானதுதானா?"

"ஆம், சாமி, தண்ணீரை வடிகட்டித்தான் விட்டிருக்கிறது"

——

இரண்டு அண்டை வீட்டுக்காரர்கள் சண்டையிட்டுக் கொண்டனர்.

ஒருவன்:—வேஷத்தைப் பாரு, வேஷத்தை, குரங்காட்டி மாதிரி, ஒரு குரங்குதான் பாக்கி.

மற்றொருவன்:—இவன் ரொம்ப அழகுபோலத்தான். குரங்காட்டித்தான் பாக்கி.

——

தோட்டக்காரன்:—பையா! என்டா மாமரத்தின்மேல் ஏறினாய்?

பையன்:—அணில், கிளி முதலியனவெல்லாம் மரத்தில் ஏறிப் பழங்களை வீணாக்குகின்றன. அவைகளைத் துரத்துவதற்காக மரத்தில் ஏறினேன்.

——

கர்வி:—என்னை யாரென்று தெரியுமா?

வழிப்போக்கன்:—எனக்குத் தெரியாது. உனக்குக்கூடவா தெரியாது.

——

டாக்டர்:—நீ எந்த உத்தியோகத்திலிருக்கிறாய்?

நோயாளி:—நான் ஒரு கனவான்.

டாக்டர்:—இந்த உத்தியோகம் உனக்கு ஏற்றதில்லை. இதை மாற்றிக்கொள்.

——

சிறுவன்:—அப்பா உங்களிடமிருக்கும் கிராமபோன் பெட்டியை வாங்கி வரச் சொன்னார். என்னுடன் வேலைக்காரனும் வந்திருக்கிறான்.

"வேறொன்றும் சொல்லவில்லையா?"

சிறுவன்:—"அந்த லோபி கொடுக்கா விட்டால் வந்துவிடு. வேறு யாரிடமிருந்தாவது வாங்கிக் கொள்ளலாம்" என்று சொன்னார்.

——

உபாத்தியாயர்:—நான் உன்னை எதற்காக அடிக்கப் போகிறேன், தெரியுமா?

சிறுவன்:—தெரியாது.

உபா:—உன்னைவிடச் சிறுவனை நீ அடித்ததற்காக நான் உன்னை அடிக்கப் போகிறேன்.

சிறுவன்:—நான் உங்களைவிடச் சிறுவனென்று அடிக்கப் போவதாக எண்ணினேன்.

——

புதிதாக மோட்டார் ஓட்டக் கற்றுக்கொண்டவர், மோட்டாரை ஒரு விளக்குக் கம்பத்தில் மோதிவிட்டார். அதை விசாரிக்கவந்த போலீஸ்காரன், "இவ்வளவு அகலமான தெருவில் விளக்குக் கம்பத்தில் மோதவிடாமல் செய்திருக்கலாமே" என்றான்.

மோட்டார் ஓட்டி:—நான் எவ்வளவோ கூச்சலிட்டுத் தான் பார்த்தேன்

——

கணவன்:—உனக்குப் பரிசு வாங்கிவர மறந்துவிட்டேன்

மனைவி:—பாதகமில்லை. நீங்கள் பரிசாகக் கொடுப்பதற்கு ஐம்பது ரூபாயில் புடவை ஒன்று கடனாக எடுத்துவந்திருக்கிறேன்.

——



சமீபத்தில் இலங்டனில் (லண்டன்) ரொட்டி, பிஸ்கோத்து, முதலியவை செய்பவர்கள் ஒரு பொருட்காட்சியை நடத்தினர் அதில் மன்னர்பிரான் மகுடாபிஷேகக் காட்சி செய்யப்பட்டு வைக்கப் பட்டிருந்தது.


## ஜோதிஷ மகுடவர்த்தனா

இந்து மன்னர் சமஸ்தான 25-வது தலைமுறை ஜோதிஷர்-பீமகவி-சுகர் புஜண்டா சாஸ்திர நிபுணர் இப்பூ



மண்டல புகழுரையில் திரிகால பலன் கூறுவ தில் "உலக சிரேஷ்டர்" என வெற்றி பாமாலையும் தங்க சன்ன தங்கரூ பெற்றவர்.

ஜாதகம் லக்கின நக்ஷத்திர ஸ்புடஞ் செய்து பொதுப் பலன் எழுத ரூ. 1. ஒரு தெசைக்கு புக்தி பலன் ரூ. 2. அஷ்ட வர்க்கம் ஆயுள்வரை புக்தி பலன் ரூபா 7. ஜாதக குறிப்பு முன் பணம் ரூபா 4. தேவை.) 1 வருட மாதா மாதப் பலன் ரூ. 1-8. கேள்வி 6-க்கு ரூ. 1. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை.

புரோபஸர் N. சுப்பிரமணியம்,
நெ. 2 (ஜோதிஷ ஆசிரமம்)
வாலாஜாபாத், S. I. R. சென்னை.



மியூச்சுவல்
அஷ்யூரன்ஸ் கம்பெனி
லிமிடெட்.

தலைமை ஆபீஸ் :
187, மவுண்ட் ரோட், மதரா

நவீன, சாஸ்திர பூர்வமா தாராளத் தன்மை கொண் பாலிஸி ஒப்பந்தங்கள் எம் டம் கிடைக்கும். எல்லோ யும் திருப்தி செய்விப்ப குறைந்த பிரீமிய விகிதங்

டி. வி. ராமமூர்த்தி,
செக்ரிட



# சூதக கோளாறுகள் தீர்ந்துவிட்டன!



ஆயிரக்கணக்கான ஸ்திரீகள் சூதக வியாதிகளை வென்று சந்தான பாக்யத்தையடைந்தனர்.

"வேலன்ஸ் ஸ்திரீ ஸோதரி"

(அபூர்வ மூலிகைகளால் தயாரிக்கப்பட்டது.)

சூதகக் கோளாறுகளை நீக்கி, மலட்டுப் பூச்சிகளைக் கொன்று, கருப்பைக்கு பலந்தந்து, சந்தான பாக்யத்தையளிக்கும் சிறந்த ஔஷதம். அநேக நற்சாக்ஷிகள் பெற்றது. ஸேட் விலை ரூ. 5. விவரத்திற்கு எழுதவும்.



வேலன்ஸ் மெடிகல் ஹால் 61, காரணீஸ்வரர் கோயில் தெரு மைலாப்பூர், சென்னை

நமது புதிய தொடர் கதை

# ஜம்புலிங்கத்தின் திருவிளையாடல்கள்

(ஸ்ரீமான் வ. தே. வரதன் எழுதியது)



## முன் கதைச் சுருக்கம்.

தவமணி, சக்ரபாணி முதலியாரின் குமாரன். முதலியார் இறக்குந்தருவாயில் தம் நண்பர் வேலாயுத முதலியாரிடம் தவமணியையும் தமது திரண்ட சொத்துக்களையும் ஒப்புவித்தார். பிற்காலத்தில் வேலாயுத முதலியார் சொத்துக்களை எடுத்துக்கொண்டு தவமணியை வீட்டை விட்டுச் செல்லும்படிச் செய்துவிட்டார். ஒரு கனவான் ஒரு நாள் தவமணியை மிகவும் கஷ்ட நிலைமையில் கண்டு அவனைப் பராமரித்து வருகிறார்.

ஜம்புலிங்கம் என்பவன் பல கொள்ளைகள் நடத்தி வருகிறான். அவனைப் பிடிப்பது சம்பந்தமாகப் போலீஸ் டெபுடி கமிஷனர் கிருஷ்ணஸ்வாமி நாயுடுவும் இன்ஸ்பெக்டர் சொக்கலிங்கம் பிள்ளையும் யோசிக்கின்றனர். ஆனால் தன் விஷயங்களில் பிரவேசிக்கவேண்டாமென்று ஜம்புலிங்கம் ஒரு கடிதம் எழுதுகிறான். வேலாயுத முதலியார் தமக்கு ராவ்பகதூர் பட்டம் கிடைத்ததற்காக ஒரு விருந்து நடத்துகிறார். அதற்கு ஜம்புலிங்கம் ஜாலவித்தை காட்டுபவனாகச் சென்று வேலாயுத முதலியார் மனைவியின் ஏராளமான பெறுமானமுடைய நகைகளைத் துப்பாக்கி முனையில் எடுத்துச் செல்லுகிறான்.

ஜம்புலிங்கத்தைக் கண்டுபிடிக்கும் வேலையில் இறங்கிய இன்ஸ்பெக்டர்கள் கிருஷ்ணசாமி நாயுடுவும் ராமலிங்கும் அவனிடமே சிக்குகின்றனர். போலீஸ் கமிஷனரின் ஏற்பாட்டின்படி வெளியூரிலிருந்த போலீஸ் அதிகாரியான துரைராஜ் எனபவர் ஜம்புலிங்கத்தைப் பிடிக்க நியமிக்கப்படுகிறார்.

## VIII

[போ]லீஸ் கமிஷனர் தன் [அறை]யில் அன்றைய காலைத் [தபா]ல்களைக் கவனித்துக் [கொ]ண்டிருந்தார். அவர் முகத்தில் வழக்கத்திற்கு மாறாக சங்கடமும், விசனமும் குடிகொண்டிருந்தது. டெபுடி கமிஷனர் கிருஷ்ணஸ்வாமி நாயுடுவும், மாயமாய் மறைந்துவிட்டதால், அதிகமாக ஏற்பட்ட கவலையும், பொறுப்பும், அச்சொற்ப காலத்திற்குள்ளேயே இவரது மூப்பை அதிகப்படுத்திக் காண்பித்தது. இப்படிக் கவலையோடு, தபாற் கடிதங்களைப் பார்வையிட்டுக்கொண்டிருந்த சமயம், இவர் காரியஸ்தன், தன்னெதிரே வந்து நிற்பதையறிந்து தலையை நிமிர்த்திப் பார்த்தார்.

"கம்பெனியிலிருந்து, நாம் ஆர்டர் கொடுத்த பீரோ வந்திருக்கிறது" என்றான்.

கமி:—இன்ஸ்பெக்டர் தங்கத் துரையைக் கூட வைத்துக்கொண்டு அந்த பீரோவை அந்த இடத்தில் கொண்டு வந்து வைத்து, ரிக்கார்டுகளை ஒழுங்காய் வையுங்கள்.

அவன் வெளியே சென்ற இரண்டொரு நிமிடங்களில் தங்கத்துரை முன்னும், அவருக்குப் பின்னால், நாலைந்து கூலிக்காரர்கள் மிக்க கஷ்டத்துடன் பீரோவைத் தூக்கிக்கொண்டு கமிஷனர் அறைக்குள் வந்தார்கள். காரியஸ்தன் காண்பித்தயிடத்தில் பீரோவை ஒழுங்காக வைத்துவிட்டு வெளியே சென்றார்கள். இன்ஸ்பெக்டர் வெளியே சென்றதும், அவரிடம் பீரோ வந்து சேர்ந்ததற்கடையாளமாக ஒரு கடிதத்தில் கையெழுத்தை வாங்கிக்கொண்டு சென்றார்கள். அவ்வேலைக்காரர்களில் ஒருவன் திரும்ப ஓடிவந்து, "எஜமான் அந்தப் பீரோவின் சாவியை குடுக்க மறந்துட்டேனுங்க" என்று ஒரு சாவியைக் கொடுத்துச் சென்றான். சாவியைக் கமிஷனரின் மேஜைமேல்வைக்கச் சென்றார் தங்கத்துரை. மேஜையருகிற் சென்றதும் கமிஷனர்,

"ஏன்? என்ன?" என்றார்.

தங்க:—இந்த—சாவி புதிதாய் வந்த பீரோவின் சாவி—

கமி:—சரி; பீரோவில் அந்த ரகஸிய ரிக்கார்டுகளை ஒழுங்காய் வையும். கூட உதவிக்கு அவனை (காரியஸ்தனை) யும் கூப்பிட்டுக்கொள்ளும்.

அப்படியே செய்வதாய் வணக்கத்துடன் தலையை யசைத்து, அவரது காரியஸ்தனையும் கூட்டி வந்து வைத்துக்கொண்டு பீரோவைத் திறந்தார். கதவைத்திறந்ததும் திறவாததுமாய் இருக்கையிலேயே, பீரோவின் உள்ளேயிருந்ததைக்கண்டு 'ஆ!' என்றலறிக்கொண்டு இரண்டடி பின்னடைந்தார்கள். இவர்கள் அலறியதைக் கேட்ட கமிஷனர், "என்ன! என்ன?" என்று எழுந்து பீரோவினிடம் வந்தார். பீரோவினுள் பார்த்ததும், அவரும் அப்படியே பிரமித்துவிட்டார்.

பீரோவினுள்ளே, தான் வெளியூரிலிருந்து ஜம்புலிங்கத்தின் விஷயமாய் வேலை செய்வதற்கென்றே பிரத்யேகமாய் வரவழைத்த டெபுடி சூப்பரின்டெண்டெண்ட் துரைராஜா, ஒரு நாடோடியைப் போல சாதாரண அழுக்கடந்த உடையில், அப்பீரோவில் சற்று குனிந்தாற்போல உட்கார வைக்கப்பட்டிருந்தார். உடனே தங்கத்துரை, காரியஸ்தன், இவர் ஆக மூன்றுபேருமாய் ஆளுக்கொரு பக்கமாகப் பிடித்து, துரைராஜாவை வெளியே எடுத்துத் தரையில் படுக்கவைத்தார்கள். மூக்கினடியில் கை வைத்துப் பார்த்தார். ஸ்வாசம் வந்துகொண்டிருந்தது. கமிஷனரது நாவில் கொஞ்சம் ஈரம் வந்தது. பக்கத்தில் இருந்தவர்களை ஆந்தைமாதிரி விழிக்காமல், டாக்டருக்குப் போன் செய்யும். [காரியஸ்தனைப் பார்த்து] "அடுத்த அறையில், சீக்கிரம் என்னுடைய, 'காம்ப் காட்டை' தயார்செய்; நான்கு ஆட்களை வரச்சொல்லு" என்றார். அவர்களும் தங்களுக்கிட்ட வேலையைச் செய்யச் சென்றார்கள். இவர் பீரோவினருகில் வந்து பீரோவைக் கவனித்தார். துரைராஜா அடைக்கப்பட்டிருந்த தட்டில் ஒருகடிதம் கிடந்தது. அதைக் கையிலெடுத்தார். தன்னுடைய மேல்விலாஸம் எழுதப்பட்டிருந்தது. உடனே அவ்வுறையை உடைத்துக் கடிதத்தைப் பிரித்தார்.

"டெபுடி சூபரின்டெண்டெண்ட், நீங்கள் பிரத்யேக

மாய் வரவழைத்த துரைராஜாவைப் பத்திரமாய் அனுப்பியிருக்கிறேன். இது முதற் தடவையாகையாலும், துரைராஜாவிற்கும் என் விஷயத்தில் அனுபவம் போதாதாகையாலும் இந்தத் தடவை மன்னித்து, மயக்க மருந்தைக் கொடுத்ததோடு நிறுத்திக் கொண்டேன். இனிமேல் அகப்பட்டுக் கொள்பவர்களுக்கு, எமனுலகைத்தவிர வேறுயிடம் கிடையாதென்பதைக் கண்டிப்பாய் அறியவும். ஜம்புலிங்கம்,"

என்றிருந்தது. கமிஷனரது மனத்தில் சொல்லொணு வியப்பும், கோபமும் ஏற்பட்டன. எவ்விதத்திலும், தங்களது முயற்சிகளைக் கெடுத்து விடுகிருனே என்ற கோபம் பொங்கி எழுந்தது. தாங்கள் ஒன்றைச் செய்ய நினைப்பதற்குள் அவன் அதை எப்படியோ அறிந்துகொண்டு அதற்குத்தக்க அணையை முன் ஏற்பாடாகப் போட்டு வைக்கிருன். அது அவன் எண்ணியபடியே முடிகிறது என்பதை நினைக்க, அவர் மனத்தில் ஜம்புலிங்கம் தங்களைப்போல ஒரு சாதாரண மனிதன்தானு அல்லது தெய்வீக சக்தி வாய்ந்தவனு என்ற வியப்பு மேலிடுகின்றது. டாக்டரை வரும்படியாக டெலிபோன் செய்துவிட்டு வந்த தங்கத் துரையை நோக்கி, "அவரது மடியில் என்ன இருக்கிறது பார்" என்ருர்.

தங்கத்துரை:—இரண்டு மூன்று ரூபாய் சில்லரைகளைத் தவிர வேறொன்றுமில்லை.

கமி:—பேர்வழிகள் ஒரு உளவையும் விட்டு வைக்கவில்லை. அது விஷயத்தில் விழிப்பாய்த்தானிருக்கிருர்கள்

என்று சொல்லிக்கொண்டே டெலிபோனைக் கையிலெடுத்து 'ஸ்டோர்ஸ்' டிபார்ட்மெண்டை கூப்பிட்டார்.

"யார், சிவசங்கரன்? புதிய பீரோ எந்தக் கம்பெனிக்கு ஆர்டர் செய்யப்பட்டது?—யார்?—நாமத் அண்டு கம்பெனியா? சரிதான்" என்று டெலிபோனை ஒரு விநாடி வைத்து, மறுபடியும் நாமத் அண்டு கம்பெனியைக் கூப்பிட்டார்.

"ஹலோ! நாமத் அண்டு கம்பெனியா?—யார் பேசுகிறது? முதலாளியா? சரி. போலீஸ் ஆபீஸ்,—பீரோவை யார் மூலமாய் அனுப்பினீர்கள்? ஆம்; சீக்கிரம் பார்த்துச் சொல்லும்—[சற்றுப் பொறுத்து] உம்—என்ன!—நீங்கள் அனுப்பவில்லையா? உம்; நன்ருய் கவனித்துச்சொல்லுங்கள். பீரோ அங்கேயே யிருக்கிறதா!—சரி" என்று டெலிபோனை வைத்துவிட்டு, பெருமூச்செறிந்தார்.

"எல்லாம் ஆச்சரியமாகவே யிருக்கிறதே! நாம் பீரோவுக்கு ஆர்டர் செய்திருந்



பீரோவினுள்ளே துரைராஜா ஒரு நாடோடியைப் போல சாதாரண அழுக்கடைந்த உடையில் சற்று குனிந்தாற்போல் உட்காரவைக்கப்பட்டிருந்தார்.

பது அவனுக்கெப்படித் தெரிந்தது? "குலத்தைக் கெடுக்க வந்த கோடாரிக் காம்பு இங்கு எங்கேயோ இருக்கிறது? அதைச் சற்று கவனிக்கவேண்டும்' என்று சொல்லிக்கொண்டிருக்கும்போதே டாக்டர் உள்ளே வந்தார். துரைராஜாவின் நாடியைப் பிடித்துப் பார்த்துவிட்டுக் கண்ணிமைகளை நீக்கிப் பார்த்தார்.

டாக்டர்:—மயக்கமருந்து கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒன்றும் பயமில்லை. இன்னும் ஒன்றரை மணி நேரத்தில் விழித்துக்கொள்ளலாம். கொஞ்சம் நிம்மதியாய் தூங்கவிட்டு வைப்பதே நல்லது. மருந்து அனுப்புகிறேன்

என்று சொல்லி விடைபெற்றுச் சென்ருர். இரண்டு ஆட்கள், மெதுவாய் துரைராஜாவைத் தூக்கிப் பக்கத்து அறையில் கொண்டு போய்ப் படுக்க வைத்தார்கள்.

## IX

சென்னை விக்டோரியா பப்ளிக் ஹாலில் ஏராளமான ஜனங்கள் கூடியிருக்கிருர்கள். காரணம், மனமோகன நாடக சபையார், 'ராஜ்யஸ்ரீ' என்னும் சரித்திர சம்பந்தமான ஓர் நவீன நாடகத்தை இன்று இங்கு நடத்திக்காட்டப்போகிருர்களாம். தமிழ் நாடக மேடையில் ஓர் பெருங் குறையிருந்து வருவதாக நாடகாபிமானிகள் எல்லோரும் ஒப்புக்கொண்ட விஷயம். புஸ்தகத்தின் வாயிலாகவோ, அல்லது உபதேச வாயிலாகவோ அறிந்துகொள்ளுவதற்குக் கஷ்டமாயிருக்கக்கூடிய அரியபெரிய விஷயங்களை, நல்ல தேர்ந்த பண்டிதர்களும் கவிகளும், தங்களுடைய சாமர்த்தியத்தினல் ஒரு அழகிய கதையைக் கற்பித்து, அக்கதையில் மிக்க ரஸமாக ஜன சமூகங்களுக்கு நன்மை பயக்கக்கூடிய அவ்வரிய விஷயங்களைப் புகுத்துவார்கள். அதை நன்ருகப் படித்தவர்கள் வெகு நாட்கள் அந்நாடகத்தில் வரும் பாத்திரங்களின் குணதிசயங்களை நன்ருக ஆராய்ந்து அறிந்துகொண்டு, அந்நாடகத்தை நடித்துக் காட்டுவதின் நோக்கம் இன்னது என்பதை மனதிற் பதியவைத்துக் கொண்டவர்களாய், நடித்துப் பழகித் தேர்ந்தபின் ஜனங்களுக்கு நடித்துக் காட்ட முன் வருவார்கள். தற்சமயம் மேற் சொன்னவைகளுக்கு முற்றிலும் மாருகவே நடக்கிறது. பெரும்பான்மையோரான நடிகர்களுக்கு, தாங்கள் நடிக்கும் கதையின் போக்கை அறிய மாட்டாதவர்களாயிருக்கிருர்கள். கதையின் போக்கையறிந்தாலல்லவோ அதில் வரும் பாத்திரங்களின் குணதிசயங்களைக் கண்டுகொள்ள முடியும். சொற் சாதுரியத்தையோ நடிப்புத் திறமையையோ கொஞ்சமும் இவர்களிடம் எதிர்பார்க்கமுடியாது. கேவலம் பாட்டையே பிரதானமாகக் கொண்டவர்கள். ஆகையால், நாடகம் நடத்தப்படவேண்டிய நேரத்தை எப்படியாவது கழித்து முடிக்கவேண்டுமென்ற ஒரே எண்ணங்கொண்டவர்களாய், சமய சந்தர்ப்பங்களைக் கொஞ்சமும் கவனியாதவர்களாகி, தங்கள் தங்கள் மனோதர்மங்களுக்கேற்றபடி அக்கதையில், அந்த சந்தர்ப்பத்திற்கேற்றபடி உணர்ச்சியுடன் பாட வேண்டியதை விட்டுவிட்டு, சங்கீத சாஸ்திரத்தைப் புகுத்தி, தங்களது முழு சாமர்த்தியத்தையும் பிரயோகித்து, மிக்க அழகாக த்வனிக்கக்கூடிய பதங்களைக் கொஞ்சமும் தாக்ஷண்யமின்றி, மனம் போனவாறு சேதித்துச் சின்னப்பின்னப்படுத்தி, பெரிய சங்கீதப்போர் நிகழ்த்துவதை ஒன்றையே அறிந்தவர்கள். எந்த நாடகாபிமானிதான், இத்தகைய வைபவங்களுடன் நடக்கும் நாடகத்தைக் காண முன் வருவான்?

ஆனல், இன்றைய நாடகத்தை நடிக்கவிருக்கும் நடிகர்களோ, நடிப்புத்திறமையிலாகட்டும், சொற் சாதுரியத்திலாகட்டும், சாரீரத்திலாகட்டும், சங்கீத ஞானத்திலாகட்டும் தேர்ந்தவர்கள். அதிலும் கதாநாயகியாக நடிக்கவிருக்கும் ஜெயலக்ஷ்மியோ, நடிப்பதற்கென்றே பிறந்தவள் என்று சொல்லிவிடலாம் சமய சந்தர்ப்பத்திற்கேற்றபடி உணர்ச்சியுடன், உருக்கமாகவோ, ஆவேசத்துடனே பாடுவதில் மகா சமர்த்தி.

ஜெயலக்ஷ்மி நல்ல குலத்தில் பிறந்தவள். இளமைப் பருவத்திலேயே தாய் தந்தையரை இழந்துவிட்டாள். வேறு ஆதரவின்றித் தவித்துக்கொண்டிருந்த சமயம்; ஒரு பரோபகாரி, இவளின் நிராதரவான நிலைமைக்கு மனமிரங்கி இவளைப் போஷிக்க முன்வந்தார், கூடிய சீக்கிரம் தன் பெற்றோர்களையிழந்த துக்கம் இவளுக்கு மாறும்படியாக அன்பாய் நடந்துகொண்டார். இவளது புத்திசாலித்தனத்தையறிந்து படிக்கவைத்தார். பகவான் இனிமையான சாரீரத்தைக் கொடுத்திருந்தாராகையால், நல்ல ஓர் வித்வானிடம் சங்கீதத்திலும் பயிற்றுவித்தார். இவள் பள்ளியிற் படித்துவரும் பொழுதே, அவ்வப்பொழுது பள்ளிக்கூடங்களில், மாணவி

**மனோரஞ்சனி**
இது ஒரு மாதாந்த நாவல் சஞ்சிகை. இராஜலக்ஷ்மி என்னும் நாவல் தொடர்ச்சியாய் வெளிவந்துகொண்டிருக்கிறது. இதன் வருட சந்தா ரூ. 1-8. மாதிரிக்காபி இனும்!
எம். எஸ் ராமுலு கம்பெனி,
286, எஸ்பிளனேட், மதராஸ்.

கள் சேர்ந்து நடிக்கும் நாடகங்களில் நடித்து கியாதியடைந்தாள் நாடகத்தை ஒரு ஜீவனாதாரமாகக் கொண்டு நடிக்காமல், அதனுடைய உயரிய நோக்கத்தை எண்ணியும், அதன் மூலம் ஜனங்களின் இடையே நல்ல பழக்கங்களைப் பரப்பலாம் என்றெண்ணி, நாடகங்களை நடித்து, பிரக்யாதி வாய்ந்து பெரிய அந்தஸ்திலிருப்பவர்களிற் சிலர், அவ்வப்போது பத்திரிகைகளின் வாயிலாக, தற்போதைய தமிழ் நாடக மேடையின் போக்கைக் கண்டு வருந்தியும், அதைச் சீர் திருத்தப் படித்த ஆண்பெண் பாலர் முன்வந்து, நாடகங்களை முறைப்படி நடித்து, தமிழ் நாடக மேடையை முன்னணிக்குக் கொண்டுவரவேண்டியது மிக்க அவசியமென்றும், அப்படி முன் வருபவர்களிற் சிலருக்கு சவுகரியக் குறைவினால் நாடகத்தையே தொழிலாகக் கொள்வதினால் இழிவு ஒன்றும் ஏற்படாது என்று, மேல் நாடுகளில் அநேகரை உதாரணமாகக் காட்டி முறையிட்டு வந்ததைப் படிப்பதுண்டு. அதற்கேற்றாற்போல் இவளைப் போஷித்து வந்தவர்களின் ஸ்திதி, எக்காரணத்தினாலோ சற்றே தாழ்வடைந்தது. பெற்ற பெண்ணினும் அதிகமாய் நேசித்து வளர்த்தவர்கள் கஷ்டப்பட, தான் சவுகர்யமாய் சாப்பிட்டுக் காலங்கழிக்க மனமில்லாதவளாகி, கௌரவமான படித்த மனிதர்கள் சேர்ந்து நடிக்க புதிதாய் ஆரம்பிக்கப்பட்ட மனமோகன நாடக சபையில் சேர்ந்து நடிப்பதற்கு அவர்களை இசையவைத்து அச்சபையில் சேர்ந்து நடிக்கலானாள். எத்தனையோ பெரிய மனிதர்கள் இவளது விஷயத்தில் கொஞ்சம் சபலங் தட்டி-சபலம் யாரைவிட்டது!—நாடகத்தில் சேர்ந்தவள் தானே என்று சாதாரணமாய் நினைத்து, தங்கள் பல்லைக் காட்டிக் கெஞ்சி, அவமானமடைந்தவர்கள்! இம்மாதிரி உபத்திரவங்கள் நேரிடாமலிருக்கும்பொருட்டு, இவள் நாடகமேடைக் காவற்காரனிடம் தன்னைத் தேடிக்கொண்டு எப்படிப்பட்ட மனிதர்கள் வந்தபோதிலும், நாடக மேடைக்குள் விடவேண்டாமென்று கண்டிப்பாய் உத்திரவு செய்திருந்தாள். எல்லாவித உத்திரவுகளுக்கும் ஒவ்வோர் விலக்கு இருப்பதுபோல இந்த இவளது உத்திரவிற்கும் ஓர் விலக்கு இருந்தது. அதுதான் ஜெயங்கொண்ட சோழபுரம் உலகநாதம் பிள்ளை. இவரை மட்டும் எந்தச் சமயம் வந்தபோதிலும் கொஞ்சமும் தடைசெய்யாது அனுப்பிவைக்கும்படியாக உத்திரவிட்டிருந்தாள். ஆகையால் இன்றைய தினம், நாடகமேடைக்குச் செல்லும் வாயிலில் ஏராளமான மைனர்களும், நாடகப் பித்தும், விஷயாதிகளில் சபலங்கொண்ட சில பிரபுக்களும், தங்கள் தங்கள் மனப் போக்கிற்கேற்றவாறு மாலைகளையும், புஷ்பச் செண்டுகளையும் வைத்துக்கொண்டு, ஜெயலக்ஷ்மியைக் கண்டு மரியாதை செய்ய வேண்டும் என்ற ஆவலுடன் நெடுநேரம் காத்திருந்த போதிலும், வெறுங்கையுடன் அப்பொழுதே வந்துகொண்டிருந்த உலகநாதம் பிள்ளையைக் கண்டதும், அவ்வாயிற்காப்போன் அங்கு நின்றிருந்தவர்களை விலக்கி, இவருக்குஉள்ளே செல்லவழியைவிட்டு நின்றது, மற்றையோருடைய மனதில் உலகநாதரின் மீதும் வாயிற்காப்போன் மீதும் கோபத்தைக் கிளப்பிவிட்டது.

ஆட்டம் ஆரம்பிக்க இன்னும் அரைமணி நேரம் இருந்ததாகையால், ஜெயலக்ஷ்மி தன்னுடைய வேஷம் போட்டுக் கொள்ளும் அறையில் இருப்பாள் என்றெண்ணி, நேராய் அங்கு சென்றார் உலகநாதம் பிள்ளை. ஜெயலக்ஷ்மி ஒரு பெரிய நிலைக்கண்ணாடிக்கெதிரில் தன் தலைமயிரை வகிர்ந்து சீர்படுத்திக் கொண்டிருந்தாள். உலகநாதம் மெதுவாய்ச் சென்று அவள் பின்பாகநின்று கொண்டார். கண்ணாடியின் மூலம் உலகநாதம் வந்ததையவள் அறிந்துகொண்டாலும், ஒன்றும் அறியாதவள்போல, தன் வேலையிலேயே கவனமாயிருந்தாள். உலகநாதத்திற்கு அவள் முதலில் பேசவேண்டும் என்ற எண்ணம். ஒரு நிமிஷம் கழிந்தது! அவள் திரும்பிப் பார்க்கவேயில்லை! பின்னால் நிற்பதைவிட்டு, அவள் கண்ணிற்படும்படியாய் ஒரு பக்கமாய் ஒதுங்கி நின்றார். அவள் மறுபக்கம், ஏதோ செய்யும் பாவனையாய்த் திரும்பிக் கொண்டாள். அப்பக்கம் போய் நின்றார். மறுபடியும் வேறு பக்கம் திரும்பிக்கொண்டாள். 'ஹும்!' என்று ஒரு பெருமூச்சு விட்டுக்கொண்டே வெளியேசெல்லத் திரும்பினார். தன்னுடைய மேல் வேஷ்டி பின்னால் இழுக்கப்பட்டது. "வேஷ்டியைவிடு. அழையாமல் வந்தால்?"............... என்று சற்று பிகுவாய் ஒரு அடி எடுத்துவைக்க, வேஷ்டி முன்னிலும் பலமாய் இழுக்கப் பட்டது. இருந்த இடத்திலிருந்தே அவளைத் திரும்பிப் பார்த்தார்.

ஜெய:—ஏதேது! இப்பொழுதே விறைத்துக் கொள்ளக் கற்றுக்கொண்டாற் போலிருக்கிறதே! பேஷ்! கல்யாணம் ஆனபிறகல்லவோ மாப்பிள்ளை நவக்கிரஹங்களுக்கும் மேலாக, ஸ்ரேஷ்டமான பத்தாவது கிரகமாக வக்ரித்துக்கொள்ளலாம். இப்பொழுதே என்ன அவசரம்?

(35-ம் பக்கம் பார்க்க)

நீலகிரி

காப்பிக் கொட்டை

கீழ்க்கண்ட ரகங்களை சகல சார்ஜும் உள்பட சென்னை ராஜதானியில் அல்லது பம்பாய்க்கு தெற்கேயுள்ள எந்த ஸ்டேஷனுக்கு வேண்டுமானாலும் வி. பி. ரெயில்வே பார்சல் (Passenger Train) மூலமாய் அனுப்பப்படும்.

| | | | | |
|---|---|---|---|---|
| 10 ℔ எக்ஸ்ட்ரா போல்டு தட்டைக் கோட்டை | ரூபா | 5 | 7 | 0 |
| கூட்ஸ் வண்டி மூலமாக (Goods Train) | | | | |
| 1 × 30 ℔ மூட்டை நீலகிரி "O" சைஸ் | ,, | 15 | 1 | 0 |
| 1 × 30 ℔ மூட்டை ,, எக்ஸ்ட்ரா போல்டு | ,, | 13 | 3 | 0 |

இன்னும் இதர காப்பிப் பொடி ட திணுசுகளின் விலை விவரங்களுக்கு கீழ்க்கண்ட விலாசத்துக்கு எழுதவும்.

யுனைடேட் காப்பி சப்ளை கம்பெனி, லிமிடேட்.,

மானேஜிங் ஏஜெண்ட்ஸ்:-T. ஸ்டேன்ஸ்; & Co:Ltd, கோயம்புத்தூர்

நீரிழிவு, மதுமேகம்

முதலிய சகல நீர் ரோகங்களுக்கு

பண்டிட் ஸ்வாமி ஸ்ரீநிவாஸய்யங்காரின்

மயூரகாய கற்பம்

ஒரு தெய்வீக சஞ்சீவி !!

இதுவரை இதன் நன்மையைப் பிரபுக்கள் மட்டுமே பெற்று வந்தனர். இப்போது சகல ஜனங்களும் பயன்பெறவேண்டி 20 டோஸ் கொண்ட பொட்டணம் ரூ. 15-8-0 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. 10 நாளைக்கு வரும். அதற்குள் கண்கூடாகக் குணங்காணும். பிரபல இங்கிலீஷ் டாக்டர்களுடையவும், குணமடைந்த பலருடையவும் உயர்ந்த உண்மை அபிப்பிராயங்கள் கொண்ட இலவசப் புத்தகத்திற்கு

இன்றே எழுதுங்கள்.

ஸ்கந்தாசிரமம்

தபால் பெட்டி, 759 : : எழும்பூர், மதராஸ்.

கெற்ப சஞ்சீவி எண்ணை.

ஸ்திரீகளுக்கு மாதாந்தரத்தில் வரும் பொறுக்கமுடியாத வயிற்று வலியை அந்த க்ஷணமே நிறுத்தும். சூதக க்ஷயம், சூதக சூலை, சூதக ஜுரம், சூதக வாய்வு, சூதக கட்டு, சூதகச் சிக்கல், சூதகத் திரக்ஷி, சூதகக் கட்டினால் உண்டாகும் தலைவலி, உடம்புவலி, கைகால் பொருத்துகள் உளைவு, மேலெல்லாம் குத்து, குடைச்சல், உடம்பு ஸ்தூலித்துப் போதல், வயிர் பெருத்தல், காந்தல், எழுந்திருக்க முடியாமை, திகைப்பு, மூச்சு, மயக்கம், பசியின்மை, சாப்பாட்டில் வெறுப்பு, ஒருசெம்பு ஜலங்கூட தூக்கமுடியாத பலஹீனம், சூதக ஜன்னி முதலிய வியாதிகளையெல்லாம் தீர்த்து கெற்பப்பை சுத்திகரிக்கப்பட்டு, கெற்ப உற்பத்தியை உண்டுபண்ணும். 6-வித மலடு தீரும். கெற்பம் தரிக்கவிடாது பண்ணும் கிருமிகளைக் கூட்டுடன் வெளியிலகற்றிவிடும். திடகாத்திரமும், பூரண ஆயுளுமுள்ள குழந்தை தரிக்கும்.

1 நபருக்கு 3 புட்டி வேண்டும்.

1 புட்டி ரூ. 2. 3-புட்டி ரூ. 5. செலவு வேறு

குணம் இல்லாவிடில் ரூபா 5 வாபீஸ்

பழனி வைத்திய ஆசிரியர்

ஆர். எம். கே. வேலுசாமி பிள்ளை,

சித்த வைத்திய சாலை,

146, புரசவாக்கம் ஹைரோட், சென்னை.

தலைமை ஆபீஸ், பழனி

தென்னிந்தியப் பிரமுகர்கள்

# நவாப் ஸர் அப்ஸர் உல் முல்க் பஹதூர், கே. ஸி. ஐ. இ.

(1852—1930)

(கே. எஸ். ஆர்.)



ஹைதராபாத் சமஸ்தானத்துப் பிரமுகர்களுள் நவாப் ஸர் அப்ஸர் உல்முல்க் பஹதூர் பிரதான ஸ்தானம் வஹித்து வந்தவர். இவர் ராணுவத்தின் விஷயமாக மிகுந்த சிரத்தை கொண்டு வாழ்ந்து வந்தவர். ஹைதராபாத் சமஸ்தான ராணுவ அதிகாரத்தைச் சிறப்புடன் வஹித்து, இந்திய ராணுவத்திற்குப் பெருமை கிட்டுமாறு செய்தவர்.

மனிதர்களுக்குப் பெருமை பலவிதமாகக் கிட்டக்கூடும். சிலர் பிரபல ராஜதந்திரிகளாக விருந்து அரிய சேவைசெய்கின்றனர். சிலர் சமஸ்தான நிர்வாஹத்தில் சிறப்புறுகின்றனர்; சிலர் ராஜீய சேவையில் ஈடுபட்டு உன்னத நிலையை எட்டுகின்றனர்; சிலர் சட்டம் போன்ற துறைகளில் இறங்கி கௌரவத்தை சம்பாதித்துக் கொள்கின்றனர். சிலர் அறிவாளிகளாகவும் கல்விமான்களாகவும் இருந்து எங்கும் வியாபிக்கும் கீர்த்திக்கு அருகர்களாகின்றனர்; சிலர் வியாபாரத்தில் மேன்மையுறுகின்றனர்; சிலர் ஆட்டங்களில் பிரபலர்களாகப் பிரகாசிக்கின்றனர்; இன்னும் சிலர் ராணுவப் படையில் சம்பந்தம் கொண்டு தங்களது அரிய ஆற்றலையும் திறமையையும் நிரூபிக்கின்றனர். தற்காலத்தில் ராணுவத்துடன் சம்பந்தம் கொண்டு அதனால் பிரகாசிப்பவர்கள் வெகு சொற்ப நபர்கள்தான். ஆனால் மேனாடுகளில் இவ்விஷயமாகச் சிரத்தைகொண்டு ஈடுபடுபவர்கள் அநேகர்.

## இந்தியாவில் ராணுவத்தின் நிலைமை

சில வருஷங்களுக்கு முன்பு வரையில் இத்தேசத்தில் இந்தியர்கள் ராணுவத்தில் கலந்துகொள்வதற்குப் போதுமான வசதிகிடையாது. சமீப காலமாகத்தான் ராணுவத்தில் இந்தியர்களும் வெள்ளையர்களுக்குச்சமமாகச் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும் என்று ஸர் சிவஸ்வாமி அய்யர் ஸர் அப்துர் ரஹிம், காலஞ்சென்ற ஸர் எம் ராமச்சந்திரராவ், ஜெனரல் ராஜ்வாடே முதலிய பிரமுகர்களால் முறையிடப்பட்டு வருகின்றது. இவர்கள் இந்தியர்களுக்குக் கலாசாலைகளிலேயே ராணுவப் பயிற்சி அளிக்கப்பட வேண்டும் என்பதை வற்புறுத்தி வந்

இந்தியாவில்இருக்கும் நிலைமையாகும். சமஸ்தானங்களில் ராணுவங்களுக்குப் போதுமான அவசியமின்மையால் அங்கும் இந்தியர்கள் பிரதான ஸ்தானம் வஹிப்பது எளிதாக வில்லை இத்தகைய நிலைமை இத்தேசத்திலிருந்தும் ஹைதராபாத் சமஸ்தான ராணுவப் படையின் அதிகாரியாகவிருந்து காலஞ்சென்ற நவாப் ஸர் அப்ஸர்-உல்-முல்க் பஹதூர் பெருமையுடன் சோபித்து வந்தார். ராணுவ அதிகாரிகள் மிகுந்த சாமர்த்தியமுள்ளவர்களாகவிருக்க வேண்டும் அவர்களுக்குப் புத்தி தீக்ஷண்யமும், அதி அவசியமும் நெருக்கடியான சந்தர்ப்பங்கள் ஏற்படும்போதெல்லாம் அவர்கள் சிறிதும் மனம் தளராமலும் அதைரியப்படாமலும், கீழதிகாரிகளுக்குத் தக்க உத்தரவுகளை அளித்து வந்து, தங்களது படையில் குதூஹலத்தையும் நம்பிக்கையையும் ஊட்டி வர வேண்டும். அதிகாரிகளுக்கு மனக் கசப்பு சிறிது ஏற்படும் பக்ஷத்திலும், ஸ்திதி கெட்டுவிடும். இதனுடன் அவர்களுக்கு எதிரிகளின் சேனைகளை எவ்விதம் எப்போது சின்னாபின்னபடுத்த வேண்டும் என்பதும் தெரிய வேண்டும். இத்தகைய அரிய குணாதிசயங்களுடன் நவாப் ஸர் அப்ஸர் உல்முல்க் பஹதூர் இருந்து வந்தார் என்பதே அவரது பெருமைக்குப் போதுமான அத்தாக்ஷியாகும். இவரது திறனைப் பல பிரபல ஆங்கிலப் பெரியார்களும் மிகப் போற்றியுள்ளனர். இவர் இதர விடங்களுக்கும் சென்று தமக்கு நற்கீர்த்தியை விளைவித்துக்கொண்டார். இவரது உழைப்பினால் ஹைதராபாத் சமஸ்தானத்திற்கும் பெருமை கிட்டியது.

## பிறவியிலிருந்தே ராணுவ சம்பந்தம்

கர்னல் ஸர் அப்ஸர்உல்முல்க் பஹதூர் மோமினாபாத்தில் 1852-ம் வருஷம் ஜூலை மாதம் 22-ம் தேதியன்று பிறந்தனர். இவரது நாமகரணப் பெயர் மீர்ஸா அலிபெக் என்பதாகும். இவரது பிதாவின் பெயர் மீர்ஸா விலயட் அலிபெக் என்பதாம். இவரது பிதா ஹைதராபாத் ராணுவத்தின், மூன்றாவது குதிரைப் படையின் ரிஸேதாராக மீர்ஸா விலயட்பெக், 1857-ம் வருஷத்தில் இத்தேசத்தில் சிப்பாய்க் கலகம் நிகழ்ந்த போது, கலகக்காரர்களுக்கு எதிராகப் பிரிட்டிஷ் அதிகாரிகளுக்கு உதவினார். இவர்பதவி வஹித்துவந்த படையானது கலகக்காரர்களை அடக்குவதற்காகப் பிரயோகிக்கப்பட்டது. இவரது தைர்யத்தையும் துணிச்சலையும் அஞ்சா நெஞ்சத்தையும் கொண்டாடி, இவருக்கு ஆங்கிலத் துரைத்தனத்தார், "ஆர்டர் ஆப் மெரிட்" "ஆர்டர் ஆப் பிரிட்டிஷ் இந்தியா" என்ற இரு சிலாகிக்கத் தக்க பிருதுக்களை இவருக்கு அளித்தனர். இவை தவிர இவருக்கு மத்ய இந்தியக் காலாட்படை அதிபதியாகவிருந்த ஸர் ஹ்யூரோஸ், இவரது கௌரவத்தைக் கோஷிப்பதற்காக இவருக்கு ஒரு பட்டாக்கத்தியையும் சன்மானம் செய்தார். அநேகம் குறிப்புகளில் இவரது சேவை மிக உயர்ந்ததாக எழுதப்பட்டு அனுப்பப்பட்டது. ஆனால் இவர் 1866-ம் வருஷத்தில் காலமானார். அப்போது இவர் தமது மைனர் குமாரனுக்கு, ஹைதராபாத் ராணுவத்தின் மூன்றாவது காலாட்படையில் ஒருவரான மிஸ்டர் (பின்பு ஸர் சார்லஸ்) பிட்ஸ் கெரால்டு என்பாரைக் கார்டியனாகத் தமது உயில் மூலம் நியமித்திருந்தார்.

ஆகையால் பிறவியிலிருந்தே நவாப் மஹம்மது அலிபெக் ராணுவத்துடன் சம்பந்தம் பெற்றவராக விருந்துவந்தார். இருந்தும் இவருக்குப் போதுமான வித்தியாப்யாஸம் கொடுக்கப்பட்டது. இளம் பருவத்திலிருந்தே இவர் ராணுவத்தில் சேருவதற்கு ஒருவாறு தயார் செய்யப்பட்டுவந்தார் என்பது குறிப்பிடவேண்டியது. 1867-ம் ஆண்டில் இவர் ஹைதராபாத் ராணுவத்தின்

Tele:—"SIMILICURE" Box 643 CAL
வெளிவந்துவிட்டன!
ஹோமியோ புத்தகங்கள்
ஹோமியோ வைத்திய முறை
தத்துவம்
தெலுங்குப்பதிப்பு விலை ரூ. 1 தான்.
M. BHATTACHARYYA & Co.,
Economic Pharmacy, 84, Clive Street, CALCUTTA.

முன்றுவது குதிரைப்படையில் ஒரு வீரனைச் சேர்ந்தார். தமது பிதாபோல் இவர் வெகு சீக்கிரத்தில் அப்படையின் ரிஸேதாராக உயர்த்தப்பட்டார். 1877-ம் வருஷத்தில் நிஜாம் அவ்வருஷத்திய டில்லி தர்பாருக்குச் சென்றபோது அவர் தம்முடன் சேனையிலிருந்து 100 ஆட்களை அழைத்துக்கொண்டு போனார். இவர் அச்சமயம் அவ்வாட்களின் அதிபராகச் சென்று திரும்பினார். 1880-ல் ஹைதராபாத் சமஸ்தான மந்திரியான ஸர் ஸாலர் ஜங், ரெஸிடெண்டான ஸர் ரிச்சர்டு மீட் என்பவருடன் ஔரங்கபாத்திற்கு விஜயஞ் செய்தபோதும் இவர் அவர்களுடன் அனுப்பப்பட்ட சேனைப் பகுதியின் தலைவராகவிருந்து, தௌலடாபாத், ரோஸா, எல்லோரா முதலியவிடங்களுக்குச் சென்றுவந்தார். இச்சமயத்தில் இரண்டாவது அதிகாரியாகவிருந்த மேஜர் ஸ்டுவர்டு வர முடியவில்லை. ரெஸிடெண்டு மந்திரி இவர்கள் முன்பு, மூன்றாவது நான்காவது குதிரைப்படை, நான்காவது காலாட்படை முதலியவை அணிவகுத்து நின்று மரியாதைகள் செய்தபோது, இவர் மூன்றாவது குதிரைப்படையின் தலைவராக விருந்தார். ஒரு பெரிய பட்டாளம் அணிவகுத்து நிற்கும்போது, ஒரு இந்திய உத்தியோகஸ்தர் பிரதான அதிகாரம் வஹித்தது இதுவே முதல் சமயமாகும்.

### ஆப்கானிய யுத்தத்தில் சேவை

1881-ம் வருஷத்திய ஆப்கானிய யுத்தத்தில் இவர் தமது மூன்றாவது படையுடன் யுத்தாங்கத்திற்குச் சென்று போர் புரிந்தார். இதற்காக இவரைப் பிரபலதளகர்த்தர்கள் மிகக் கொண்டாடினர். பிரிகேடியர் ஜனரல் ஸர் தாமஸ் ரைட் இவரது பிரதான்யத்தை சிலாகித்ததுமல்லாமல், இவருக்குத் தமது மனமார்ந்த நன்றியையும் அறிவித்தார். இவருக்கு இதற்காக ஆப்கானியப் பதக்கமும் பஹுமானமாக வழங்கப்பட்டது.

மோமினபாத்திற்கு இவர் திரும்பியபோது இவர் நிஜாமின் மெய்க்காப்பாளர்களுள் ஒருவராக நியமிக்கப்பட்டார். இதற்காக இவர் ஹைதராபாத்திற்கு வரவேண்டியது அவசியமாகியது. 1883-ல் இவர் கோல்கொண்டா சேனையைத் தயார்செய்து வைத்தார். இரண்டு வருஷங்களுக்குப் பிறகு அவர் அப்படையின் தலைவராகவும் விளங்கினார். இவரது உயர்ந்த சேவையை உத்தேசித்து ஹைதராபாத்து நிஜாம் இவருக்கு 1884-ல் "அப்ஸர் ஜங்" என்ற பட்டத்தைக் இவருக்கு நிஜாமினால் "அப்ஸர் உத் தௌலா" என்ற பட்டமும் வழங்கப்பட்டது.

### சேனாதிபதி உத்தியோகம்

1888-ம் வருஷத்திய கருப்பு மலை படையெழுப்பின்போது இவர் ஜெனரல் ராபர்ட்ஸ் கீழ் ஒருவராகவிருந்தார். இதற்காக இவருக்குப் பதக்கம் கொடுக்கப்பட்டதுமல்லாமல் அதிகாரிகளால் அனுப்பப்படும் சமாசாரக் குறிப்புகளில் இவரது பெயர் பிரதானமாக எடுத்துக் காட்டப்பட்டது. 1893-ம் ஆண்டு முதற்கொண்டு "ஹைதராபாத் இம்பீரியல் சர்விஸ்" படையின் அதிபதியாக இவர் இருந்து வந்தார். 1897-ல் இவர் ஹைதராபாத் சமஸ்தானத்தில் சேனாதிபதியாகவும் உயர்த்தப்பட்டார். 1893-ல் சாமராஜ்யப்பாதுகாப்புப் பிரச்னை எழும்பியபோது நிஜாம் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டிற்கு இரண்டு குதிரைப்படைகளைக் கொடுப்பதாக ஒப்புக்கொண்டார் இப்படைகளைத் தயார் செய்ய இவர் நிஜாமினால் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவ்விரு படைகளுக்கு ஆட்கள் நிஜாம் சேனையிலிருந்து தான் எடுத்துக் கொள்ளப்பட்டனர்.

1903-ல் இவருக்கு நிஜாம் "அப்ஸர் உல் முல்க்" என்ற பட்டத்தை உவந்து அளித்தார். 1897-ல் இவருக்கு "ஸி. ஐ. இ." பட்டம் ஜூபிலி விழாவின்போது ஆங்கிலேய துரைத்தனத்தாரிடமிருந்து கிட்டியது. 1908-ல் இவருக்கு "ஸர்" (கே. ஸி ஐ. இ) பட்டமும் வழங்கப்பட்டது. 1906-ல் 'எம். வி ஓ." என்ற பட்டமும், இவருக்கு நம் காலஞ்சென்ற ஐந்தாவது ஜார்ஜ் மன்னர் இங்கு வேல்ஸ் இளவரசராக விருந்து விஜயஞ்செய்த காலத்தில் கொடுக்கப்பட்டது.

பிரிட்டிஷ் சேனையில் இவருக்கு "மேஜர்" என்ற மதிப்பும் அளிக்கப்பட்டது ஸர் அப்ஸர் உல் முல்க் ஆப்கானிய யுத்த காலம் தவிர இதர சந்தர்ப்பங்களிலும் சாம்ராஜ்யத்திற்கு அரிய சேவை செய்தவர். டரண்ட் மிஷனுடன் போவதற்கு இவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆனால் இது நடைபெறவில்லை. கருப்பு மலைப் படையெழுச்சி காலத்தில், ஜனரல் ஸர் ஜான் மக்லீன் என்பவர் கீழிருந்து இவர் உயர் சேவை செய்தார். 1900-ல், இவர், நான்காவது பட்டாளத்தின் அதிகாரத்தை வஹித்து வந்த ஜனரல் கம்மின்ஸ் என்பார் கீழ் ஒருவராகவிருந்து சீன படையெழுச்சியில் கலந்து கொண்டார். இந்த சீன யுத்தத்தில் இவர் பிரதான புருஷராகப் பிரகாசித்தார். சீனவில் ஹாங்காங் என்னும் நகரத்திற்கு இவர் சென்றவுடன் இவர் பிர


# அதி அற்புத அழகு

சுகாதாரம் மிகுந்த

டில்பஹார் ஸோப்பு

(ரிஜிஸ்டர்ட்)

மூன்று கட்டிகளின் விலை

ஒரு ரூபாய் தான்

(தபால் செலவு தனி)

டில்பஹார் ஸோப்பு சிறந்தசுத்தி கரிப்பைத் தரும் கிருமி நாசினி. சரும எரிச்சல் அல்லது அரிப்பை அகற்றிச் சருமத்தைப் பாதுகாக்கும். அழகை விருத்திசெய்யும்.






## உங்கள் சருமத்தைப் பாதுகாருங்கள் !

ஆட்டங்களில் ஈடுபட்டுள்ளவர்களும், இதர பெண்களும் காமினியா ஸ்னோ வின் சருமப் பாதுகாப்பையும், போஷாக்கையும் பெரிதும் பாராட்டுகிறார்கள். சருமத்திற்குப் புத்துயிரும், உல்லாசமுமளிப்பது. சருமச் சுருக்கங்கள் முதலியவற்றை நீக்குவதில் சிறந்ததென சிபார்சு பெற்றது. விலை புட்டி 1-க்கு 10 அணு. தபால் செலவு தனி. தபால் செலவுக்காக 1 அணு ஸ்டாம்பனுப்புவோருக்கு சாம்பிள் இலவசம்.

சோல் ஏஜண்ட் :—

**The Anglo Indian Drug & Chemical Co**

**285, Jumma Musjid, BOMBAY 2**

ஸ்டாக்கிஸ்டுகள் : ஜே. எஸ். சேட் & கம்பெனி, 68, பைக்ராப்ட்ஸ் ரோட், — திருவல்லிக்கேணி.



MINSARARASAM

நிகரற்ற தேக வலிமை -
புதிய ரத்தோட்டம் -
அபாரமான ஜீவசக்தி -
ஆனந்தமயமான வாழ்வு -

இவைகளை படைப்பது

மின்சாரரசம்

வெகு அதிசயமான போக்ஷிணி

ஒரே முறை பரீக்ஷியுங்கள்

எல்லா இடங்களிலும் கிடைக்கும்

புட்டி 1-க்கு ரூ. 2.

மின்சார ரசம் கம்பெனி(லிட்) சேலம்.

MINSARARASAM


பட்டார். அங்கு ஜனரல்காஸ்லி என்பவரிடம் படையெடுப்பு அதிகாரம் இருந்தது; இவர் அங்கு அவர்கீழ் ஒப்புவிக்கப்பட்டார். இதனால் இவருக்குக் கிடைத்த அநுவலின் சிறப்பு வெளியாகும். பாண்டிங் பூ என்றவிடத்தின் மீது படைகள் பிரவேசித்தபோது இவர் அதில் முக்கிய ஸ்தானம் ஜனரல் ரிச்சர்ட்ஸன் என்பாருடனும் மிகவும் கலந்து கொண்டு உபயோககரமாக விருந்தார்.

### "சீன பதக்கம்"

சாம்ராஜ்ய சேவாசேனையின் இன்ஸ்பெக்டர் ஜெனரலின் ஆலோசனைபற்றி இந்தியா கவர்ன்மெண்டார் 1902-ம் வருஷம் காலஞ்சென்ற சக்கர

நமது சிறுகதை

# "பழிக்குப் பழி"

(ஸ்ரீமான் வி. ஆர். பாஷ்யம் எழுதியது.)

"கூண்டிலிருக்கும் கைதி பால்ய வயதினனாகையால் கருணைகாட்டவேண்டும் என்று ஜூரர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். ஆனால் அவன் செய்த காரியம் மகா பாதகம் எனக் கருதக்கூடியது. சாதாரணக் கொலை செய்திருந்தாலும் ஏதோ கருணை காட்டலாம். ஆனால் இந்தச் சித்திரவதை செய்ததற்குக் கருணை காட்டினால் நாம் அதற்குக்கடவுளிடம் பதில் சொல்லியே தீரவேண்டும். அதனால் இவனுடைய ஆள் மாறாட்ட வாதத்தை எடுத்துக்கொள்ளாமல் இன்னும் பத்து தினங்களுக்குள் இவன் சாகும் வரையில் தூக்கிலிடப்படவேண்டும்" என்று நியாயாதிபதி தமது தீர்ப்பைக் கூறி முடித்தார். கோர்ட் நிசப்தமாயிருநதது. கசாப்புக் கடைக்காரன் ஒரு மிருகத்தைக்கொன்றுவிட்டு மற்றொரு மிருகத்திற்குச் செல்வதுபோல் வக்கீல்கள் தங்களது கேஸ் கட்டைப் புரட்ட ஆரம்பித்தார்கள். ஆனால் கூண்டிலிருந்த கைதிக்கோ மனம் பதறிக் கொண்டிருந்தது. பாவம் அவனுக்கு ஏனாரையும் தெரியாது. அதில் நடந்த திவட்டிக் கொள்ளையையும் பற்றித் தெரியாது. அப்படியிருக்கையில், எப்படி அவன் ஏனூர் மிராசுதாரைக் கால்வேறு கைவேறு சுரசு வேறாக வெட்டியிருக்க முடியும்? ஒரு ஆத்திரச் சிரிப்பு சிரித்தான். ஆனால் அந்த ஜமீன்தார் வீட்டிலிருந்தவர்களெல்லோரும் இவனைப் பார்த்ததாகச் சாக்ஷியம் கொடுத்திருக்கிறார்கள். ஒரு வேளை ஆங்கிலத்தில் 'ஸோம்னம்புலிஸம்' என்று சொல்லுவார்களே அதுமாதிரி ஏதாவது நடந்திருக்கலாமோ! சே! அப்படியிருந்தாலும் இரவு 100 மைல் தூரம் எப்படி நடந்துவந்திருக்க முடியும்? இனி எல்லா மானிடர்களுமே விரோதி. இந்த மாதிரிக் குற்றம் ஜோடித்த போலீஸ்காரர்களை...... ஆனால் கமல! பாவம் என்ன செய்வது? "ஏய்! ......வா!" என்று ஒரு குரல் கிளம்பிற்று. பேசாமல் ஜவானுடன் சென்றான்.

* * * *

"இன்னும் இரண்டு தினங்கள் தான் பாக்கி. ஒருவரையும் பார்க்க அநுமதி கிடைக்கவில்லை. அபாயகரமானவன் என்று பெயர் வாங்கிய பிறகு என்னதான் செய்ய முடியும்? ஆனால் ஒருதரமாவது கமலாவிடம பேசவேண்டும். தெரிவிக்கவேண்டும் என்ற ஆசையுடன் தவித்தான் கொலைக் கைதி .8 நாள் சிறையிலிருந்தது தன்னைச் சிறுகச் சிறுகக் கொலை செய்வது போலிருந்தது. அவன் காதலி வாயால் 'நிரபராதி' என்ற வார்த்தை வந்தால் அப்புறம் அவன் இறப்பதற்குப் பயப்படவில்லை. அதற்கு ஏதாவது வழிகளுண்டா என்று யோசித்தான். சர்க்காருக்கு மனுச் செய்து கொள்ளலாம். ஆனால் சர்க்காரின் பதில் அவனுக்குக் கிடைக்குமா?... சரி; தப்பி ஓடுவதே சரி; கமலாவிடம் தனது நிரபராதத் தன்மையை வெளிப்படுத்திவிட்டு எங்கேயாவது ஓடிவிடுவது! பிறகு பிடிப்பட்டாலும் பரவாயில்லை. இப்பொழுது கிடைக்கும் தூக்குத்தண்டனையை அப்பொழுது அநுபவித்துக் கொள்கிறது முதலில் எப்படித் தப்புவது? சாயங்காலம் ஏழு மணிக்குதான் சிறைச்சாலைக் கலவரம் அடங்கியிருக்கும். வெளியே கதவுகூடத் திறந்திருக்கும். வார்டர் பொன்னுசாமி கஞ்சி கொண்டு வருவான். அவனை எப்படியாவது சரிப்படுத்த வேண்டும். அவன் நியாயத்துக்கு விரோதமாகப் போகமாட்டானே; மிகவும் நல்லவன்; சில்லரை உதவிகள் மிகவும் செய்திருக்கிறான் ஆனால் என்ன செய்வது? அவன் ஏதாவது தடுத்தால் கொன்றுவிடவேண்டும்" என்று எண்ணினான் அக்கைதி. "உலகம் தன்னைக் கொலையாளியென்று மதித்துவிட்டது. இனி எவ்வளவு கொலைகள் செய்தால் தான் என்ன?" என்ற எண்ணம் தோன்றிவிட்டது.

அன்றிரவு தூக்கமோ வரவில்லை. மறுநாள் காலையிலிருந்து அதே எண்ணத்துடன் மனங்கவலைபடைந்திருந்தது. ஒரு சிறிய துண்டு அவன் கையில் சதா இருந்து கொண்டிருந்தது. அவன் அறையின் கதவிடம் அடிக்கடி போவது. அங்கே ஏதோ கையை ஆட்டுவதும் பிறகு ஓடுவதுமாக ஏதோ செய்து கொண்டிருந்தான். வேறொன்றுமில்லை; சாயங்காலம் வார்டர் பொன்னுசாமியை எப்படிக் கொலை செய்வது என்பது பற்றி ஒத்திகை நடத்திக் கொண்டிருநதான்.

(29-ம் பக்கம் பார்க்க)

இந்தியா கவர்ன்மேண்டில் மேடிகல் ஸன்னதுடன் வைத்தியப் பட்டம் பெற்றவரும், கவர்ன்மேண்டு இந்திய வைத்திய கவர்னிங் பாடி & ஸேண்டிரல் போர்டு மேம்பரும், கவர்ன்மேண்டு வைத்திய கலாசாலை & I. M. S. ஹாஸ்பிடல் பரீக்ஷாதிகாரியுமான

வைத்தியரத்ன பண்டிட் யு. ராமநாத சாஸ்திரியாருடைய



(Sastriar in Govt. Medical dress)

**மஹா பில்வாதி லேகியம்**

பித்தவாயு, கீல் பிடிப்பு, பித்த மயக்கம், பலஹீனம், அன்னத்துவேஷம், அஜீர்ணம், மலச்சிக்கல் இவைகளைக் கண்டிக்கும். 1 சேர் கொண்ட டப்பி 1-க்கு ரூபா 3. வி. பி. வேறு.

**ஆனந்த பற்பொடி**

குணம், ருசி, வாசனை இவைகளில் இது ஒன்றுதான் மார்க்கெட்டில் சிறந்தது. டப்பி 1-க்கு 0—2—9 ஒரு டஜன் கொண்ட பெட்டி 1-க்கு ரூபா 1—14—0. வி.பி.வேறு. எங்கும் கிடைக்கும்.

**ஆனந்த பற்பசை**

ஆனந்த பற்பொடியை பசை ரூபமாக செய்யப்பட்டிருக்கிறது. ட்யூப் 1க்கு 0-8-0 வி. பி. வேறு. எங்கும் கிடைக்கும்.

மேன்மை தங்கிய ஹிஸ் எக்ஸலேன்ஸி ஸர் கே. வி. ரேட்டி நாயுடு காரு, Kt, சென்னை மாகாண கவர்னர் அவர்கள் எழுதுகிறார்:—

"வைத்யரத்ன பண்டிட் யு. ராமநாத சாஸ்திரி, D. V. S. அவர்களால தயார்செய்யப்படும் மருந்துகளின் அபாரமான வீர்யத்திற்கு நான் நற்சாக்ஷி கொடுக்க மிகவும் ஸந்தோஷமுள்ளவனாக இருக்கிறேன். இவர் நன்றாய்ப் படித்துத் தேர்ந்த ஸம்ஸ்கிருத வித்வானாக இருக்கிறார். இவர் ஸம்ஸ்கிருதத்திலுள்ள வைத்திய சாஸ்திரங்களை நன்றாய் படித்துப் பரிசோதித்து யதோக்தமான அனேக மருந்துகளைத் தயார் செய்வதில் தமது கியானத்தை உபயோகித்து அவைகளை அனுபவத்திற்குக் கொண்டு வந்து இருக்கிறார். அப்பேர்க்கொத்த இவருடைய மருந்துகளை நான் உபயோகித்ததில அம்மருந்துகள் உண்மையில் வீர்யமுள்ளவைகள் என்பதை நம்பிக்கையுடன் நான் தெரிந்துகொண்டேன்."

நேரில் வருவோருக்கு கன்ஸல்டிங் சார்ஜ் கிடையாது.

சகல ஆயுர்வேத ஔஷதங்களும் கிடைக்கும். கேட்லாக் இனம்.

**வைத்தியரத்ன யு. ராமநாத சாஸ்திரி,**

வைத்திய ஸித்தாச்ரமம், 39, பஜார்ரோட், மயிலாப்பூர், மதராஸ்.



சேலம் அகில இந்தியா கதர் சுதேசிப் பொருட் காட்சிக் கமிட்டி அங்கத்தினர்களுக்கு "சேலம் அசோகா பாக்குத்தூள்" கம்பெனியின் சொந்தக்காரர் ஸ்ரீமான் ؟. நல்லசாமி செட்டியார் ஒரு உபசாரப் பத்திரம் படிக்கக் கொடுத்தார்.




## த்யாகராஜ கீர்த்தனம்.

[காபிரைட்.]

ஸங்கீதவித்வான் காஞ்சி பி. பி. ஸ்ரீனிவாஸய்யங்கார், பி. ஏ. எழுதியது

I

பல்லவி

வரதராஜ! பாஹிமாம், ஸதா-முதம் தேஹி (வரத)

அனுபல்லவி

கரிகிரீச! சிவஸுரபதி ஸரஸிஜபவாதி விநுத! (வரத)

சரணம்

தேவ தேவாந்யதா கதிர்நாஸ்தி; ஸ்ரீபெருந்-
தேவி ஸஹித! கருணுகர! ஸ்ரீ த்யாகராஜ விநுத! (வரத)

II

| | |
|---|---|
| வரதராஜ | —வரதராஜப் பெருமானே! |
| கரிகிரீச | —ஹஸ்திகிரிக்கு அதிபதியே! |
| சிவ ஸுரபதி ஸரஸிஜபவ ஆதிவிநுத | —சிவன், இந்த்ரன், ப்ரம்ஹா முதலானவர்களால் கொண்டாடப்பட்டவரே! |
| தேவதேவ | —தேவர்களுக்கும் தேவரே! |
| ஸ்ரீபெருந்தேவி ஸஹித | —ஸ்ரீ பெருந்தேவி ஸமேதராய் எழுந்தருளி யிருப்பவரே! |
| கருணுகர | —கருணைக்கு இருப்பிடமானவரே! |
| ஸ்ரீத்யாகராஜ விநுத | —ஸ்ரீ த்யாயகராஜனுல் கொண்டாடப்பட்டவரே! |
| அந்யதா கதி: நாஸ்தி | —உம்மைத்தவிர வேறு புகலிடம் எனக்கில்லை. |
| மாம் பாஹி | —என்னைக் காப்பாற்றும்; |
| ஸதா முதம் தேஹி | —எப்போதும் (எனக்கு) ஸந்தோஷத்தைக் கொடும். |

III

பெரும்பாலும் ஸம்ஸ்க்ருத பதங்களையே உபயோகப்படுத்தி ஸ்வாமிகள் அருளிச் செய்துள்ள கீர்த்தனங்களில் இஃதொன்று. நான் பார்த்தவரையில் எந்த அச்சுப் பிரதியிலும் இது காணப்படவில்லை. இது பல வருஷங்களுக்கு முன்பு, என்னுடைய ஸ்நேஹ ச்ரேஷ்டராய் விளங்கி எனக்குப்பல அபூர்வ கீர்த்தனைகளையும் தாள நுட்பங்களையும் கற்பித்தவரும், மஹாவித்வானும் ஆன காஞ்சிபுரம்-நாயனு-சுப்பிரமணியப்பிள்ளையவர்களுடைய சிஷ்யான காலஞ்சென்ற வித்வான் வில்லியம்பாக்கம் நரஸிம்ஹாசாரியாரிடம் ஆதியில் நான் இசைபயின்றபோது அவர் எனக்குக் கற்பித்த கீர்த்தனையாகும். சிறிய கீர்த்தனையானுலும் அழகியவர்ணமெட்டு உடையது.

காஞ்சிபுரம் வரதராஜப் பெருமானைப் பற்றிய கீர்த்தனங்களில் இஃதொன்று. மற்றவை 'வரதராஜ நின்னு,' பருல வேடலேனு, வநஜ நயனுடனி, வரதா நவனீதாசா, ஈவாகு ஜூசினதி' என்பவைகளாம். 'விநதாஸுத' என்று தொடங்கும ஹரிகாம்போஜிக் கீர்த்தனம் ஐயரவர்கள் செய்ததல்ல என்று சிலர் அபிப்பிராயப்படுகின்றனர். அதைப்பற்றி என் சொந்த அபிப்பிராயத்தை வெளியிட இது ஸமயமும் இடமுமல்ல.

கரிகீரீச:—வரதராஜப் பெருமானுடைய ஸந்நிதிக்கு ஸ்ரீஹஸ்திகிரி என்று பெயர். 'கரி கிரி' என்ற சொற்றொடருக்கும் அதே அர்த்தம்.

ஸரஸிஜபவ.—(திருமாலின் உந்திக்) கமலத்திற்றோன்றியவர்—ப்ரம்ஹா.

ஸ்ரீபெருந்தேவி ஸஹித:—காஞ்சிபுரத்தில் எழுந்தருளியுள்ள தாயாரின் திருநாமம் பெருந்தேவி என்பது. இது தமிழ்த் தொடர். இதை ஸ்வாமிகள் அப்படியே எடுத்து ஆண்டிருக்கிறுர். [இவ்வாறே 'தொதியகராதா' என்ற கீர்த்தனத்தில் 'திருப்பதி வேங்கடரமண' என்றும், 'தரமா?' என்ற கீர்த்தனத்தில் 'திருப்பதீச' என்று கூறுவதையும், 'கருணஜூடவய்ய' என்ற கீர்த்தனத்தில் 'உபய நாச்சாருலதோ' 'ஆள்(ம்) வாருலதோ' என்றும் ஸ்வாமிகள் ப்ரயோகித்திருப்பதையும் காண்க ] ப்ருஹந்நாயகி ப்ருஹதாம்பா என்ற ஸம்ஸ்க்ருதப் பெயர்களும் பெருந்தேவி என்ற பெயரின் பொருளையேயுடையவை.

இந்தக் கீர்த்தனத்தைச் சுத்த ஸம்ஸ்க்ருத கீர்த்தனமாகக் கூறமுடியாது. ஏனெனில் இதில் 'பெருந்தேவி' என்ற தமிழ்ச் சொற்றொடர் அப்படியே உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது. மணிப்ரவாள நடையென்று சொல்லலாம்.

(14-ம் பக்கம் பார்க்க)

# தாயார், மனைவி, குழந்தை, யாவருக்கும்

## ஏ ற் ற

# வ சி க ர மா ன ச ங் கி லி

தினசரி உபயோகிக்கலாம்; எல்லா விசேஷங்களுக்கும் உபயோகிக்கலாம்.



இந்தியா பூராவும்
எல்லோராலும்
ஏராளமாக
விரும்பப்படுவது.



ஒவ்வொன்றின் விலை ரூ. 37.

மாதர்கள் பெரிதும்
கொண்டாடும்
கியாதி பெற்ற
சங்கிலி.



அசல் உத்திரவாதமான பவுன் தங்கத்தில் சிந்தடிக் கற்களால் பல வர்ணங்களில் சிகப்பு, நீலம், பச்சை, ஊதா, மங்கல், மேகவர்ணம் முதலிய ஒரே வர்ணத்திலோ, அல்லது இரண்டு, மூன்று முதலிய பல வர்ணங்களிலோ ஆர்டருக்குத் தக்கபடி செய்து கொடுக்கப்படும். நீளம் — பெண்டண்ட் உள்பட 25 அங்குலம்.

## சூராஜ்மல் லல்லுபாய் & கம்பெனி,

வைர, தங்க, நகை வியாபாரிகள்,

313, எஸ்ப்ளனேட், : : : : மதராஸ்.

## தென்னிந்தியப் பிரமுகர்கள்

(10-ம் பக்கத் தொடர்ச்சி.)

வர்த்தி ஏழாவது எட்வர்டு மன்னரின் மகுடாபிஷேகவிழாவிற்கு இந்தியச் சேனையை இங்கிலாந்திற்கு எடுத்துச் செல்ல இவரைத் தேர்ந்தெடுத்தனர். அங்கு 'சீனு பதக்கம்' இவருக்கு அரசரிடமிருந்து நேராகக் கிடைத்தது 'மகுடாபிஷேகப் பதக்கம்' இவருக்கு அச்சமயம் வேல்ஸ் இளவரசரிடமிருந்தும் கிடைத்தது. நிஜாமின் 40-வது வருஷ ஜுபிலிவிழாவின்போது நிஜாம் முன்பு படை அணிவகுத்து நிற்கையில் நிஜாம் ஸர் அப்ஸர் உல்முல்கின் தலைப்பாகையில் தாமே விலையுயர்ந்த "ஸர்பெய்ச்" எனும் ஆபரணத்தை அணிவித்தார். இதனுடன் கௌரவத்தின் அறிகுறியாக இவருக்கு ஒரு பட்டாக் கத்தியையும் நிஜாம் மன்னர் இவருக்குச் சன்மானஞ் செய்தார். 1903, 1912-ம் வருஷங்களில் நடைபெற்ற டில்லி தர்பார்களுக்கு இவர் நிஜாமுடன் சென்று வந்தார்.

### இங்கிலாந்தில் பதவிகள்

இவை தவிர இவர் சென்ற அதிகோரமான ஐரோப்பிய மஹா யுத்தத்திலும் கலந்து கொண்டார். 'இம்பீரியல் சர்விஸ் லான்ஸர்'' படையில் ஒன்ருன "முதலாவது லான்ஸர்'' படை 1914-ம் வருஷம் அக்டோபர் மாதம் எகிப்திற்குப் புறப்பட்டுச் சென்றது; இப்படை "இம்பீரியல் சர்விஸ் காவல்ரி பிரிகேட்'' டின் (குதிரைப்படை) ஒரு பகுதியாக விளங்கியது. 1915-ம் வருஷம் எப்ரல் மாதம் கர்னல் ஸர் அப்ஸர் உல்முல்க் பஹதூர் யுத்தரங்கத்தில் நம் அரசாங்கத்தார் பக்கமாகத் தாம் சேவை செய்யச் சித்தமாக விருப்பதாகப் பெருந்தன்மையுடன் அதிகாரிகளுக்குத்தெரிவித்தார். உடனே இவர் எகிப்திற்கும், பின்பு அங்கிருந்து இங்கிலாந்து, பிரான்ஸ் முதலிய தேசங்களுக்கும் அனுப்பப்பட்டார். பிரான்ஸ் தேசத்தில் இவர் ஸர் ஜான் (பின்புபிரபுவாக உயர்த்தப்பட்ட) பிரெஞ்சுஎன்ற பிரபல சேனாதிகாரிக்கு "எ. டி. ஸி'' (அந்தரங்க மெய்க் காப்பாளராக)யாக நியமிக்கப்பட்டு அவருடன் சதா விருந்து உதவிபுரிந்தார். பின்பு ஸர் ஜான் பிரஞ்சுடன் இவர் இங்கிலாந்து திரும்பியவுடன், பிரைட்டன் ஆஸ்பத்திரியில் காயமடைந்த இந்தியர்களின் மேற்பார்வையாளராக அலுவல் கொடுக்கப்பட்டார். மீண்டும் இவர் எகிப்து திரும்பினுர். 1916-ல் நிஜாம் மன்னர் இவரது உதவியை அவசரமாக வேண்டி, இவரை ஹைதராபாத்திற்கு வரவழைத்துக் கொண்டார். அராபியர்களே மிகுதியாகக் கொண்ட மைசூர் பட்டாளமும் இவர் ஆதீனத்தின்கீழ் இருந்து வந்தது.

ஸர் அப்ஸர் உல் முல்க் தமக்கு வயது முதிர்ந்துவிட்ட போதிலும் வேட்டை முதலிய விளையாட்டுகளில் மிகுந்த ஆர்வம் கொண்டவராகவிருந்தார். இவர் அவற்றில் சிறந்த நிபுணராகவும் பிரகாசித்தார். குதிரை சவாரி, கூடார மடித்தல், வேட்டை, போலோ ஆட்டம், குறிபார்த்துச் சுடுதல ஆகியவற்றில் இவர் இளைஞர்களுக்கு நிகராகத் தமது விருத்த பருவத்திலும் விளங்கியவர். குதிரைகளைப் பொறுக்கி யெடுப்பதில் இவர் சமர்த்தராக விருந்தார். "பாக்தாத் பிரயாணம்'' என்ற மகுடத்துடன் கூடிய சிறு புத்தகத்தில் இவர் அராபிய குதிரைகளைப்பற்றி சில குறிப்புகள் எழுதியுள்ளார்.

நவாப் ஸர்அப்ஸர் உல்முல்க் பஹதூர் 1930-ம் வருஷம் மார்ச்சுமாதம் 16-ம் தேதியன்று தமது 78-வது வயதில் காலமானுர். இவரது மரணத்தினுல் ஹைதராபாத் சமஸ்தானம் ஒரு சிறந்த பிரபுவை இழந்தது. நம்தேசம் ராணுவ விஷயங்கள் எல்லாவற்றிலும் விசேஷஞானமும் முதிர்ந்த அனுபவமும் வாய்ந்த ஒரு பிரமுகரை இழந்தது. இவர் ஒரு பிறவிச்சேனுதிபதி என்பதுதான் பொருந்தும். இவர் நிஜாமின்சேனை பூராவையும் சீர்படுத்திஒழுங்கான நிலையில்வைத்தார். இதனுடன் இவரது நிர்வாகத் திறமையும் சாமர்த்தியமும் மிகப் பாராட்டப்பட்டது. தற்போது நிஜாம் படையின் ஒழுங்கான ஸ்திதி இவரது முயற்சிகளால்தான் ஏற்பட்டது. தமது அந்திய காலம் வரையில் இவர் அச்சமஸ்தானத்தில் பிரபல ஜாகிர்தாராக விருந்து மிகுந்த செல்வாக்குடன் வாழ்ந்துவந்தார்.

அசல் புளு ஜாகர்

**வைரங்கள்**

இயற்கை முறையில் உற்பத்தி செய்யப்பட்ட (CULTURE)

**நல்முத்துக்கள்**

கிடைக்குமிடம்:

சிமன்லால் பிரதாப் சந்த்

175, சைனுபஜார், மதராஸ்.

**நரையை ஒழியுங்கள்!**

இந்த ஆயிலால் தலைநரை ஒழிந்துவிடும். வேரிலிருந்தே கூந்தல் கருமை பெறும்; 60-வயது வரை அப்படியே இருக்கும். பலனில்லையேல் 2 மடங்கு கிரயம் வாபீஸ். சொற்ப நரைக்கு ரூபா 3-க்கும், கால்பங்கு நரைக்கு ரூபா 5-க்கும் பாதிக்கு மேலோ அல்லது பூராவுமோ விழுந்தால் ரூபா 9-க்கும் ஆயில் வாங்குக.

கடிதங்கள் ஆங்கிலத்திலேயே எழுதப்படவேண்டும்.

BALA KALA STORES,
P. O. Kansi Simri, (Darbhanga.)

IV

## மோஹன ராகம் — சதுரச்ர ரூபகதாளம்

இந்த ராகம் 72 மேள கர்த்தா முறைப்படி 28-வது ஹரிகாம்போஜியில் ஜன்யம். சிலர் இதை 29-வது சங்கராடரணத்திலும், வேறு சிலர் 64-வது வாசஸ்பதியிலும், மற்றும் சிலர் 65-வது கல்யாணியில் ஜன்யமென்றும் கூறுகின்றனர். வேங்கடமகியின் ஸம்ப்ரதாயப்படி 65-வது கல்யாணியில் ஜன்யம். ஸரிகபதஸ்—ஸ்தபகரிஸ என்று கிரமம். சதுச்ருதி ரிஷபம், அந்தர காந்தாரம், சதுச்ருதி தைவதம்—இவைகள் ராகச்சாயாஸ்வரங்கள். இதில் சில சமயங்களில் தாடுஸ்வரப் பிரயோகங்களைச் செய்வது மிக்க ரஞ்சகமானது, (உதாரணம்) ஸகரிபகதபஸ்-தரிஸ்-தக்ரி-ததஸ்-தஸ்ஸ்-தபக-பகப-ரிக-ஸரிஸ-ரிகரிப-கத-பத-பஸ் முதலியவை ஸ்ரிக்ரிஸ்-தஸ்ரிஸ்த-பதஸ்தப-கபதபக-ரிகபகரி-ஸரிகரிஸ-என்பன போன்ற அடுக்குக்கள் மிகவும் அழகானவை.

### பல்லவி

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| காகா | கா-பா ; | பா | காகா | பா-ரீ ; | ஸா | தா ; | ; ;-ஸாரீ | கா ; | ; காகாகா |
| வர | த-ரா ; | ஜ | பா | ஹி-மாம் ; | ஸ | த்ா ; | ; ;- மு | தம ; | ; தே ஹி |
| காகா | கா-ஸரி | காகா | ரிகபா | பா-காரீ | ஸா | தா ; | ; ;-ஸாரீ | கா ; | ; காகாகா |
| வர | த-ரா | ஜ | பா... | ஹி-மாம் | ஸ | தா ; | ; ;- மு | தம் ; | ; தே ஹி |
| (வரதராஜ) | | | | | | | | | |

### அனுபல்லவி

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஸ்ாதா | டாகாரீ | ஸா | ரீகா | | பாபாபாபா | ஸ்ாதா | பா கா ரீஸா | ரீகா | பா-தாதாதா |
| கரி | கி ரீ | ச | சிவ | | ஸுர ப தி | க ரி | கி ரீ ச | சிவ | ஸு-ரபதி |
| ஸ்ாதா | பா கா ரீ | ஸா | ரீகா | | பாதா ஸ்ாஸ்ா | ஸ்ாகா | ரீஸ்ா-தாபா | காதா | பா-காரீஸா |
| கரி | கி ரீ | ச | சிவ | | ஸுர ப தி | ஸ ர | விஜ-பவ | ஆ | தி-விநுத |
| ஸ்ாதா | பா கா ரீ | ஸா | ரீகா | | பாதா ஸ்ாரீ | க்ா ப்ா | க்ரிஸ்ா-தாபா | காதா | பா-காரீஸா |
| கரி | கி ரீ | ச | சிவ | | ஸுர ப தி | ஸ ர | வி ஜ-பவ | ஆ | தி-விநுத |
| (வரதராஜ) | | | | | | | | | |

### சரணம்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| கா ; | கா-கா ; | கா | ; ரீ | ஸா ; | தாபா | தாஸா | ரீ கா ; ரீ | கா ; | ; ;—; ; |
| தே ; | வ-தே ; | வாந் | ; ய | தா ; | கதிர் | நா ஸ் | தி ஸ்ரீ ; மப | ருந் ; | ; ;—; ; |
| கா ; | கா-கா ; | கா | ; ரீ | ஸா ; | தாபா | தாஸா | ரீ ஸரி காகா | பா ; | ; ;—; ; |
| தே ; | வி-தே ; | வாந் | ; இய | தா ; | கதிர் | நா ஸ் | து ஸ்ரீ பெ | ருந் ; | ; ;—; ; |
| கா ; | கா-காரீ | கா | ; ரீ | ஸா ; | தாபா | தாஸா | ரீ-ஸரி காபா | தா ; | ; ;—; ; |
| தே ; | வி-தே | வாந் | ; ய | தா ; | கதிர் | நாஸ் | தி-ஸ்ரீ பெ | ருந் ; | ; ;—; ; |
| ஸ்ாதா | பாகா | ரீஸா | ரீகா | | பாபா பாபா | ஸ்ாதா | பாகா ரீஸா | ரீகா | பா-தாதாதா |
| தே | விஸ | ஹித | கரு | | ஞ கர | தே | விஸ ஹித | கரு | ஞ-கர |
| ஸ்ாதா | பாகா | ரீஸா | ரீகா | | பாதா ஸ்ாஸ்ா | ரீஸ்ா | தாபா | காதா | பா-காரீஸா |
| தே | விஸ | ஹித | கரு | | ஞ கர | த்யா | க | ரா | ஜ-விநுத |
| ஸ்ாதா | பாகா | ரீஸா | ரீகா | | பாதா ஸ்ாரீ | க்ரிஸ்ா | தாபா | காதா | பா-காரீஸா |
| தே | விஸ | ஹித | கரு | | ஞ கர | த்யா | க | ரா | ஜ-விநுத |
| (வரதராஜ) | | | | | | | | | |

# "பாழடைந்த பாட்னா"

## பாடலீபுத்ரத்தின் பண்டைப் பெருமை

(ஓர் சரித்திர ஆராய்ச்சி)

—:[o]:—

(ஒரத்தி ஸ்ரீமான் ஒ. பி. தேசிகன் எழுதியது)

இந்திய தேச சரித்திரத்திலேயே இதுவரையில் கண்டும் கேட்டுமறியாத அதிபயங்கரமான பூகம்ப விபத்துக்குள்ளான பாட்னா, முஜபர்பூர், மாங்கிர், தர்பங்கா, மோத்தியஹாரிப் பட்டணங்களுக்குள் பாட்னா நகரமானது பண்டைக் காலந்தொட்டு மகத்தான சரித்திர விசேஷம் பொருந்தியதாகும். பூர்வீக கிரேக்க நூலாசிரியர்கள் "பாலி போத்ரா" என்ற பெயரால் அதை அழைத்தார்கள். பாடலீபுத்ரம் என்னும் பெயர் கங்காநதி தீரத்திலுள்ள "பாடலி" என்னும் கிராமத்திலிருந்து ஏற்பட்டதாகும். கி. மு 500-475-ம் ஆண்டுகளில் மகத ராஜ்யத்தைச் சீரும் சிறப்புடனும் ஆட்சி செலுத்திய அஜாதசத்ரு மன்னன் தம்மால் ஜயிக்கப்பட்ட வைசாலி நாட்டு லிச்சாவி மக்கள் தம்மை மீண்டும் எதிர்த்துப் போராடுவதைத் தடுக்கக் கருதி, இவ்விடத்தை நன்கு அரண் செய்து, ஓர் பலமான கோட்டையைக் கட்டுவித்தான். பகவான் சாக்கிய புத்தர் தம்முடைய அந்திய காலத்தில் கோட்டையரண்களுடன் திகழ்ந்த இவ்விடத்திற்கு ஓர் முறை நேரில் விஜயம் செய்து, வருங்காலத்தில் இந்நகரம் மாபெருங் கீர்த்தியுடன் மேன்மையுற்று விளங்குமென்று ஆசீர்வதித்தனராம். அதற்குப் பிறகு அஜாதசத்ருவின் பேரன் உதயனுடைய (உதாயி பத்த கோவினுடைய) நாட்களில் (கி. மு. 450-41) இப்பட்டணம் பொற்றொடி மகளிரும் மைந்தரும் செறிந்து நெற்பொலி கெடுநகராய்த் திகழ்ந்தது. மௌரிய வமிசத்து மன்னர்களின் ஆட்சியின்கீழ் பாடலீபுத்ரம் மகதராஜ்யத்திற்கு மட்டுமேயன்றி, பாரத வர்ஷம் முழுவதுக்குமே ராஜதானியாக விளங்கும் பெருமையைப் பெற்றது.



சென்னை கவர்ன்மெண்ட் முகம்மதிய கல்லூரியில் அரபி பாஷை ஆசிரியராகவிருக்கும் அப்ஸல்-உல்-உலேமா மௌல்வி அப்துல் ஹக் சாகிப் இங்கிலாந்துக்குச் செல்வதை முன்னிட்டு கார்ப்பொரேஷன் மேயரும், கமிஷனரும் ஓர் உபசார விருந்து நடத்தினார்கள்.

சந்திரகுப்த சக்ரவர்த்தியிடம் தோல்வியுற்ற ஸெலூக்கஸ் என்னும் கிரேக்கன், இந்திய மன்னனுக்குத் தன் வசத்திலிருந்த நாடுகள் சிலவற்றையளித்துத் தன் பெண்ணையும் மணம் செய்வித்தது சரித்திரப் பிரசித்தமான விஷயமாகும்.

சந்திரகுப்த சாம்ராஜ்யத்திற்கு இந்தக் கிரேக்கமன்னன் தன்னுடைய அரசாங்கத் தூதுவனாக மெகஸ்தனீஸ் என்பவரை அனுப்பி வைத்தான். மெகஸ்தனீஸ் மகத நாட்டிற்கு விஜயம் செய்வதற்குப் பல்லாண்டுகள் முன்னிருந்தே பாடலீபுத்ரம் சந்திரகுப்தனின் ஏகாதிபத்தியத்திற்குத் தலைநகராகவிருந்து வந்தது. கங்காநதியும், ஸோனாநதியும் ஒன்றாகக் கலக்குமிடத்தில் பாடலீபுத்ரம் இருந்தது. முன்பு பாடலீபுத்ரமென்று வழங்கிய அதே இடத்தில்தான் இப்பொழுதைய பாட்னாவும், இங்கிலீஷ் ஸிவில் ஸ்டேஷனான பாங்கிப்பூரும் இருப்பதாகக் கூறப்படுகிறது. இப்பால் பல நூற்றாண்டுகளாக ஆற்றின் போக்கு வெகுவாக மாறிவிட்டதால், இப்பொழுது அவ்விரு நதிகளும் பாட்னாவுக்கு மேற்கே 12 மைல் தூரத்திலுள்ள தீனாப்பூர் கண்டோன்மெண்டுக்கருகில் ஒன்றோடொன்று கலக்கின்றன.

### பாடலீபுத்ரம்

பாடலீபுத்ரத்திற்குப் புஷ்பபுரமென்றும், குஸுமபுரமென்றும்கூட முற்காலங்களில் பெயர் வழங்கியது. பாடலீபுத்ரம் 80 ஸ்டேடியா நீளமும் 15 ஸ்டேடியா அகலமுமுள்ளதோர் பட்டணமென்று ஸ்ட்ராபோ என்பவர் எழுதியுள்ளார். அதாவது அதன் விஸ்தீர்ணம் சற்றேறக்குறைய 15 மைல்களாகும். அது நீண்ட

வெண் குஷ்டம்
பெருவியாதி

எவ்வளவு கடுமையானதாயினும், எவ்வளவு நாட்பட்டதாயினும் நாலே வாரத்தில் குணம். நிவர்த்திக்கு உத்தரவாதம்.

விவரங்களுக்கெழுதுக,
KAMALA WORKS (S. M.)
Panchpota—Bengal, India.

For TUBERCULOSIS
BRONCHITIS, PREGNANCY
LACTATION, CALCIUM
DEFICIENCY, HACKING
COUGH, LUNG AND THROAT TROUBLES

DOCTORS RECOMMEND
SIROP
THIO-CALCIN

2. Thio Calcin With A & D Vitamins.
3. Thio Calcin E M H For Irritant Cough & Bronchial Asthma.

SOLD AT ALL CHEMISTS

சிரப் "தியோ கால்ஸின்"

க்ஷயம், காசம், விஷக்காய்ச்சல், இருமல், கால்ஸியம் குறைவு, சுவாஸாசயங்களின் கெடுதல்களையும் நீக்க இது ஒரு கைகண்ட மருந்து. ஒரு பிரபல டாக்டர் எழுதுவதாவது:—

ஆரம்ப க்ஷயம் குணமாகியது.

IN 6 & 16 OZS SIZE

காசம், ஆரம்ப க்ஷயம் போஷாக்கின்மை, கால்ஸியத் குறைவு.

காலஞ்சென்ற டாக்டர் பி. எஸ். மல்லையா, எம். பி. பி. எஸ். 4-10-34.

குழந்தைகளுக்கேற்படும் கடுமையான இருமல், ஆரம்ப க்ஷயம், இவற்றிற்கு நான் சிரப் தியோ-கால்ஸின் உபயோகித்து திருப்திகரமான பலன் கண்டுளேன். போஷாக்கின்மை, கால்ஸியக் குறைவுகளுக்கும் நல்லது.

(ஒப்பம்) பி. எஸ். எம்.

2. தியோ கால்ஸின் With வைடமின் A & D பிரத்யேகம். இது சகலவிதமான பலஹீனங்கள், வைடமின் A. D குறைவுள்ளவர்களுக்கு கைகண்ட டானிக்.

3. தியோ கால்ஸின் E. M. H அதிக இருமல் கக்குவான் ஆஸ்த்மா இவைகளுக்குக் கைகண்டது. எல்லா மருந்து ஷாப்பிலும் கிடைக்கும்.

Sole Agents:—D A D H A & C O . MADRAS.

சதுரத்தின் வடிவமுள்ளதாக இருந்தது. அதைச் சுற்றிலும் கனத்த மரத்தினல் மதில்கள் எழுப்பப்பட்டிருந்தன. சுவற்றினிடையே ஆங்காங்கு அம்புகளைப் பிரயோகிப்பதற்கு வசதியாகத் துவாரங்கள் செய்யப்பட்டிருந்தன. மதிலைச் சூழ்ந்து அகலமும், ஆழமும் பொருந்திய அகழியொன்றிருந்தது. இந்த அகழியைச் சோணநதியின் ஜலத்தினல் நிரப்பி வந்தார்கள். நகரத்தையரண் செய்வதற்கு மட்டுமேயன்றிப் பாடலிபுத்ரத்தின் கழிவு நீரனைத்தையும் அப்புறப் படுத்துவதற்கேற்ற வடிகால் வசதியாசக் கழிவுநீர் இவ்வகழியிலேயே விழுந்துவிடுமாறு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமையால் அது இருவகைப் பயனுள்ளதாகவிருந்தது. அதுகாலை எனைய நகரங்களனைத்தையும் கீாட்டிலும் பாடலீபுரமே விஸ்தீர்ணத்திலும், செல்வப் பெருக்கிலும் சிறந்து விளங்கியதாக ப்ளினி என்பவர் உரைக்கிறர். மதிற்சுவற்றினிடையே 64 வாயில்களும் 700 கோபுரங்களும் எழுப்பப்பட்டிருந்ததாக மெகஸ்தனிஸ் கூறுவதிலிருந்து தெரிய வருகிறது மகத ராஜ்யம் முழுவதிலும் அதுகாலை பாடலீபுரத்திற்கு நிகரான பட்டணமேயில்லை.

பாடலீபுரத்தை மகத ராஜ்யத்தின் சாசுவதமான தலைநகரமாகச் செய்துகொண்ட பெருமை பெளரிய வம்சத்து மன்னர்களின் அணியிலே ஒப்புவமையில்லாத தனிப்பெருஞ் சிறப்புடன் விளங்கிய அசோகர் சக்ரவர்த்திக்கே உரியதாகும். அவர் நகரத்தைச்சுற்றிப் பலமான சுவர்களை எழுப்பியதுமன்றி, அற்புதமான வேலைப்பாடுகளும், சிற்ப நேர்த்தியும் வாய்ந்த கட்டடங்கள் பலவற்றைக் கட்டிமுடித்தார்.

சீன யாத்திரிகர்களின் குறிப்புகள்

கி. பி. 406-411-ஆம் ஆண்டுகளில் சீனதேசத்திலிருந்து இந்நாட்டிற்கு விஜயம்செய்த பாஹியான் என்னும் சீன யாத்திரிகர் பாடலீபுரத்தில் சிறிது காலம் தாமதித்திருந்தார். அவர் அசோக மன்னனின் அரண்மனையையும், மண்டபங்களையும், கோட்டையின் சுற்று மதிள்களையும், கோபுர வாயில்களையும், மாடமாளிகைகளையும் கூடகோபுரங்களையும் நேரில் கண்டு களித்தார். அக்கட்டடங்களின் மாட்சியையும் அவற்றின் சிற்ப அழகையும், அருமையான செதுக்கு வேலைப்பாடுகளையும் கண்ணுற்று அவர் பெரிதும் வியந்தார். அக்கட்டடங்கள் சாமானிய மக்களால் நிருமாணம் செய்யப்பட்டவைகளல்லவென்றும், மனித சக்திக்கு மேப்பட்ட தெய்வீக சக்தியின் உதவியினலேயன்றி மற்றப்படி சாமானியத் தொழிலாளிகளால் அத்தகைய உன்னதமான கட்டட வேலைகளைச் செய்து முடிப்பது ஒருபொழுதும் ஸாத்யமல்லவென்றும் அவர் கருதினர் நகரத்திற்கு மத்தியிலுள்ள ஓரிடத்தில் துறவறத்தை மேற்கொண்டு ஏகாந்த வாழ்க்கையில் களித்து இன்புற்ற தனது அருமைச் சகோதரன் மகேந்திரனின் வாஸத்திற்காக அசோக மன்னன் ஓர் பெரிய ஸ்துபத்தைக் கட்டுவித்திருந்ததாகப் பாஹியான் கூறுகிறர். இந்த ஸ்துபத்திற்குச் சமீபமாக 600 அல்லது 700 பிக்ஷுக்கள் ஒருங்கே வசிப்பதற்கு வசதி வாய்ந்த இரண்டு பௌத்த விஹாரங்களைப்பற்றியும் அவர் பிரஸ்தாபித்திருக்கிறர் இந்த பௌத்த விஹாரங்கள் யாவும் அக்காலத்தில் கல்விக் களஞ்சியங்களாக—நாமகள் உறையும் நல்லிடங்களாக—விளங்கிவந்தன. தேசத்தின் நனா பாகங்களினின்றும் வித்தையில் நாட்டமுள்ள மாணக்கர்கள் பலர் இந்தப் பௌத்த விஹாரங்களில் வசித்துத் தமது வித்யாப்யாஸத்தைப் பூர்த்தி செய்துகொள்வது வழக்கம்.

அசோகனின் தானம்

அன்றியும்பாஹியான் தான் நேரில் கண்ட ஊர்வலங்களைப் பற்றியும் வருணித்திருக்கிறர். சுமார் நான்கு அல்லது ஐந்தடுக்கு மாடிகளின் உயரமுள்ள பெரிய பெரிய இரதங்களில் புத்த பகவானின் திருவுருவத்தை வைத்து, நகரமெங்கும் மக்கள் உற்சாகத்துடன் நடத்திச்சென்ற அற்புதக் காட்சியானது அவரது உள்ளத்தைக் கவர்ந்தது. ஏழைகளுக்கும், திக்கற்ற அநாதைகளுக்கும், அங்கஹீனர்களுக்கும் பிணியாளர்களுக்கும் சத்திரங்களும், விடுதிகளும், வைத்தியசாலைகளும் கட்டப்பட்டிருந்ததாக அவருடைய

(25-ம் பக்கம் பார்க்க)


## வருஷப்பலன்

மாதவாரி ஒருவருஷப்பலன் எழுத ரூ. 3. வாராந்திர பலன் எழுத ரூ. 10. தர்ம நியாயமான 5 கேள்விகளுக்கு பதில் எழுத ரூ. 1. வி. பி. செலவு 5 அணு. ஜாதக விவரம் அல்லது கடிதம் எழுதும் போதுள்ள நேரம்; சுமார் வயது, பெயர் தேவை

**ஹனுமான் ஜோதிஷ ஆச்ரமம்,**
திருத்தணி, S. இந்தியா.

## கவலைவேண்டாம்.

உங்கள் வியாதி எதுவாயிருந்தாலும் சரி; உண்மையான நல்லமருந்து வேண்டுமானல், அடியில்கண்ட நமக்குத் தெரியப்படுத்தினல் நிவர்த்திக்கத் தக்க வழிகளைத் தெரிவிப்போம்.

**மலையப்பசாமி,**
வைத்தியசாலை,
பழநீ, S I |





## சூதகக் கோளாறுகள்

ஸ்திரீகளில் பலர் சூதக காலத்தில் அபார வலியாலும், அசாதிய இரத்தப் போக்காலும் அவஸ்தைப்படுகின்றனர். கல்ஸாணு மாத்திரைகளை உட்கொண்டு இவைகளைச் சுலபமாக நிவர்த்திக்கலாம். இவை வலியையும், இரத்தப் போக்கையும் தடுக்கின்றன.

முன்பு கஷ்டப்பட்ட ஒரு ஸ்திரீ இப்பொழுது எழுதுவதாவது

"இப்பொழுது நான் கல்ஸாணு மாத்திரைகளைச் சாப்பிடுவதால் சிறிதும் வலியோ அல்லது அசௌகரியமோ இல்லாமல் வாழ்வின் சகஜமான காரியங்களைச் சந்துஷ்டியுடன் செய்து வருகிறேன்."

இன்னெரு ஸ்திரீ எழுதுவதாவது:

"கல்ஸாணு சாப்பிட ஆரம்பத்திலிருந்து எனக்குக் கொஞ்சமும் கவலையில்லை. நல்ல ஆரோக்யத்தை அனுபவிக்கிறேன். முன்பெல்லாம் பித்த மயக்கம் உண்டு ஆனல் இப்பொழுது ஒரு கோளாறுமில்லை இனி நான் கல்ஸாணு இல்லாமலிருக்க மாட்டேன்."

கல்ஸாணு சாப்பிட்டால் நீங்களும் ஆரோக்யம் பெறுவீர்கள். பிரசித்தி வாய்ந்த இந்த உலோக உணவில் ஒரு பாக்கேஜ் வாங்கி ஊக்கம் மிகுந்த கவலையற்ற ஆரோக்கியத்தை அனுபவியுங்கள்!

# Kalzana

மேலான ஆரோக்கியத்திற்கான உலோக உணவு
எல்லா பிரபல மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.
கல்ஸாணு கைமிடாமல் தயாரிக்கப்படுவது.



ஸ்தாபிதம் 1910

5 வருஷ உத்திரவாதம். 800 ரூபா மதிப்புள்ளது.

**22 காரட் ரோல்டுகோல்டு தங்க ஒட்டியாணங்கள்**



விலைகள் சரசமுள்ளதாயும் 300 கெஜ்லைஜகள் கட்டியதும் அசல் சவரன் பொன்னுக்கு ஒப்பானதாக எமது கம்பனியில் கைதேர்ந்த வேலைக்காரர்களைக்கொண்டு தங்கத்தினல் செய்த ஒட்டியாணத்திற்கும் இதற்கும் யாதொரு வித்தியாசப்படாமல் தயாரித்துள்ளோம். இதை சிறுவர் முதல் பெரியோர் வரையிலும் அணியக்கூடிய ஜாலர் ஒட்டியாணம் 1-க்கு ரூ 6-8-0; டை சின்னது 1-க்கு ரூ. 5-8-0; சாதா கெஜ்ஜை வங்கி ஒட்டியாணம் முதல் நெம்பர் 1-க்கு ரூ 5-8-0; 2-ம் நெம்பர் 1-க்கு ரூ. 3 8-0; 3-ம் நெம்பர் 1-க்கு ரூ. 2-8-0. கைவளையல் பெரிய ஜதை 1-க்கு ரூ 2-8-0; சின்ன ஜதை 1-க்கு ரூ 1-8-0; கழுத்து செயின் சரம் 1-க்கு ரூ. 3-8-0. வி. பி. தபால் சார்ஜ்வேறு.

கே நாதமுனி அண்டு சன்ஸ், 168, சைனபஜார்ரோடு, மதராஸ்.



''ஸூபர் டமில் டாக்கீஸ்'' கம்பெனியின் ''வீர அபிமன்யு'' என்ற தமிழ் பேசும் படத்திலிருந்து இரு காட்சிகள். ஸ்ரீமதி டி. பி. ராஜலக்ஷ்மி முக்கிய நடிகர்.



# காங்கிரஸ் மகாசபைக் கூட்ட

மஹாராஷ்டிரத்திலுள்ள பெய்ஸ்பூரில் அடுத்த காங்கிரஸ் மகாசபைக் கூட்டம் நடைபெறும். இதற்காகச் சென்ற மூன்றுமாதங்களாகத் தீவிர ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. பெய்ஸ்பூரிலும் அதைச்சுற்றியுள்ள கிராமங்களிலுமுள்ள கிராமவாஸிகளிடையே பெருத்த உற்சாகம் நிலவிவருகிறது. இந்த மகாசபைக்கூட்டத்தை வெற்றிகரமாக நடத்திவைக்க அவர்கள் பெருத்த ஆவல் கொண்டிருக்கின்றனர். கிராமங்களிலேயே 300 பேருக்கு மலாக உபசாரணைக்கமிட்டி மெம்பர்களாகச் சேர்ந்திருக்கின்றனர். காங்கிரஸ் நகர் கட்டப்படுவதற்கு வேண்டிய திட்டங்கள் இப்பொழுது தயாராய் விட்டன. அதற்கு ரூ. 1,65,000 செலவாகுமென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.



காங்கிரஸ் நகர் நிர்மாணிக்கப்படும் இடம்.



கிணற்று ஜலத்தைப் பரீக்ஷை செய்து பார்க்கும் காட்சி.



காங்கிரஸ் நகரத்தின் பிளானை உபச
செய்துகொண்

# இந்திய தேயிலை
## பானத்தால்



# நிலையான திடத்தைப் பெறு

இந்திய தேயிலைப் பானம் கோடையில் களைப்பை நீக்கி குளிர்ச்சியைக் கொடுக்கிறது. குளிர் காலத்திலோ வேண்டுமளவு உஷ்ணத்தைக் கொடுத்து சந்தோஷத்தையும் தருகிறது. அதிகாலையில் சாப்பிட்டால் சோம்பலை நீக்கும். அந்தியில் அருந்தினால் சுகத்தைக் கொடுக்கும். வழக்கமாய் இந்திய தேயிலைப் பானம்செய்து எப்பொழுதும் ஒரே நிலைமையில் இருக்கக் கூடிய ஆரோக்கியத்தையும் சந்தோஷத்தையு மடையுங்கள்.

இன்றையிலிருந்தே டீ அருந்தும் பழக்கத்தை கைக்கொண்டு அதன் பலன்களை அனுபவியுங்கள்.



### தேத் தண்ணீர் செய்யு முறை

சுத்தமான தண்ணீரை கொதிக்க வை. ஈரமில்லாத பாத்திரமாக ஒன்று எடுத்து ஒவ்வொருவருக்கும் ஒரு டீ ஸ்பூன் வீதமும் அதிகமாக ஒரு ஸ்பூனும் நல்ல இந்தியதேயிலையை போட்டுகொதிக்கும் ஜலத்தை விடு. 5 நிமிஷம் கழித்துவடிக் கட்டி பாலையும் சர்க்கரையையும் சேர்த்துக் கொள்ளவும்.

**இந்தியாவின் சந்தோஷமும், பெருமையும் — இந்திய தேயிலை**

IK. 41

Regd. No. 2514.

# ஸ்ரீமத்

# பகவத்கீதை

(இரண்டாம் பதிப்பு)

அத்வைத, விசிஷ்டாத்வைத, த்வைத
பாஷ்யச் சுருக்கத்துடனும்
நாகர லிபியில் மூலமும் தமிழ் அர்த்தமும்

இதுவரையில் வெளியிடாத பல ரஹஸ்யங்கள் அடங்கிய முன்னுரையுடனும், ஒவ்வொரு அத்யாயத்தின் முடிவில் மூன்று மத பாஷ்யகாரர்களின் தாத்பரிய சுருக்கமும், விஷய அட்டவணையும் அடங்கியுள்ளது.

சென்னை ஸம்ஸ்கிருத காலேஜ் உபாத்யாயரா யிருந்த கீர்த்தனாசார்ய ஸி. ஆர். ஸ்ரீநிவாஸய்யங்கார், பி. ஏ. அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது.

விலை ரூபா 3.

மானேஜர், சுதேசமித்திரன் புத்தகசாலை,
சென்னை.

Printed and Publ[illegible] by T. S. Visvanatha Iyer B. A. at the Swadesamitran Power Press, Mount Road, Madras. Editor C. F. Srinivasan B. A.

கிணற்று ஜலத்தைப் பரீக்ஷை செய்து பார்க்கும் [illegible]